
நவம்பர்-84
ஆன்மிகத் திங்களிதழ்
ரூ. 1-50
சாரதா

# Sensation



*"The enchanting fragrance of Sensation enables me to attain sublime heights and maintain classical excellence in my music".*

— *Ustad Amjad Ali Khan*




**From the makers of Sugandha Shringar & Shirin Agarbathis**

ARAVINDA PARIMALA WORKS,
MYSORE 570 004

**Sole Selling Agents for South East Asia.**

M/s. BHAVANI STORES PTE LTD.,
1, Shenton Way, 19-02,
Robina House,
SINGAPORE - 0106.

Telephone No : 2214905/2214200/
2214209 (Off.) 3373370 (Branch)
289227 (Kuala Lumpur)

EPIC

பட்டை 38 ஊசி 2

நவம்பர் — 1984

# அம்மா

அம்மா என்ற இந்த வார்த்தை, ரொம்ப புனிதமானது, எழுபது கோடி மக்கள் வாழும் பாரதத்தின் அம்மாவாக, அம்மா என்ற புனிதப் பெயருக்கு இலக்கணமாக வாழ்ந்து காட்டியவர் அன்னை இந்திரா அவர்கள்.

பிறப்பு, இறப்பு என்று ஆண்டவனால் நியமிக்கப்பட்ட நியதிப்படி இன்று அம்மா அவர்கள் நம்மிடம் இல்லை.

மனித சமுதாயத்திற்கே தலைகுனிவு ஏற்படும் வகையில் குறிப்பாக சீக்கிய மத வெறியர்களால், ஒரு சில தீய சக்திகளால் தூண்டப்பட்டு இரு கொடியவர்களால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுவிட்டார் நம் அம்மா அவர்கள்

ஒருசில வன்முறையாளர்கள் செய்த, கொடிய பாவங்களுக்காக அந்தச் சமூகத்தையே பழிப்பது பாவமல்லவா?,

மதச்சார்பற்ற நம் நாடு, ஒற்றுமையே தன் வாழ்நாளின் குறிக்கோள், உலக சமாதானமே மனித குல வாழ்க்கைக்கு நல்வழி என்ற உயர்ந்த ஒருமைப்பாட்டை வளர்த்துவந்த அம்மா அவர்களுக்கு நாம் செய்யவேண்டியது என்னவெனில், அம்மா அவர்கள் விட்டுச் சென்ற சீரிய பண்பாட்டை பின்பற்ற வேண்டியதுதான் பாரத மக்களின் கடமையாகும்.

அம்மா அவர்களின் விருப்பப்படி தேர்தல் தேதியும் தெளிவாக்கப் பட்டுவிட்டது.

"இந்திரா ஹடோ" இந்திரா வேண்டாம் என்று சொன்னவர்கள்கூட தற்பொழுது மனமார வருத்தப்பட்டுள்ளனர்.

அந்த இடத்தை பூர்த்தி செய்ய இப்பொழுது யாரும் இல்லை, இனியும் யாராவது பிறப்பார்களா? என்பதும் சந்தேகமே!

பாரத மக்களிடம்தான் இப்பொழுது பெரும் பொறுப்பு விழுந்துள்ளது.

புதிய பிரதமர் அம்மா அவர்களின் அன்புச் செல்வன் ராஜீவ் காந்தி அவர்களிடம்தான், நெருக்கடியான பொறுப்பை விட்டுப் பார்க்கலாமே என்று மக்களின் மனநிலை உள்ளதாக பெருந்தலைவர்கள்கூட எண்ணலாமல்லவா?

தேர்தல் போரில் சர்வ கட்சிகளும் அம்மாவின் கட்சியை எதிர்க்கலாம். ஆனால், அவர்கள் என்ன செய்தார்கள்? அவர்களால் என்ன செய்ய முடியும்? என்பதையும் மக்கள் சிந்திக்கவேண்டும்

இந்த தேர்தல் யுத்தத்தில் எல்லா கட்சிகளும் தங்கள் கட்சியின் கொள்கையை எடுத்துச்சொல்லலாம், ஆனால் யாரும் தனிப்பட்ட முறையில் கீழ்த்தரமான ஆபாசமான முறையில் செயல்படக்கூடாது.

நாட்டின் இந்த பலஹீனமான வேளையில் மக்களுக்கும், கட்சித் தலைவர்களுக்கும் அரசியல் ஆரோக்கியம் தவறாமல் நல்ல புத்தியை அளித்து, ஆண்டவனே! நீதான் பாரத மக்களை காப்பாற்றவேண்டும்.



காஞ்சி காமகோடி பரமாச்சார்யாள் அருளியது

# மௌனம் கலகம் நாஸ்தி

மற்றெந்த அவயத்தையும்விட வாய்க்குத்தான் வேலை அதிகம். ருசி பார்ப்பது, அதாவது சாப்பிடுவது, பேசுவது என்று அதற்கு இரண்டு காரியங்கள் இருப்பதாலேயே இரண்டையும் பாதியாகக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்பதுதான் பரமேச்வரன் அபிப்ராயமாக இருக்கவேண்டும்.

வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி என்கிறபோது சாப்பாடு, பேச்சு இரண்டையும் கட்டுப்படுத்துவதுதான் தாத்பர்யம். ஆனால் நேர்மாறாக செய்கிறோம். இரண்டு வேலையும் தேவைக்கு அதிகமாகக் கொடுக்கிறோம்.

அமித போஜனமாக ஓயாமல் ஏதாவது சாப்பாடு, நொறுக்குத் தீனி, பானம் என்று உள்ளே தள்ளிகொண்டேயிருக்கிறோம், எப்போது பார்த்தாலும் வெட்டியாக எதையாவது பேசிக்கொண்டேயிருக்கிறோம்.

இந்த இரண்டையும் ரொம்பக் குறைத்துக்கொள்ள வேண்டும். கண்டதைத் தின்று கெடுதலை வரவழைத்துக்கொள்ளாதே. ஸாத்வீக ஆகாரம் மட்டும் மிகமாகச் சாப்பிடு. அதுவும்கூட இல்லாமல் அவ்வப்போது உபவாசமிரு என்கிறது சாஸ்திரம்.

இதேபோல வாயில் வந்ததைப் பேசிக்கொண்டே போகாதே. 'அதனால்பிறத்தியானையும் கெடுக்காதே, பகவத் விஷயமாகப் பேசு. பாடு, பஜனைபண்ணு என்று சொல்லிவிட்டு உபவாசத்தில் ஸாத்விகாஹாரம் கூடப்பண்ணப்படாது என்று வைத்திருக்கிற மாதிரியே, பகவத் பரமான பேச்சும் கீர்த்தனமும் இல்லாமல் அவ்வப்போது வாயை மூடிக் கொண்டு மௌனமாக இரு என்று பெரியோர்கள் உபதேசித்திருக்கிறார்கள்.

இப்போது எங்கே பார்த்தாலும் பேச்சுத்தான்! பேச்சாளர்கள் என்றே பலர் ஒலிபெருக்கி வைத்து மீட்டிங்குகள், கல்யாணம், கார்த்திகை வேறே விழாக்கள் என்று எங்கே பார்த்தாலும் லௌட் ஸ்பீக்கர் வைத்து சத்தம். இந்த அவஸ்தையைப் பார்க்கும்போதுமௌனம் அதை அனுஷ்டிக்கிறவனுக்கு செய்கிற நல்லது ஒருபுறம் இருக்கட்டும். இது சமூகத்திற்கு செய்கிற தொண்டு என்று தோன்றுகிறது.

இத்தனை வாத பிரதிவாதச் சண்டையும் பேச்சால்தானே!மௌனம் அனுஷ்டித்தால் அன்றைக்காவது சண்டை சச்சரவு இராது!மௌனம் கலஹ நாஸ்தி, இதுவும் ஒரு சமூக சேவைதான்.

**அட்டைப் படம்:**

# திருவிடைமருதூர்

சோழநாட்டில் காவிரியின் தென்பால் தேவாரம் பெற்றுவிளங்கும் மருதாவனம் என்று போற்றிவரும் தலமே திருவிடைமருதூர் என்னும் புனிதத்தலம். இத்திருக்கோவிலின் தலவிருட்சம் மருதமரம். இதற்கு மத்தியார்ச்சுடம் என்றும் வடமொழியில் சொல்லப்படுகிறது

இத்தலத்தில் கயிலைமலையேமருதமரமாய் சிவபெருமானுக்கும் உமாதேவியாருக்கும் வீற்றிருந்து மனம் மகிழ நிழலைத் தந்து நின்றதாக தல புராணம் சொல்லுகிறது.

சோதிர்மய மகாலிங்கம் எனப் போற்றப்பட்டு வருகிறது. அம்பிகையின் திருநாமம் பெருநல்மாமுலையம்மையார். வடமொழியில் பிருகத் சுந்தர குசலாம்பிகை.

அப்பர், சுந்தரர், ஞானசம்பந்தர் இவர்களால் பாடல்பெற்ற புனித தலமாகும். அருணகிரிநாதர் அவர்களாலும் நான்கு திருப்புகழில் பாடல்பெற்ற தலமாகும்.

சுவாமிக்கு மருதவனேசர், ஸ்ரீமகாலிங்கமூர்த்தி, ஏகநாதர் என்றும் திருநாமங்களால் போற்றப்பட்டு வருகிறது.

திருக்கோவிலினுள்ளே பல லிங்க வடிவங்கள் உள்ளன.

கிழக்கு கோபுர வாயிலில் பட்டினத்தடிகளும் மேலைக் கோபுர வாயிலில் ராஜாபத்திரகிரியாரும் எழுந்தருளியுள்ளனர். கிழக்கு பெரிய கோபுரத்தை அடுத்து உள்ளேயிருக்கும் கோபுரத் தென் வாயிலில்தான் பிரமகத்தி வடிவம் உள்ளது.

மகாலிங்கேசுவரரை தரிசித்த பின்பு கொடுமுடி கோபுரத்தின் வழியேதான் தாயாரை தரிசிக்கச் செல்லவேண்டும்.

இங்கு பல புண்ணிய தீர்த்தங்கள் உள்ளன. காவிரி (பூசத் தீர்த்தம்), காருணியாமிருத தீர்த்தம், கனகத் தீர்த்தம் (காக தீர்த்தம்) இவைகள் மிகவும்சிறந்தவைகளாக கொண்டாடப்படுகின்றன.

தசரத ராமனுல் உருவாக்கப்பட்ட பாண தீர்த்தம் பிரசித்தி பெற்றது. இங்கு பிதுர்களுக்கு தர்ப்பணம் செய்வது கங்கையில் செய்த பலனை தருகிறதென்றும் சொல்லப்படுகிறது.

அசுவமேத பிராகாரம், கொடுமுடி பிராகாரம், பிரணவ பிராகாரம் இவைகள் மிகவும் சிறந்தவை.

வசிட்டர், நாரதர், சூதர் காபாலி, விபண்டர், உரோமசர், மார்க்கண்டேயர், கபிலர், மலையமுருகி, பரத்துவாசர், துர்வாசர், வியாகரபாதர், பதஞ்சலி போன்ற மாமுனிகளெல்லாம் இங்குவந்து ஈசனைப்போற்றிப் பாடியுள்ளனர்.

இப்புனித தலத்து அம்மையும் ஐயனும்தான் இவ்விதம் அட்டைப் படத்தில் அமர்ந்து அருள்பாலிக்கின்றனர். கார்த்திகை மாதம் அல்லவா? ஈசனுக்குகந்த புனித மாதம்.

அம்மை-அய்யனை எனது அன்பு நேயர்கள் தரிசித்து எல்லா நன்மைகளையும் பெற்று நல்வாழ்வு பெற மருதூர் 'அப்பன்-அம்மை இருவரையும் வேண்டுகிறேன்.

—ஆன்மீகன்

# பட்டர்பிரான் பாட்டமுதம்

— இரா. சுராஜ் —

பரமனுக்குப் பல்லாண்டு பாடிய பட்டர்பிரான் பெரியாழ்வாராகுர் அவரது திருப்பல்லாண்டு, திருமால் கோயில்களிலும், இல்லங்களிலும், திவ்யப்ரபந்தத்துள் முதன்மை பெற்று வேதத்துக்கு 'ஓம்' என்பதுபோல உள்ளத்துக்கெல்லாம் கருக்காய் மங்கலமொழியாய், முதலிலும் முடிவிலும் ஓதப்படும் பெருமை பெற்றது.

இறைத்தொண்டு என்பது வெறும் சோற்றுப்பட்டாளத்தைச் சேர்ப்பதல்ல. வாழாட்பட்டு நின்றவர்கள் உளமாரக் கூடி இருந்து செய்வது.

கூழாட்பட்டு நின்றீர்களை எங்கள் குழுவினில் புகுதலொட்டோம், என்று சோற்றுப்பேறிகளை ஒதுக்குகிறார் ஆழ்வார்

நாராயண நாமத்தை ஒருவருக்கும் தெரியாமல் இரகசியமாய் இருந்து, தான் மட்டும் வாழ அவர் ஜபம் செய்யச் சொல்லவில்லை. நாடும் நகரமும் நன்கறிய நமோ நாராயணாயவென்று பாடும் மனமுடைப் பத்தருளிர் வந்து பல்லாண்டு கூறுமினே' சம்பிரதாய வைணவத்தைக் கடந்து, சமுதாய வைணவம், அமைய வழிவகுக்கிறது பெரியாழ்வார் பாடல்

எம்பெருமானே! உன்னை நாங்கள் வழிபடுவது இன்று நேற்று துவங்கியதல்ல. எங்கள் தந்தையார், பாட்டனார், முப்பாட்டனார் இப்படி வழி வழியாக, காலம் காலமாக இந்த பக்திமதம் தழைத்துவருகிறது.

எந்தை தந்தை தந்தை தந்தைதம்மூத்தப்பன், எழ்படி கால தொடங்கி
வந்து வழிவழியாட் செய்கின்றோம்—திருவோணத் திருவிழாவில்
அந்தியம் போதில் அரியுருவாகி அரியை அழித்தவனைப்
பந்தனை தீரப்பல்லாண்டு பல்லாயிரத் தாண்டென்று பாடுதுமே

பக்தி செய்தால் பயன் உண்டா? பெருமான் சோறு போடுவாரா? இது என்ன பைத்தியக்காரத்தனம்? என்று கேட்பவர்கள், இன்று மட்டுமல்ல; அன்றும் உண்டு. அதற்கு ஆழ்வார் விடை கூறுகிறார்.

சாப்பாடா...வெறும் சாப்பாடல்ல. நெய்யிடை நல்லதோர் சோறு அவனருளால் கிடைக்கும். சாப்பாடு மட்டுமா? வெற்றிலைப் பாக்கும் உண்டு. கைவ நடக்காய், கழுத்துக்கு பூணும் மாலைகள் உண்டு. காதுக்குக் குண்டலம் உண்டு, மெய்யில் பூசநறும்சாந்தும் உண்டு ஆம் சத்தன, தாம்பூலங்களுடன் அறுசுவை உணவுண்டு. எம்பெருமானை நினைந்து உருக்கும் கூறையை அவனுக்குச் சார்த்தி அதை நாங்கள் அணிவோம். அவன் சூடிக்களைந்த திருத்துழாய் மாலைகளை எங்கள் கழுத்தில் அணிவோம்.

எம்பெருமானே! என்றையத் தினம் நாங்கள் உன்னடியார்களென்று எங்களை உன்னிடம் ஒப்புவித்துவிட்டோமே அன்றே நாங்கள் மட்டுமல்ல; எங்கள் அடிக்குடிலும்கூட வீடுபெற்றுவிட்டது.

'பல்லாண்டு' என்றே பெயர் பெற்ற இந்தப் பிரபந்தத்தை உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் ஓதுபவர்கள் பல ஆண்டுகள் எல்லா நலமும் பெற்று, பகவத் பாகவத பக்தர்களாய் வாழ்வார்கள் என்றி பலச்ருதியுடன் நிறைகிறது பதிகம்.

பல்லாண் டென்று பவித்திரனைப் பரமேட்டியைச் சார்ங்க மென்னும்
வில்லாண்டான் தன்னை வில்லிப்புத்தூர் விட்டுச்சித்தன் விரும்பிய சொல்
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் நமோ நாராயணாய வென்று
பல்லாண்டும் பரமாத்மனைச் சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே

பெரியாழ்வார் கண்ணனிடம் அளவிலாத ஈடுபாடுடையவர். தம்மையே யசோதையாக எண்ணிக் கண்ணனுக்கு அவர் பிள்ளைத் தமிழ்பாடி, பிள்ளைத்தமிழ் என்ற பிரபந்த வகைக்கே வழிகாட்டியாக விளங்கும் பேறு பெற்றவர்.

எங்கோ கோகுலத்தில் கண்ணன் பிறந்ததை கோபாலர்கள் கொண்டாடினார்களென்றால் ஆழ்வார் தமிழகத்தில் பாண்டிநாட்டுத் திருக்கோட்டியூரிலே கண்ணன் பிறந்ததாக மகிழ்ந்து பாடுகிறார்.

வண்ணமாடங்கள் சூழ்திருக் கோட்டியூர்
கண்ணன் கேசவன் நம்பி பிறந்தினில்
எண்ணெய் சுண்ணம் எதிரெதிர் தூவிடக்
கண்ணன் முற்றம் கலந்தளராயிற்றே.

இந்தக் கண்ணக் குழந்தை பிறந்து வளர்ந்து எத்தனை சாகசமான செயல்களைச் செய்தது. மண்ணைத் தின்றான் கண்ணன். தாய் யசோதை வாயைத் திறந்துகாட்டச் சொன்னாள். அந்த வாய்க்குள்ளே இந்த வையகமே தெரிந்தது என்பார்கள். ஆழ்வார் பார்வையில் இந்த நிகழ்ச்சி புதுமெருகு பெறுகிறது. இயற்கையாகவும் இருக்கிறது.

சிறு குழந்தைகளுக்கு எண்ணெய்த் தேய்த்துக் குளிப்பாட்டுவது அருங்கலை. வயதான அத்தை, பாட்டிமார்களுக்குத்தான் அது தெரியும் அதிகச் சூடும், குளிர்ச்சியுமின்றி பைய வாட்டி, தக்கச் சூட்டுடன் வெந்நீர் அமைய குழந்தையை நீட்டிய கால்களில் படுக்க வைத்து, எண்ணெய் தேய்த்து, இளமஞ்சளை நறுக்கி அதனால் குழந்தைக்கு நாக்கு வழித்துவிடுவார்கள், பேசும் பேச்சு தெளிவாக அமையவேண்டுமென்று.

அப்படி, கண்ணனை நீராட்டி, பசுமஞ்சளால் நாக்குவழிக்கும்போது அவன் வாய்திறந்தான்! என்ன ஆச்சர்யம்! ஏழு உலகங்களையுமே

அவன் வாய்க்குள் கண்டாள் யசோதை! அவன் உண்ட உலகங்கள் தானே அவை!

வாயில் வையகத்தைக் கண்ட ஆயர்மாதர்கள் இவன் ஆயர்புத்திரன் அல்ல! இவன் அரும் தெய்வம்; மாயன் என்று மகிழ்ந்தார்கள்!

இந்நிகழ்ச்சியைப் படம்பிடித்துக் காட்டும் பெரியாழ்வாரின் அற்புதமான பாடல்கள் இவை!

கையும் காலும் நிமிர்த்து கடாரநீர்
பையவாட்டிப் பசுஞ்சிறு மஞ்சளால்
ஐயநாவழித்தாளுக்கு அங்காந்திட
வையமேழும் கண்டாள் பிள்ளைவாயுளே!

வாயும் வையகம்கண்ட மடநல்லார்
ஆயபுத்திரனல்லன் அருந்தெய்வம்
பாயச் சீருடைப் பண்புடைப் பாலகன்
மாய னென்று மகிழ்ந்தனர் மாதரே.

---

# மன்னிப்பு

ஸ்ரீ சுவாமி சின்மயானந்தா

*மன்னித்தல்*

அதில்தான் இருக்கிறது, ஓர் ஆன்மீக சாத்வீகனது வாழ்க்கையிலுள்ள ரகசிய அழகு.

மன்னிக்காவிடில், கோபதாபங்களுக்குள்ளேயே கனத்துக்கொண்டிருக்கும். இதயம் லேசாக இருந்தால்தானே நம்மைநாமே உயர்த்திக்கொண்டு உயர்ந்த சிகரங்களை எட்டிப் பிடிக்கமுடியும்?

பகைவர்களைத் தாராளமாக மன்னித்துவிடுங்கள். சொல்லப்போனால் அந்த அளவுக்கு வேறு எதனாலும் எரிச்சல் மூட்டமுடியாது.

அவர்களைத் திரும்பத் தாக்குவீர்கள். மறுபடியும் உதைத்து உங்கள் விலா எலும்புகளை முறிக்கலாம் என்று திட்டம்போட்டு எதிர்பார்த்திருக்கிறார்கள். நீங்கள் அவர்களை மன்னித்ததும் உங்களை வதைப் புடைப்பதற்கு அவர்கள் வகுத்த திட்டமெல்லாம் அர்த்தமற்றுப் போய்விடுகின்றன.

முழுமனத்துடன், அன்போடு மன்னிக்கப்பட்ட விரோதிகள் உண்மையான நண்பர்கள் ஆகியிருக்கிறார்கள்.

ஏதோ ஞாபகமாகத் துளசி இலைகளைக் கசக்கும்போது உண்டாகிறதே மணம், அதுதான் மன்னிப்பு.

வெட்டும் கோடரிக்குக் கூடச் சந்தனமரம் மணம் ஊட்டுகிறது.

கல்லில் இட்டுத் தேய்க்கத் தேய்க்க அதன் வாசனை பரவுகிறது

பொசுக்குங்கள், சுற்று வட்டாரத்திற்கெல்லாம் அதன் பெருமை மிதக்கும். இதுதான் வாழ்க்கையில் மன்னிப்பின் வசீகரம்.

தொகுப்பு : மூர்த்தி -சென்னை

# வியாச பாகவதம்



அமரர் கவிசேரி சுப்ரமண்ய சாஸ்திரிகள்

## 103

சுகர் மேலும் சொல்லலானார்:

ஹே ராஜன்! தனது சகாக்களாகிய சிசுபாலன், சால்வன், துர்புத்தியுள்ள பௌண்ட்ரகன் ஆகியோர் இறந்த பின்னும் தன்னந்தனியே பாதசாரியாக தன் சகாக்களின் மனத்திருப்தி கொடுக்க எண்ணி ஸ்ரீகிருஷ்ணரை நோக்கி தந்தவக்கிரன் வெகுகோபத்துடன் கதையை கையில் ஏந்தி ஓடிவந்தான்.

அவனது பெரும் உடலை ஆட்டியாடியவனாக அசைந்துவந்தபோது பூமியே அதிர்ந்தது. தந்தவக்கிரன் வருவதைக் கண்ட ஸ்ரீகிருஷ்ணன் தன் தேரிலிருந்து கீழே இறங்கி தன் கதை கொண்டு ஆரவாரித்துக்கொண்டு வரும் கடல் அலையை கரை தடுப்பது போன்று தடுத்து நிறுத்தினார்.

கருச தேசாதிபதியான தந்தவக்கிரன் கிருஷ்ணரை நோக்கி, அதிர்ஷ்டவசத்தால் நீ என் எதிரிலேயே சிக்கினாய். என் மாமன் மகனான போதிலும் நீ என் மித்திரர்களை அழித்தாய் மேலும் எங்களையும் கொல்ல முற்படுகிறாய். அதனால் கிருஷ்ணா, நான் வஜ்ரம் போன்ற என் கதையினால் உன்னை கொல்லுகிறேன் என்று கூறி கதையை மேலே தூக்கினான்.

ஏ கிருஷ்ணா! சரீரத்தில் வியாதியை நிவர்த்திக்க சரீரத்தையே வருத்துவது போல் என் உறவினனான நீ உண்மையில் சத்துருவே ஆகவே, உன்னைக் கொன்று என் சிநேகிதர்களுக்குப் பிரியமான காரியத்தைச் செய்கிறேன் என்றும் கூறினான். கண்டபடி பேசிக்கொண்டு வந்த தந்தவக்ரன் ஸ்ரீகிருஷ்ணரின் தலையில் தனது கதாயுதத்தினால் அடித்து ஆர்பரித்தான்.

யாதவ குல திலகனாகிய ஸ்ரீகிருஷ்ணர் அந்த அடியைப் பொறுத்துக்கொண்டு சிறிதும் அசையாது நின்றார். மேலும் அவர் தந்தவக்கிரனின் சொற்களால் மனவருத்தமுற்று தனது கதையால் அவனது மார்பில் அடித்தார். இந்த அடியில் தந்தவக்ரன் முகத்தில் ரத்தம் பீறிட, கால், கைகள் தலைமயிர் பரப்பிக்கொண்டு மரணமடைந்தவனாய் கீழே விழுந்தான். அவனிடமிருந்து ஒரு தேஜஸ் பகவானைச் சென்றடைந்தது.

தொகுப்பு : பி. எஸ். பரமேஸ்வரன், பி.ஏ.,பி.எல்., சென்னை.

தந்தவக்ரனின் சகோதரனாகிய விடூரதன் சகோதர சோகத்தினால் சத்ருவைக் கொல்ல கத்தி கேடயம் முதலிய ஏந்திவந்தான். அப்போது ஸ்ரீகிருஷ்ணர் தனது சக்ராயுதத்தை பிரயோகித்து அவனது கிரீடம் குண்டலங்களுடன் கூடிய அவனது தலையை வெட்டிக்கொன்றார். இந்தவிதமாக துஷ்டர்களை அழித்த பின் துவாரகையை அடைந்தார் பகவான். அப்போது புஷ்பமாரி பெய்தது.

முனிவரும் தேவரும் மற்றெல்லோரும் பகவானை துதித்து வரவேற்றார்கள். மூடர்களால்தான் யோகேச்வரனாக விளங்கிய பகவான் ஜயிக்கப்பட்டார் என்றும் ஜயித்தார் என்றும் நினைக்கத் தோன்றும். ஸ்ரீகிருஷ்ணருக்கேது ஜயம் தோல்வி என்பவை.

கௌரவரும் பாண்டவரும் யுத்தத்திற்கு கிளம்பிவிட்டனர் என்பதறிந்து பலராமன் இருபங்கிலும் தான் சாராதிருக்க எண்ணியவராய், துவாரகையிலிருந்து தீர்த்தயாத்திரை செய்வதாக வியாஜ்யமேற்று அங்கிருந்து கிளம்பி பிரபாஸ தீர்த்தத்தினை அடைந்தார். பிரபாஸ தீர்த்தத்தில் ஸ்நானம் முதலியன செய்து தேவ, ரிஷி, பித்ரு தர்ப்பணங்கள் செய்த பின் மேற்கே செல்லும் ஸரஸ்வதி நதிக்குச் சென்றார்.

மதூதகம், பிந்துஸரஸ், திருணகூபம், சுதர்சனம், பிரம்மதீர்த்தம், சக்ரதீர்த்தம், கிழக்கு நோக்கிப் பாயும் ஸரஸ்வதி நதி, யமுனைக் கரையிலுள்ள பல தீர்த்தங்கள், கங்கா நதிக்கரையிலுள்ள தீர்த்தங்கள் இவைகளில் நீராடி நைமிசம் என்னும் வனத்தை அடைந்தார்.

அங்கு மகரிஷிகள் ஸத்திரயாகம் ஒன்றினை செய்து கொண்டிருந்தனர். பலராமனைக் கண்டதும் அவரை வரவேற்று விதிப்படி பூஜித்து அவருடன் வந்தவர்களையும் உபசரித்து அவர்களுக்கும் மரியாதைகள் செய்தனர். அந்தத் திருக்கூட்டத்தில் வியாஸருடைய சிஷ்யரான ரோமஹர்ஷணர் இருந்தார்.

தாழ்ந்த குலத்தில் பிறந்த ரோமஹர்ஷணர் மகரிஷிகள் மத்தியில் உயர்ந்த ஸ்தானத்தில் அமர்ந்திருந்ததோடு, பலராமரைக் கண்டும் காணாதது போலிருந்தது பலராமருக்கு கோபமூட்டியது

வியாஸ பகவானிடம் இதிகாஸ, புராணங்கள், தர்மசாஸ்திரங்களை கற்றறிந்த இவன் வணக்கமற்று விளங்குவது அவருக்கு வருத்தத்தை அளித்ததுடன், விநயமற்ற வித்வான் நற்குணத்திற்குப் பாத்திரமாகான்; வேடதாரிகள் பாபிகள்; ஆகவே இவனைக்கொல்வதுமேல் எனக் கருதினார். துஷ்டர்களைச் சிட்சிப்பதற்கு பூமியில் அவதரித்தவரான பலராமர் ரோமஹர்ஷணரை தமது கையிலிருக்கும் தர்ப்பை நுனியால் அடித்தார்.

ரோமஹர்ஷணரைக் கொன்றது கண்ட மகரிஷிகள் மிகவும் வருந்தினர். மேலும் நாங்கள் பிரும்மாசனம் கொடுத்திருந்தவரை தாங்கள் கொல்வது தவறு எனக் கூறினர். நீர் யோகேஸ்வரர்; உம்மை வேத தர்மங்கள் கட்டுப்படுத்தாது. ஆயினும் மற்ற ஜனங்கள் தர்மத்தை அனுஷ்டிக்கவேண்டியிருப்பதால் நீர் பிராம்மணனைக் கொன்றதற்காக பிராயசித்தம் செய்யவும் என வேண்டினர் மகரிஷிகள்.

பலராமரும் அவர்களுக்கு புராணம் சொல்ல ரோமஹர்ஷணரின் புத்திரரான உக்கிரசிரவஸை நியமித்து யாகத்திற்கு பங்கம் ஏற்படாது தடுத்து, மகரிஷிகள் கூறிய

படி பிராயசித்தத்தை ஏற்க முற்பட்டார்.

மேலும் மகரிஷிகள் இல்வலன் என்ற அசுரனின் புத்திரனுன் பல்வலன் என்ற அசுரனைக் கொல்ல வேண்டினர். பல்வலன் யாகத்திற்கு பல விக்னங்கள் செய்துவந்தான்.

பல்வலன் என்பவன் யாகசாலையில் ரக்தம், மாமிசம், கள், அமேத்யம் முதலியவற்றைக் கொண்டு வந்து போட்டான் இதனுல் யாகத்திற்கு இடையூறுகள் உண்டாயிற்று மணல் குவியல்களை மாரியாக பெய்வித்தான் நான்கு பக்கங்களிலும் துர்வாசனை வீசியது அந்த அசுரன் சூலாயுதத்தை அணிந்திருந்தான். அவனது சரீரம் கறுத்து பருமனுடன் விளங்கியது ஊசிகள் போன்ற தலைமுடியுடையவன்; சிங்கப்பற்கள் கொண்டவன் அவன். இதனைக் கண்ட பலராமன் தமது முசலத்தையும் கலப்பையையும் ஏற்று, அந்த அசுரனை ஆகாயத்திலிருந்து தமது கலப்பை நுனிகளை கொண்டு இழுத்து முசலத்தால் தலையில் அடித்துக்கொன்றுர்.

பலராமரால் அடித்துக் கொல்லப்பட்ட பல்வலன் மலைபோல் வீழ்ந்தான். மகரிஷிகள் சந்தோஷமடைந்து பலராமனை தோத்திரம் செய்து 'வைஜயந்திமாலையையும் உயர்ந்த வஸ்திரங்களையும் அளித்து உபசரித்தனர்

மேலும் அவர்கள் பிரம்மசாபம் போக ஒரு வருடக் காலம் பரதபூமி முழுவதும் பிரதட்சிணமாக சஞ்சாரம் செய்து தீர்த்தங்களில் ஸ்னானம் செய்யும்படி கூறினர்.

பலராமரும் அவர்களிடம் உத்திரவு பெற்று தம்முடன் வந்தவருடனும் பிராமணர்களுடனும் கௌசிக நதிதீரத்தை அடைந்தார்.

—தொடரும்.

---

# தவணை முறை

கிறித்துவ பாதிரியார் ஒருவர் கார் வாங்க விரும்பினுர். அவரிடம் பணமில்லாததால் தவணை முறையில் வாங்க திட்டமிட்டார்.

தவணை முறையில் கார் விற்கும் ஒரு நிறுவனத்திடம் போனுர். தனக்கு ஒரு கார் வேண்டும் என்று கேட்டார். அவர்கள் விண்ணப்ப மனு கொடுத்தார்கள். பாதிரியார் அந்த மனுவை நிரப்பிக் கொடுத்தார்.

உங்களுக்கு கார் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். ஏன்? விண்ணப்ப மனுவில் இரண்டு கேள்விகளுக்கு பாதிரியார் அளித்த நிறுவனத்தாருக்கு திருப்தி அளிக்காததே அதற்கு காரணம்

அந்த கேள்விகளும் அவற்றுக்குப் பாதிரியார் எழுதிய பதில்களும்:

நீங்கள் என்ன வேலை செய்கிறீர்கள்?

கடவுளுக்குத் தொண்டு செய்கிறேன்.

உங்கள் முதலாளி யார்?

கடவுள்.

தகவல்: சேது, சென்னை.

---

# துன்பம் நண்பனைப் போன்றது

— G. N. நாராயணன் —

இந்த மானிட உலகம் இரண்டு விதத் தன்மைகளைக் கொண்டது. நல்லது கெட்டது, சுகம் துக்கம், லாபம் நஷ்டம், பகல் இரவு, அகம் புறம் 'புண்ணியம் பாவம், ஆண் பெண், இன்பம் துன்பம் என்ற இரட்டைத் தன்மைகளைக்கொண்டு இப்பூவுலகம் இயங்கி வருகின்றது.

சாதாரண மனிதன் நல்லதையே பார்க்க விரும்புகிறான், நல்லதையே கேட்க விரும்புகிறான். அருவருப்பானவற்றை பார்க்கவோ கேட்கவோ விரும்புவதில்லை வியாபாரத்தில் லாபத்தையே அடைய விரும்புகிறான். நஷ்டத்தை அடைய விரும்புவதில்லை. சுகமாக வாழத் துடிக்கிறான். துக்கத்தையடைய அச்சப்படுகிறான் மற்றவர்கள் இறப்பதைப் பார்த்ததும் தான் சிரஞ்சீவியாக வாழ ஆசைப்படுகிறான். ஆனால் மரணம் என்ற வார்த்தையைக் கேட்கவேபயப்படுகிறான். வாழ்க்கையில் உயர்நிலை அடைய விரும்புகிறான். தாழ்வுநிலையையடைய வெறுக்கிறான்.

முள்ளில் ரோஜா மலர்கிறது; சேற்றில் செந்தாமரை வளர்கிறது, பாம்பின் தலையில் நாகரத்தினம் ஒளிவீசுகிறது, புயலுக்குப்பின் அமைதி நிலவுகிறது, துன்பத்திற்கு பின் இன்பம் ஏற்படுகிறது, இருட்டிற்குப் பின் வெளிச்சம் உண்டாகின்றது என்ற சில இயற்கை விதிகளை தெரிந்துகொள்ள மனிதன் முயற்சிப்பதில்லை. காரணம், தான் சுகமாக வாழ வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டிருப்பதேயாகும்.

இன்ப நிலையிலேயே மனிதன் வாழ நினைக்கின்றான். தன்னுடைய துன்பங்களையும், மற்றவர்களுடைய துன்பங்களையும், உலக மக்களுடைய துன்பகரமான வாழ்க்கை நிலைகளையும் மனிதன் அறிந்து கொள்ள ஆசைபடுவதில்லை.

பகவான் புத்தருடைய அருள் வாக்கில் 'துக்கம் சத்தியம்' என்பது முக்கியமானதாகும். இன்பம் என்பது மாயை போன்றது. சாசுவதமற்றது, தித்திப்புப் பண்டம் சாப்பிடுவதால் ஏற்படக்கூடிய இன்பமும், புதிய ஆடைகளை அணிவதால் ஏற்படக்கூடிய சுகமும் நாட்டியம், சங்கீதம் போன்றவைகளை பார்ப்பதால் ஏற்படக்கூடிய ஆனந்தமும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கேயாகும் அடுத்தக்ஷணம் துன்பம் மனிதனை நாடுகின்றது. ஆகவே துக்கம் அல்லது துன்பமே சத்தியமானது என்று பகவான் புத்தர் கூறுகிறார்.

ஒரு மனிதன் சிறந்த அனுபவசாலியாக இருக்கிறான் என்றால் அவனுடைய வாழ்க்கையின் முற்பகுதியில் அவன் உண்ண உணவில்லாமலும், உடுக்க உடையில்லாமலும், பெற்றெடுத்த குழந்தைகளை பேணி பாதுகாக்க வழியில்லாமலும் மன சங்கடங்களில் சில சமயங்களில் தற்கொலை செய்துகொள்ள துணிவதும், படித்து பட்டம் பெற்று வேலையில்லாமல் அலைந்து கஷ்டப்படுவது போன்ற நிலைகளின் வாழ்க்கைப் போராட்டத்திலீடுபட்டு தன்னுடைய துணிகரமான செயலாலும், உறுதி படைத்த உள்ளத்தாலும், இறைவனுடைய அருளாலும் வாழ்க்கையின் பிற்பகுதியில் அவன் நல்ல நிலையை அடையும்பொழுது அவனை நாம் சிறந்த அனுபவசாலி என்

கிறேரும். அவர்கள்தான் வாழ்க்கையின் சிறந்த நுணுக்கங்களைப்பற்றி நன்கு புரிந்து கொண்டவர்களாவார்கள். துன்பத்தின் அருமை பெருமைகளை உணர்ந்தவர்களாவார்கள். துன்பம் என்பது வாழ்க்கையின் ஒரு வழிகாட்டி என்று அறிந்து கொண்டவர்களாவார்கள்.

பாண்டவர்களின் அன்னையான குந்திதேவியிடம் ஒரு தடவை கண்ணன், அத்தை! உனக்கு ஏதாவது வரம் வேண்டுமானுல் தருகிறேன் கேள் என்ருர்

அதற்கு குந்தியானவள், கண்ணு எனக்கு நிறைய துன்பங்களைத் தா, என்ருள்.

அதிர்ச்சியடைந்த கண்ணன், அத்தை! நீ ஒரு விசித்திரமான பெண்ணுக இருக்கிருயே. உலக மக்கள் அனைவரும் இன்பத்தையே நாடும்பொழுது நீ மட்டும் துன்பத்தை விரும்புவதற்குக் காரணமென்ன? என்று வினவினுர்.

குந்தியானவள் சிறிதும் பதட்டப்படாமல், மாதவா! துன்பத்தை அடையும்போதுதான் உன் நினைவு வருகிறது கண்ணு! என்று நினைத்தவுடன் நீ வந்து காட்சி தருகிருய். இன்ப சூழ்நிலையில் உன் ஞாபகமே வருவதில்லையே, என்று பணிவன்புடன் கூறினுள்.

பொதுவாக எது நடந்தாலும், நடக்காவிட்டாலும் ஆத்மா மகிழ்ச்சியடைவதுமில்லை, துயரமடைவதுமில்லை. புலன்கள் எல்லாம் தத்தம் இடங்களில் இருக்கும்போது அச்சத்திற்கு காரணமில்லை, பொருள்களோடு அவை சேர்க்கை பெறத் தொடங்கும்பொழுதுதான் இன்ப துன்பங்கள் என்ற இரட்டை அலைச்சல்கள் தோற்றுவிக்கப்படுகின்றன.

யாராவது தம்மை அவமதிப்பைக் கேட்கும்போது நமக்குகோபமும் துயரமும் உண்டாகின்றன. நம் காதில் அந்தப் பேச்சுகள் விழவில்லையென்ருல் இந்த உள்ளக் கொதிப்பு ஏற்படாது. புறப்பொருள்களை நோக்கிப் புலன்கள் செய்வது தான் துன்பத்திற்கும் அதன் மறுதலையான இன்பத்திற்கும் காரணம்.

இது சூட்டையும், குளிரையும் போன்றது. குளிர்காலமாக இருந்தால் வெப்பத்திற்காக ஏங்குகிரும். புலன்களுக்கும் பொருள்களுக்கும் ஏற்படும் தொடர்பு முழுவதும் இத்தகையதுதான்.

இன்ப துன்பங்களின் தராதரத்தைப்பற்றியும் துன்பத்தின் பெருமையைப்பற்றியும் தெரிந்துகொள்ளாமலிருப்பதுதான் அறியாமையாகும். அவன் குருடனுக்குச் சமமானவன். கண் பார்வையற்ற ஒரு குருடனை நாம் வரவேற்கும்போது, அவன் கூடவே வரும் கண்பார்வையுள்ளவன் ஒருவனையும் வரவேற்க வேண்டும். ஏனெனில் அவன் எப்பொழுதும் குருடன் கூடவே இருப்பவன் இதுபோல் தான் இன்பமும் துன்பமும் இணை பிரியாதவை. இவற்றில் ஒன்றை மட்டும் நாம் தனியாகப் பிரிக்கமுடியாது.

இன்பம் தித்திப்பான மிட்டாய் போன்றது. முதலில் அது இனிக்கும், பிறகு கேடுவிளைவிக்கும். துன்பம் முதலில் கசக்கும்; ஆனுல் பிறகு அது சுகத்தை அளிக்கவல்லது.

இன்பம் நமது புண்ணிய கையிருப்பைக் கரைத்து மட்டமான நெறிகளை தூண்டிவிடுகிறது. உண்மையில் அது நம்முடைய எதிரியாகும். துன்பம் நமது கண்களைத் திறந்துவிடுகிறது சிந்தனையைத் தூண்டிவிடுகிறதுதுன்பத்திலிருந்து மனிதன் நற்சிந்தனை, அறிவாற்றல், பொறுப்புணர்ச்சி சகிப்புத்தன்மை முதலிய நற்பண்புகளை பெற உதவுவதால் அது மனிதனுக்கு நண்பனுகத் திகழ்கிறது. ★

# எம்மதமும் சம்மதமே!

அமரர் ஸ்ரீ சுவாமி சிவானந்தா

எல்லா மதங்களின் சாரமும் ஒன்றே. பொய் பேசாதீர்கள். பேராசை படாதீர்கள் எல்லோரையும் நேசியுங்கள் எல்லோருக்கும் சேவை புரியுங்கள் பரிவு காட்டுங்கள். பெருந்தன்மை காட்டுங்கள்! ஒன்றுபட்டு இணைந்து, ஒத்துழைத்துக் கூடி வாழுங்கள்; முழுமையான வாழ்வின் தன்மை இதுவே; தியானம், வழிபாடு நிறைந்த வாழ்க்கையை மேற்கொள்வீராக,

ஆசை, கோபம், பொறுமை ஆகியவை நம் அமைதியைக் குலைப்பவை. மேற்கூறிய முறைகளில் வாழ்ந்து நம்முள்ளே இருந்து நம் அமைதியைக் குலைக்கும் மாசுகளை நீக்குவோமாக! புத்தரும் சொராஸ்டரும் இதனையே போதித்தனர்.

பிறவி, மரணம், வருத்தம், உணர்வு ஆகியவை இல்லாத கர்மத்தால் பாதிக்கப்படாத அந்த ஆத்மா ஒன்றுள்ளது. நீங்கள் அதனை எப்படி வேண்டுமானாலும அழையுங்கள்.

அந்நாளில் மன்னர்கள் ரிஷிகளின் ஆஸ்ரமங்களுக்குத் தூதர்கள் மூலம் பசுக்களையும், பழங்களையும் காணிக்கையாகச் சமர்ப்பித்து வந்தனர் பதிலுக்கு ஆன்மீக வேந்தர்களான ரிஷிகளிடமிருந்து, புவி வேந்தர்கள், சலனமற்ற மனம் என்னும் ஆன்மீகச் செல்வத்தைப் பெற்றனர்.

பொருட்செல்வம் உங்களிடம் நிறைந்திருக்கலாம். அதனை இழந்து விட்டால், நீங்கள் இடிந்துபோய் விடுவீர்கள் துன்பம், மகிழ்ச்சி எது நேர்ந்தாலும், எல்லா நிலைகளிலும் ஆடாமல் அசையாமல், துள்ளாமல், துவளாமல் ஒரே நிலையில் இருக்கும் மனம் வேண்டும். கல்வியறிவு பெறுவதால் மட்டும் இந்த மனச் சமநிலை கிட்டிவிடாது. ''ஸமதா'' என்பதே வாழ்வின் லட்சியம். இஃதே உன்னதப்பண்பாடு எவர் திட்டியபோதிலும், துன்புறுத்தியபோதிலும், நீங்கள் மகிழ்ச்சியுடன் இருக்கவேண்டும்.

முகம்மதியர் ஒருவரால் சதாசிவ பிரம்மத்தின் இரு கரங்களும் வெட்டப்பட்டன. அப்போதும் அவர் மகிழ்ச்சியுடனேயே இருந்தார். நமக்கு முதலிடம் அமருவதற்குக் கிடைக்கவில்லை யென்றால், ஒருசிறு கடுஞ்சொல்லைக் கேட்டுவிட்டால், நாம் நிலைகுலைந்து போய்விடுகிறோம் இக்காலப் பட்டப்படிப்புக் கல்வி மனச் சமானநிலை தருகின்ற கல்வியில்லை அது பொருள் சம்பாதிக்கக் கற்றுக்கொடுக்கும் கல்வி.

மனிதன் ஆத்ம ஸ்வரூபத்தில் லயித்திருப்பதற்கு, அவன் மேற்கொள்ள வேண்டிய ஒழுங்கு சமநிலை, தன்னடக்கம், உண்மை, எளிமை ஆகிய பதினெட்டு பண்புகளை ஆஸ்ரம வாழ்க்கை கற்றுக்கொடுத்தது. ஆத்ம ஸ்வரூபலயமே நாம் அடைய வேண்டிய செல்வம் சமநிலை, உறுதி, எதனாலும் ஆத்திரம் அடையாத பக்குவம் கண்ணியம், பெருந்தன்மை, தயை, தாய்மை, அனுசரித்து இயங்கும் தன்மை, பணிவு இவையனைத்தும் உங்களிடம் உள்ளனவா என்று உங்களை நீங்களே ஆராய்ந்து பாருங்கள்.

நல்லவராக இருந்து நல்லதைச் செய்ய வேண்டும் என்பதே நமது

# யார் கொடுத்த வேல்?

—டாக்டர் பருத்தியூர் K. சந்தானராமன், M.A., D.Litt., Ph.D.

முருகனின் சிறப்பு ஆயுதமாகிய வேலாயுதம் சக்திவேல், ஞான வேல், வெற்றிவேல், வீரவேல் என்று பலவாறு புகழப்படுகிறது. இவ்வாயுதம் கொலைக்கருவியன்று ஞானத்தின் சின்னம் அல்லது அறிவின் அடையாளமாகும். கூரிய நோக்கு, ஆழ்ந்த சிந்தனை, பரந்த மனப்பான்மை என்ற அறிவின் மூன்று இலக்கணங்களைத் தன் வடிவில் உணர்த்தி நிற்பது வேல் என்பர் சான்றோர்.

சூரசம்காரத்துக்குப் புறப்படும் பொழுது அந்த வேலினை முருகனிடம் சிவபெருமான் கொடுத்தார் என்றும், பராசக்தியாகிய அம்பிகையே அளித்தாள் என்றும் இரு வேறு கருத்துகள் நிலவுகின்றன. உண்மையில் வேல் கொடுத்தது சிவனா? அல்லது சக்தியா? இதனை ஆய்ந்து தெளிவாக்குவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

பெற்றோர்களிடம சூரசம்ஹாரத் துக்குப் புறப்படும் பொழுது முருகன் சிவபெருமானிடம பதினொரு ஆயுதங்களைக் கொடுத்தான்.

ஆயதற் பின்னர் ஏவில் மூவண்டத்து ஐம்பெரும் பூதமும் அடுவது
ஏய பல்லுயிரும் ஒருதலை முடிப்பது, எவர்மேல் விடுக்கினும் அவர்தம்;
மாயிருந்திறலும் வரங்களும் சிந்தி மன்னுயிர் உண்பது எப்படைக்கும்
நாயகமாவது ஒருதனிச் சுடர்வேல் நல்கியே மதலை கைக்கொடுத்தான்

அதாவது பதினொரு படைக்கலங்களையும் அளித்தபின் எவரது வரமும் முடித்து வெற்றி கொள்ளக் கூடிய தலையாயதான வேலாயுதத்தை சிவபெருமான் அளித்தான் என்று தமிழ்க்கந்தபுராணத்தில் கச்சியப்ப சிவாச்சாரியார் குறிப்பிடுகிறார்

அவ்வாறே வியாஸரின் மூல ஸ்காந்தமும்

சக்திஞ்ச மநஸா சைகாம் சர்வ
சத்ருநிகர்ஹணம்

எல்லா எதிரிகளின் திறமைகளையும் அழிக்கவல்ல சக்தியாயுதத்தையும் சிவபெருமான் அளித்தான் என்கிறது.

ஆனால், நடைமுறையில் சூரசம்ஹார விழா நடைபெறும் பொழுது சக்தியே வேல் கொடுக்கும் காட்சி

---

லட்சியமாக இருக்க வேண்டும். தம்மிடம் உள்ளவற்றை அடுத்தவருடன் பகிர்ந்து கொள்வதற்கான விருப்பம் நமக்கு வேண்டும். மத நூல்களை கற்றறிய வேண்டும். குரு, மதப் பெரியார்கள், ஞானிகள் ஆகியோர் பால் பக்திவேண்டும்.

எல்லா மதங்களும் கடவுள் ஒருவரே என்றுதான் நம்புகிறது. ஆகவே, எம்மதமும் சம்மதம் என்கிற ஆன்மீக சமுதாய ஒருமைப்பாட்டுடன் வாழப் பழகி நற்கதி பெறவேண்டும்.

நன்றி : தெய்வீக விழிப்புணர்ச்சி சங்கம்
இராசிபுரம்.

யீனைப் பார்க்கிறோம். சிக்கலில் அன்னையிடம் வேல்வாங்கும்காட்சி அனைவரும் அறிந்த ஒன்று. 'வேல் கொடுத்தாய் திருச்செந்தூரருக்கு' எனக் கவிஞர் பெருமக்களும் அம் பிகையினைப் புகழ்கின்றனர்.

திருக்கோயில்களிலும், சூரசம் ஹாரத்துக்கு சுவாமி (முருகன்) புறப்படும்பொழுது சர்வலங்காரங் களுடன் அம்பிகை சந்நிதியின் முன் எதிரில் வந்து நிற்பார். அப் போது அம்பிகை சந்நிதியில் அவ ளது கையில் சாத்தி வைக்கப்பட் டிருக்கும் வேலினை தீபாராதனைக் குப்பின் எடுத்துவந்து முருகனின் திருக்கரத்தில் சாத்துகின்றனர்,

கந்தனின் வரலாற்றினைக் கூறும் நூல்கள் இறைவனே வேல் கொடுத்தான் என்று குறிப்பிடும் பொழுது நடைமுறையில் ஏனிந்த முரண்பாடு ஏற்பட்டது?

முருகன் அடியார்களும் சைவர் களேயாவர். முருகனது வரலாற் றினைக் கூறும் கந்தபுராணம் பத்து சைவ புராணங்களில் ஒன்றாகும் முருகனின் புகழ்பாடும் திருமுரு காற்றுப்படை சைவத் திருமுறை களில் சேர்க்கப் பட்டுள்ளது. ஆகவே, சைவ சித்தாந்தக் கருத் தினையொட்டிச் சிந்திக்கும்பொழுது மேற்கண்ட முரண்பாடு ஏதுமில்லை என்பது விளங்கிவிடும்.

அருளது சக்தியாகும் அரன் தனக்கு' என்பது சிவஞான சித்தி யார், அதன்படி இறைவனின் அருள்வடிவே சக்திதான். அவனது அருள் வெளிப்பாடு சக்திவழியே நடைபெறுகிறது. அச் சக்திவழி வெளிப்படும் அருட்செயல் இறை வன் திருச்செயலே என எண்ணு வது சைவ சித்தாந்த மரபு.

சீர்காழி குளக்கரையில் அழுது கொண்டிருந்த திருஞானசம்பந்த ருக்கு அம்பிகை தனது திருமுலைப் பாலை அளித்தாள். அதனைக் குறிப் பிடும் பெரிய புராணப் பாடலைப் பாருங்கள்.

எண்ணரிய சிவஞானத் தின்னமுதம் குழைத்தருளி
உண்ணடிசில் எனஊட்ட உமையம்மை எதிர்நோக்கும்
கண்மலர் நீர்துடைத்து அருளிக் கையிற்பொற்கிண்ணம் அளித்து
அண்ணலை அங்கு அழுகை தீர்த்து அங்கணர் அருள்புரிந்தார்.

சிவஞானங் குழைத்தது, சம்பந் தரின் கண்ணீரைத் துடைத்தது, பொற்கிண்ணம் அளித்தது, அழு கையைத் தீர்த்தது எல்லாமே அம் பிகையின் செயல்கள்தான்! ஆனால் அங்கணர் அருள்புரிந்தார் என்று உமை வழி நிகழ்ந்த அச்செயல்களை சிவபெருமானின் செயல்களாகக் கூறுகிறார் சேக்கிழார் பெருமான்.

'அருளது சக்தியாகும் அரன் தனக்கு' என்ற சித்தாந்தப்படி இங்கு சேக்கிழார் உமைவழிநடந்த செயலை இறைவனின் செயல் என் கிறார். அதே வகையில் கந்தபுராண ஆசிரியர் கருத்துக்கும் பொருள் கொள்ளுதலே பொருந்தும்,

கச்சியப்ப சிவாச்சாரியார் 'நல் கியே மதலைக் கைக்கொடுத்தான்' என்கிறார், நல்குதல், கொடுத்தல், இரண்டும் ஒரே பொருளுடைய சொற்களாகும். நல்கினான் என்றோ கொடுத்தான் என்றோ கூறினால் மட்டும் போதும். இங்கு இரண்டு சொற்கள் எதற்கு?

சிவபெருமான் வேலாயுதத்தை சக்தியிடம் நல்கினான். அவள் முரு கனிடம் அளித்தார். இறைவன் வேலினை சக்திவழியாகக் கொடுத்

தான் என்று கொள்ளுதல் வேண்டும். அல்லது அவனது அருள் அவன் வழி செயல்பட்டது என்பது சித்தாந்தம்.

கடையிலிருந்து இனிப்பு வாங்கி வந்து தந்தை தாயிடம் கொடுக்கிறார். தாய் அதனைக் குழந்தைகளிடம் கொடுக்கிறாள். அப்பா இனிப்பு தந்தார் என்றோ அம்மா இனிப்பு தந்தார் என்றோ எப்படிக் கூறினாலும் முரண்பாடு இல்லை.

'அம்மா இனிப்புத் தந்தாள்' என்று கூறிக் குழந்தைகள் மகிழ்வதுபோல அம்பிகையின் குழந்தைகளாகிய பக்தர்கள் அவள் வேல் கொடுத்தாள் என்றுகூறி விழா கொண்டாடுவதில் தவறில்லை என்றே தெரிகிறது.

---

## சிறுதுளி — பெருவெள்ளம்

பகவத் புராண உபன்யாசங்கள் மூலம் பாரதமெங்கும் பக்தி பிரசாரம் செய்துவரும், ஸோமயாஜி, அக்னிஹோத்ரி, சேங்காலிபுரம் ஸ்ரீ. S. அம்பி தீட்சிதர் அவர்களை அனைவரும் அறிவர்.

இவர் சேங்காலிபுரம் ப்ரம்மஸ்ரீ அனந்தராம தீட்சிதர் அவர்களிடம் சுமார் இருபது வருட கால சிஷ்யராக இருந்து பணிவிடை செய்து, புராண, இதிகாச உபன்யாசங்களை அப்யசித்து தேர்ச்சி பெற்று பல வருஷங்களாக நாடெங்கும் சென்று உபன்யாசங்களை நிகழ்த்தி வருகிறார்.

தற்சமயம் இவர் சிறுநீரகம் பாதிக்கப்பட்டு பாண்டி ஜிப்மேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார், மாற்று சிறுநீரக அறுவை சிகிச்சை செய்ய செலவு ரூபாய் ஒரு லட்சம் வரையில் ஆகலாம் என்கிறார்கள்.

இவரோ சாதாரண வருமானம் உள்ளவர். இவரையே நம்பி இருப்பவர்களோ பலர். இதுவும் ஆண்டவன் சோதனை போலும் இவர் நல்ல முறையில் சிகிச்சை பெற்று, குணமடைந்து மீண்டும் உபன்யாச உலகில் பிரகாசிக்க அன்பர்கள் தங்களாலியன்ற உதவியை

ஸ்ரீமதி N. சுபத்ரா, 3, இரண்டாவது கிராஸ்,
மரவனேரி எக்ஸ்டென்ஷன், சேலம்-636 007

என்ற விலாசத்திற்கு அனுப்பி உதவ வேண்டுகிறோம். சிறுதுளி-பெருவெள்ளம் என்பார்கள், தங்களால் இயன்ற அளவு உதவி புரியுங்கள்.

காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. (குறள்)

— ஆசிரியர்.

# புனித மலர்

இவ்வாண்டு தீபாவளி மலர் ஆஸ்திகர்களுக்குப் படித்து பாதுகாக்க வேண்டிய பொக்கஷமாக உள்ளது.

W. C சுந்தரராசன்—மதுரை.

புனித தீபாவளி மலர், பக்தியையும், பண்பையும் வளர்க்கும் கதைகள், கட்டுரைகள், பகவான் கலர்ப்படங்கள் எல்லாம் மனதிற்கு மகிழ்ச்சியையும் அமைதியையும் கொடுக்கிறது.

டி. வி வைத்தியநாதன்—சென்னை-28.

தீபாவளி மலரின் அட்டைப்படம் மகான் ராகவேந்திர சுவாமிகள் மூலராமருக்கு அபிஷேகம் செய்யும் காட்சியும், ராம-லக்ஷ்மண-சீதை இவர்களின் அருள்புரியும் வைபவம் அபூர்வமான படைப்பு. பார்க்கும் போதே பக்தி பரவசமாகிறது' எப்படி தங்களைப் பாராட்டுவதென்றே தெரியவில்லை மகானின் அருள் பூராவும் தங்களுக்கு உண்டு.

பார்வதி-ராமனுதன்—மதுரை

ராமநாமம் மலர் பூராவும் வந்துள்ளது பெரிய புண்ணிய காரியம், மலரைப் புரட்டுகிறவர்கள்கூட ராமநாமத்தை படிக்காமலிருக்க முடியாதல்லவா? தாரகமந்திரமான ராமநாமாவை சொல்லவைத்து விட்டீர்கள். மலர் புனிதமடைந்துவிட்டது.

மீனுக்ஷி-ராமகிருஷ்ணன்—சேலம்.

தணிகை முருகனிடம் ஒருநாள் கட்டுரை, ஆசிரியரின் முருக பக்தியை நன்கு காட்டுகிறது. அற்புதமான படைப்பு, தணிகைக்கே அழைத்துப்போய் முருகன் அருளாசியை வாசகருக்கு வாங்கித் தந்து விட்டீர்கள். புனிதமான கட்டுரை; உங்களை எவ்வளவு பாராட்டினுலும் போதாது. முருகா-முருகா-முருகா.

எம். வேலுச்சாமி நாடார்—திண்டுக்கல்

மலரில் பல நல்ல கட்டுரைகளும் கதைகளும் மணம் பெறுகின்றன. பொன். பரமகுரு அவர்களின் கட்டுரை அற்புதம். அவரைக் கொண்டு ஞானனந்தரின் வாழ்க்கைச் சித்திரத்தை படைக்கச் சொல்லலாமே?

பி. சுந்தரராமன்—பலமாநேரி

பெரியவாள்-மூவர்களுடைய புனிதக் கட்டுரைகளும் மலரை மேலும் பக்திமணம் கமழவைக்கிறது சிறப்பான படைப்பு!

ராமானந்த அடிகள் - திருவண்ணுமலை

துளசிமாடம் கதை நாத்திகர்களுக்கு நல்லதொரு உபதேசமாய் உள்ளது. உண்மையில் பாராட்ட வேண்டிய புனிதபடைப்பு.

கோமதி-நாராயணன்—பம்பாய்

# லக்னபலன்



## குண்டூசி ஜோஸ்யர்

*நவம்பர் — 1984*

### மேஷம்

வாழ்க்கை வசதிகள் பொதுவாக உயரும். காரியத் தடங்கல்கள் இருந்துவரும். வெற்றி வாய்ப்புகளும் ஆடை, பொருள் லாபங்களும் உண்டாகலாம். நோயினால் தொல்லை, அதிகாரிகளின் நடவடிக்கையினால் அபகீர்த்தி முதலியன தோன்றினாலும் பொருளாதார நிலை சமாளிக்கக்கூடிய விதத்திலிருந்து வரும். கணவன் மனைவி உறவு சுமுகமாக இருக்கும் புத்திரர்களால் சிலருக்கு வசதிகளும் சுகமுமுண்டாகும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களில் பாராட்டும் வரவேற்பும் இருக்கும். குழந்தைகளின் பராமரிப்பு செலவுகள் கூடுவதுடன் மனதிற்குக் கவலை தருவதாகவும் அமைய வாய்ப்புண்டு. சிலருக்கு அயல்நாடு சென்றுவரவும் வாய்ப்பேற்படலாம்.

நல்ல நாட்கள் : 17. 23, 27, 28.

### ரிஷபம்

எடுத்த காரியங்களில் வெற்றியும் பதவிகளில் உயர்வும் உண்டாகலாம். சிலருக்கு வீடு, பூமி முதலியவற்றில் லாபமேற்பட்டாலும், வீண் செலவுகளாலும் பொருட்சேதங்களாலும் தனவிரயம் ஏற்படலாம். வெளிவிவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பதால் கௌரவக் குறைவு முதலானவற்றை அடையாமலிருக்கலாம். உடன்பிறந்தவர், உற்றார் முதலானவர்களுடன் கருத்து வேற்றுமைகளும் கொடுக்கல் வாங்கல்களில் மனக்கசப்பும் நிகழலாம். கடல்கடந்து அயல்நாடு சென்றவர்கள் மீண்டும் தமது இருப்பிடத்திற்கு வந்து சேருவார்கள். நீண்ட நாட்களாக நோய்வாய்ப்பட்டு மருத்துவ மனையிலிருந்தவர்களும் நோய் நீங்கப்பெற்று வீட்டிற்குத் திரும்பவந்து சேருவார்கள். அரசாங்க உதவியும் ஆதாயமாகவே இருக்கும்.

நல்ல நாட்கள் : 16, 17, 19, 27.

### மிதுனம்

இதுவரை மேற்கொண்ட முயற்சிகளுக்கு இனி பயன் ஏற்படும். ஆகவே பொருளாதாரத்திலிருந்து வந்த பிரச்னைகள் விலகும். தொழில் வியாபாரத்தில் சம்பந்தப்பட்ட முக்கியஸ்தர்களின் செல்வாக்கினால் புதிய சூழ்நிலைகள் உருவாகும். உத்தியோகத் துறையில் சில சிக்கல்களை சந்திக்க வேண்டிவரும். வியாபாரத்தில் நஷ்டமேற்படாவிட்ட

லும் சில இடையூறுகளினால் மனக் கவலை ஏற்படும். அரசியல்வாதி களுக்கு புதிய பதவி வாய்ப்பும் பொறுப்புமேற்படும். பிரச்சனைகள் நல்ல முடிவுபெறும். பொதுவாகத் தாராளமாகச் செலவு செய்யகூடிய பக்குவமுண்டாகும். நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப் பார்கள்.

நல்ல நாட்கள் : 18, 20, 28, 30.

## கடகம்

பொருளாதார நிலையில் நிர்ப்பந்த மான செலவுகள் அதிகரிக்கும். எதிலும் மிகுந்த பிரயாசை மேற் கொள்வதன் மூலமே போதிய அளவு பணவசதியை ஏற்படுத்திக் கொள்ள இயலும். தொழிலில் பாதிப்பும் சுலபமாக செயலாற்ற இயலாத தன்மையும் ஏற்படும், குடும்பத்தில் தேவைகள் அதிகரிப் பதால் கோபமேற்படலாம். இது வரை உதவி செய்யாமலிருந்துவந்த உறவினர்களால் பொருளுதவியும் ஆலோசனைகளும் கிடைக்கும். மாணவர்களுக்கு கவனத்தைச் செலுத்த இயலாத சூழ்நிலைகள் உண்டாக இடமிருப்பதால் கல்வி யில் சிரத்தையுடன் படிக்க வேண் டியது அவசியமாகிறது. சிலருக்கு மூதாதையர் சொத்துக்கள், உடல ஆரோக்கியம் முதலியவற்றில் மாறு தலேற்படும்.

நல்ல நாட்கள் : 20, 26, 29, 30

## சிம்மம்

சுய கௌரவம் பாதிக்கப்படலாம் குடும்பத்தில் இன்ப துன்பங்கள் கலந்திருப்பதுடன் சுபகாரிய வைபவங்கள் விருந்துபசரிப்பு முத லியவை நிகழும். உத்தியோகத்தில் அதிகாரிகளின் மீது ஏற்படும் கோபத்தைத் தடுத்தால் பிரச்சனை கள் விலகும். வீடு, நிலம் கறவை மாடு வாங்க அதிகாரமிருக்கிறது. வாகன வசதி பெருகும். பழைய வாகனத்தை மாற்றி புதிதாக வாங்குவர்.

நல்ல நாட்கள் : 19, 22, 27, 30.

## கன்னி

உற்சாகமான மாதம். வரவேண் டிய பணம் வராது. குடும்பஆரோக் யத்துக்காக வீண் விரயமேற்படும், கடன்களைத் தீர்ப்பது கடினம். போட்டி பந்தயத்திலீடுபடலாம். வெற்றிகிட்டும். பழைய நண்பர் களின் ஆறுதல் கிட்டும் நீண்ட தூர பயணம் கிட்டும். வியாபாரத் தில் லாபமுண்டாகும். உத்தியோக துறையில் மிதமான பலன்களேற் படும். சில பொருள்களை அடகு வைக்கவோ அல்லது விற்கவோ நேரும்

நல்ல நாட்கள்: 18, 19, 24, 26.

## துலாம்

இம் மாதத்தின் முற்பகுதியில் அலைச்சல் ஏற்படும். மாத இறுதி யில் புத்திரன் பிறந்தல் போன்ற சுப நிகழ்ச்சிகள் உண்டாகலாம். உத்தியோகஸ்தர்களுக்கு பாராட்டு தல் கிடைக்கலாம் தரகு, கமிஷன் வியாபாரிகளுக்கு இது யோக கால கட்டமாக இருக்கும். வரவுக்கேற்ற செலவுகள் இருக்கும்.

நல்ல நாட்கள் : 20, 25, 27, 29.

## விருச்சிகம்

சுமாரான மாதம். ஓரளவுக்கு சகிப்புத் தன்மை தேவை. கடன் கள் கவலைதரும், உத்தியோகத் துறையில் அவ்வளவு திருப்தியிருக் காது. பெண்கள் பாதிக்கப்படக் கூடும். இம்மாத இறுதியில் குடும்ப வாழ்க்கை நல்ல முறையில் இருக் கும், சிலர் உங்களைக் குறைகூறு வர். மனதைரியம் தேவை

நல்ல நாட்கள் : 17, 30.

## தனுசு

சிறு விபத்து ஏற்பட வாய்ப்பு உண்டு உங்கள் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும், எதிரிகளுக்கு பலமதிகம் குறுக்கு யோசனை, தவறான வழிகள் முதலியவற்றையும் அவற்றைத் தூண்டுபவர்களையும் தவிர்ப்பது நலம். குடும்பத்தில் குழப்பங்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதால் தெய்வ வழிபாடு செய்வது நலம். மொத்தத்தில் இது சுமாரான மாதம்.

நல்ல நாட்கள் : 17, 24, 29, 30.

## மகரம்

இம்மாதத்தில் எல்லாவிதத்திலும் சாதகமான பலன்களை நடைபெறும் முயற்சிகள் பலனளிக்கும் அதிகாரிகளின் ஆதரவினால் மனமகிழ்ச்சி உண்டாகும். குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும். சதா பயணத்தில் காலம் கழியும். பெண்களினால் பயன் பெற்றிடுவார்கள். எதிலும் புதிய வேகமும், நல்ல திருப்பமும் இருந்துவர ஆரம்பிக்கும்.

நல்ல நாட்கள் : 17, 21, 23, 25, 28, 30.

## கும்பம்

குடும்பத்தில் சுபகார்யங்கள் திடீரென ஏற்பட்டு, நல்லவிதத்தில் முடிவடையும் விவசாயிகளுக்கு நல்ல விளைச்சலுண்டாகும் அரசாங்க ஆதரவு கிட்டும். முயற்சி வெற்றியில் முடியும். தொழில், வியாபாரம் குறைவற்று நடைபெறும் கல்வியில் நல்ல முன்னேற்றமேற்படும்.

நல்ல நாட்கள் : 16, 19, 22, 27.

## மீனம்

இம் மாதம் கலைஞர்களுக்குச் சாதகமாக உள்ளது. விவசாயிகள் பெரும்பயனையடைவார்கள் எதிரிகளுக்கும், எதிர்ப்புச் சக்திகளுக்கும் இப்போது முதல் வேலை இருக்காது. கல்வியில் படிப்படியான வளர்ச்சி ஏற்படும். ஜலப்பிராப்தி திருப்திகரமாக அமையும். ஆடை, ஆபரண சேர்க்கை ஏற்படும். பெண்களால் அவதூறுகளும் வீண் சச்சரவுகளும் நேரிடலாம்.

நல்ல நாட்கள் : 17, 19, 20, 24, 25, 29, 30.

எல்லாவிதமான தங்க நகைகள், வெள்ளி சாமான்கள் வாங்க
நம்பிக்கையான இடம்

**ஆனந்த் ஜுவல்லரி**

*99, பெரிய தெரு, திருவல்லிக்கேணி*
*சென்னை - 600 005.*
(கெல்லட் ஸ்கூல் சமீபம்)

ஸ்ரீ லீலாசுகர் அருளிய

# ஸ்ரீகிருஷ்ணகர்ணாம்ருதம்



பாலரூபமான கண்ணன் திவ்ய தரிசனம் அதிர்ஷ்ட வசமதினுல் கிட்டுமேயாயின் மோட்சம் தானுகவே வந்து கைகட்டி நிற்கும், தர்மார்த்தகாம புருஷார்த்தங்கள் நமக்கு ஏவல்புரியுமென்கிருர் லீலாசுகர்.

ஜயஜயஜய தேவ தேவதேவ
திரிபுவன மங்களதிவ்ய நாமதேய
ஜயஜயஜய பாலகிருஷ்ணதேவ
ச்ரவண மனோநயனாம்ருதாவரா 108

ஜய! ஜய! ஜய! ஹே தேவ! தேவர்களுக்கெல்லாம் தேவ! உனது திவ்ய நாமஸ்மரணை மூவுலங்களுக்கும் மங்களத்தை அளிக்கும் தன்மையுடையது. ஜய! ஜய! ஜய! பாலகிருஷ்ணனுக விளங்கும் கண்ணு! நின் அவதாரம் செவிக்கும், மனதுக்கும் கண்களுக்கு அதிஉன்னத ஆனந்தாம்ருதமான ஒரு விருந்தாம்.

துப்யம் நிர்ப்பர ஹர்ஷ வர்ஷ விவசா ஆவேச ஸ்புடா விர்பவ
சாபல்யேன விப்ருஷிதேஷு ஸுக்ருதாம் பாவேஷு நிர்ப்பாஸதே
ஸ்ரீமத் கோகுல மத்தனுய மஹதே வாசாம் விதுரஸ்புடம்
மாதுர்யைக் ரஸார்ணவாய மஹஸே கஸ்மை சிதஸ்மை நம: 109

தங்களது உள்ளத்தில் மிகவும் தெளிவாக நிர்மலமாகப் பிரகாசிக்கும் உனது உருவத்தில் ஈடுபட்டு சதா உனது நினைவிலேயே இருப்பதற்கு ஆசைப்படும் மகான்களது மனோபாவத்தில் அலங்காரமாக விளங்குவதும், கோகுலத்தை விளங்கச் செய்வதும், மனம் வாக்கு ஆகியவற்றுக்கு எட்டாத இனிமையான பிரவாகம் போன்றதும், விவரிக்கமுடியாத பூரணத்வம் நிறைந்ததுமான ஒரு தேஜஸாக விளங்கும் உன் இணையடிகளுக்கு ஒரு நமஸ்காரம் என்று கூறுகிருர்.

சதா இறைவனையே தியானிக்கும் மகனீயர்களின் உள்ளத்தை அலங்கரிக்கும் பேரொளியாக விளங்குகிருன் கண்ணன். கண்ணனின் இனிய வசீகரம் விவரிக்க முடியாதது. அதன் இனிமை பொங்கிவரும்

---

*பி. எஸ். பரமேஸ்வரன்*, பி.ஏ., பி.எல்., சென்னை

புதுவெள்ளம் போன்றது. உள்ளத்தை நிரப்புமேயன்றி, பெருகி ஒடி விடாது. இத்தகைய மகாபாக்கியம் வேண்டுமென லீலாசுகர் பிரார்த் திக்கிறார்.

ஈசான தேவ சரணாபரணேன நீவி!
தாமோதரஸ்த்ரயசः ஸ்தபகோத் கமேன
லீலாசுகேன ரசிதம் தவதேவ! கிருஷ்ண
கர்ணாம்ருதம் வஹது கல்பசதாந்தரேபி 110

பரமேச்வரனது பாதங்களில் அனுதினமும் நமஸ்கரிப்பதால் அத் திருப்பாதங்களையே தனது ஆபரணங்களாகக் கொண்டவனும் தாமோ தரனது புகழை விரும்பி, ஒரு கிளியானது நிறைந்திருக்கும் பழம் புஷ்பம் ஆகியவற்றின் குவியலிலிருந்து கொத்தி கொத்தி எடுப்பதுபோல, அந்தக் கண்ணனது சிறப்புக்களைக் கூறுபவனும் ஆகிய லீலாசுகரது கிருஷ்ண கர்ணாம்ருதத்தில் இந்த பாடல்கள் காலச் சக்கரத்தின் எல்லையையும் கடந்து நிற்கட்டும் என்கிறார் லீலாசுகர்.

## இரண்டாவது ஸ்கந்தம்

தான் பெற்ற இன்பத்தை, கண்ணனது திவ்ய விபூதியை, ஏனை யோரும் பெற வேண்டும் என்ற ஆவல் மேலிட்டு மேலும் கிருஷ்ண கர்ணாம்ருதத்தின் இரண்டாவது ஸ்கந்தம் தொடங்குகிறார்.

இதில் கண்ணனது மேனியழகும் அவன் விரும்பியுண்ணும் வெண் ணெய், பால் தயிர் ஆகியவை எவ்வாறு மனிதனின் பக்தி, ஞானம், கர்மம் ஆகியவற்றைக் குறிக்கின்றன என்பதும் விளக்கப்படுகின்றன.

அபிநவ நவநீத ஸ்னிக்த மாபீதது க்தம்
ததிகண பரிதிக்தம் முக்த மங்கம் முராரே:
திசது புவன க்ருச்சச் சேதிதாபிஞ்ச குச்ச
ச்சவி நவசிகி பிஞ்சலா ச்ரிதம் வாஞ்சிதம் ந:

புதியதான வெண்ணெய் போன்ற பளபளவென உள்ளதும், நிறையப் பால் குடிப்பதால் கொழு கொழு வென்றுள்ளதும், தயிர்த் துளிகளோடு விளங்குவதும், நீலோத்பல புஷ்பம் போன்ற நீல நிறத் துடன் விளங்குவதும், இவ்வுலகத்தில் உள்ள துன்பங்கள் அனைத்தையும் அகற்றவல்லதும், புதிய மயிலிறகால் அலங்கரிக்கப்பட்ட தலைமுடியை யுடையதும் ஆன கண்ணனின் திவ்விய மங்கள ரூபம் நம்மெல் லோருக்கும் நமது விருப்பங்களையெல்லாம் நிறைவேற்றட்டும்.

இங்கு பக்தி, ஞானம், கர்மா ஆகிய மூன்றும் முறையே வெண் ணெய், பால், தயிர் ஆகியவையாக உருவகம் செய்யப்பட்டுள்ளன.

கண்ணன் ஞானமாகிய பாலைக் குடித்து, தயிரையும் குடிக்க முற் படுகிறான். அப்போது கர்மாவாகிற தயிர்த்துளிகள் அவன் உடம்பின் மீது பட்டுத் தெறித்து நிற்கிறது. மேலும் புது வெண்ணெய் என்னும்

பக்தியை தன்மீது பூசி நிற்கிறான் கண்ணன் என்பதுபோல் கூறுகிறார் கவி. இந்த ரமணீயமான வேஷத்துடன் விளங்கும் கண்ணன் தன் பக்தர்களுக்காகவே ஏற்று விளங்குகிறான். உலகம் உய்ய, மக்களின் துயர் அழிய கண்ணன் இவ்வாறு திகழ்கிறான் என்பது கவியின் கூற்று.

ஞானம் ஏற்பட்டால் கர்மம் கெடுகிறது அல்லது முடிவுறுகிறது. அப்போது பக்தியே நிலைக்கும். அந்த தூயபக்தி நிலை பக்தனை கண்ணனிடம் அழைத்துச் செல்லும்.

யாம் த்ருஷ்ட்வா யமுனாம் பிபாஸு ரனிசம் வ்யூஹோ கவாம் காஹதே
வித்யுத்வாநிதி நீலகண்ட நிவஹோ யாம் த்ரஷ்டுமுத்கண்டதே
உத்தம்ஸாய தமால பல்லவமிதி சிந்தந்தி யாம் கோபிகா:
காந்தி ; காளியஸாஸஷஸ்ய வபுஷ: ஸாபாவனி பாது ந: 2

கண்ணனது ரூப விசேஷத்தினை விளக்கும் லீலாசுகர் இங்கு;

அந்த கருநீல வண்ண ரூப லாவண்யத்தைப் பார்த்த பசுக்கூட்டங்கள் யமுனையின் நீலவர்ண ஜலப்பிரவாகம்தான் வருகிறது என நினைந்து யமுனையை நோக்கி ஜலம் குடிக்கச் செல்வதுபோல வேகமாக கண்ணனை நோக்கி ஓடுகின்றன என்றும்,

கார் முகிலின் நீலவர்ணமெனக் கருதி மேகக் கூட்டத்தைக் கண்டதாகக் கொண்டு மயில்கூட்டம் கண்ணனை நோக்கி விரைகின்றன என்றும்,

தமால புஷ்பம் நிறைந்து நிற்கும் விருக்ஷமாகக் கருதி, தமாலப் புஷ்பங்களை பறித்து தங்கள் கொண்டைகளை அலங்கரிக்கலாம் என்ற அவாவோடு கண்ணனை நோக்கி விரைந்து செல்கின்றனர்.

இத்தகைய தேக காந்திமிக்க ரூபத்தையுடையவனாக விளங்கும் காளிங்கன் என்ற ஸர்ப்பத்தினது செருக்கை அடக்கியவனுமான கண்ணன் நம்மை எல்லாம அருள்புரியட்டும் என வேண்டுகிறார் ஸ்ரீலீலாசுகர்.

---

நானே ஒரு பயணி

ஒருநாள் நபிகள் நாயகம் வெறும்பாயில் படுத்திருந்தார். அவருடைய உடம்பில் பாய் அச்சு பதிந்திருந்தது. இதையறிந்த ஹஜ்ரத் அப்துல் பின் மசூத் (ரபி), தாங்கள் ஆணையிட்டால்......மென்மையான படுக்கையைத் தயார் செய்து தருகிறேன்! என்றார்.

அதற்கு அண்ணலார், இந்த உலகத்துடன் எனக்கென்ன உறவு இருக்கிறது? இவ்வுலகம் என் இலக்கு அல்ல; நான் இங்கு ஒரு பயணியே! பயணத்தின்போது பயணி ஒரு மரத்தடியில் இளைப்பாறுகிறான். அம்மரத்தடியை அவன் தனது இருப்பிடமாக்கிக் கொள்வதில்லையே! என்று பதில் அளித்தார்.




# 49. மாகறல் உறையும் மகேசன்

இங்குகதிர் முத்தினொடு பொன்மணிகள்
    உந்திஎறில மெய்யுளுடனே
மங்கையரும் மைந்தர்களும் மன்னுபுனல்
    ஆடிமகிழ் மாகறல் உளான்;
கொங்குவளர் கொன்றைக்குளிர் திங்கள்அணி
    செஞ்சடையி னான்அடியையே
நுங்கள்வினை தீர மிக ஏத்திவழி
    பாடுநுகரா எழுமினே.

—சம்பந்தர், தேவாரம்.

அன்றும், இன்றும், என்றும் இறைவனுடைய அருட்சக்தியால் தீராத பிணிகளே இல்லையென்று சொல்லலாம். அவனின்றி ஓரணுவும் அசையாது என்பது உண்மை. உள்ளத்திற்கும் உடலுக்கும் தொடர்பு உண்டு. உள்ளத்தில் ஈசுவர சிந்தனை ஏற்படும்பொழுது உள்ளம் தூய்மை அடைகிறது உள்ளம் தூய்மை அடைந்தால் உடலில் பிணிகள் ஏது?

ஒருவனுக்கு வியாதி ஏற்பட்டால் முதலில் மருத்துவரையும், மருத்துவர் கைவிட்ட பிறகு இறைவனை நம்புகிறோம்.

விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் எல்லாவற்றையும் அடக்கி ஆண்டுவிடலாம் என்று நினைப்பது மூடத்தனம். சாதாரண மனிதன் தன்னுடைய எல்லையை மீறும்போது அசுரனாக மாறுகிறான்.

தெய்வசிந்தனை அசுரனையும்தேவனாக மாற்றுகிறது.

1952-ம் வருடம் சேலம் சுப்பராய பிள்ளை என்னும் 74வயது முதியவருக்கு கால் இடறிவிழுந்து, எலும்பு முறிவு ஏற்பட்டது. வயதாகிவிட்டது இனி எலும்பு கூடாது என்று டாக்டர்கள் கைவிட்டுவிட்டனர்.

*மஹேந்திரவாடி உமாசங்கரன்*

சுப்பராய பிள்ளை அவர்கள் மனம் தளரவில்லை. மூவர் பாடிய தேவார புத்தகத்தை எடுத்து இறைவனை தியானித்து, மூடிய புத்தகத்தில் ஒரு நூலை நுழைத்துப் பிரித்தார்.

பிரித்த பகுதியில் மாகரல் பதி சங்கள் இருந்தன. இறைவன் ஆணை யாகக் கருதி உடல் தளர்ந்தநிலை யிலும் மாகரல் சென்றார். கோயி லுக்கருகிலேயே வசித்தார்.

தினமும் இறைவனை தரிசிப்பதே தன்னுடைய வேலையாகக் கருதி ஞர். நடக்க முடியாவிட்டாலும் சிறு குழந்தையைப்போல் தவழ்ந்து நகர்ந்து, ஊர்ந்து சிறிது சிறிதாக நடக்கும் ஆற்றல் பெற்றார்.

இந்த அற்புதம் நிகழ்ந்த மாகரல் காஞ்சியிலிருந்து 11 கல் தொலை வில் உத்திரமேரூர் செல்லும் வழியி லிருக்கிறது.

அழகிய அமைதியான ஊர் செய் யாற்றின் கரையில் இருப்பதால் நீர்வளம், நிலவளத்திற்குக் குறை வில்லை.

முருகப்பெருமான் சூரப்பதுமனை வதம் செய்தபோது மலையன், மாக் கிரமன் என்னும் அசுரர்கள் தப்பி யோடி தண்டகவனத்தையடைந்து பல முனிவர்களைக் கண்டு வழி பட்டு, அவர்கள் ஆசிபெற்று சிவ னைக்குறித்து தவம் செய்து, ஈசனின் அருளால் வரங்கள் பல பெற்றார் கள்.

அவர்கள் மாகரல் வந்து ஈசனைப் பூஜித்துவிட்டு அருகிலுள்ள கடம்ப வனத்தையடைந்து அங்கு வேள்வி கள் பல நடத்திவந்த கச்யப மஹ ரிஷிக்குத் துன்பங்கள் பலகொடுத் தனர்.

காச்யபர் ஈசனை தியானித்து முறையிட்டார். ஈசன் அவர்முன் தோன்றி முருகப்பெருமானால் அசு ரர்களுக்கு அழிவேற்படும் என்று சொல்லி மறைந்தார்.

பரங்குன்றிலே தெய்வயானையை மணந்த பிறகு இந்திரன் அளித்த வெள்ளை யானை மீதேறி, மாகரலை அடைந்து, ஈசனை வழிபட்டு கடம்ப வனத்தை அடைந்து அங்கு ஒளிந் திருந்த அசுரர்களோடு போரிட்டு அவர்களை அழித்தார்.

கடம்பவனத்திலிருந்து வடக்குப் புரம் பார்த்து அசுரர்களைக் கொன் ஞர் முருகன். முருகன் எறிந்தவேல் அசுரர்களை அழித்தபிறகும், அவ ரிடம் வராமல் அங்கேயே நின்றது. அப்படி வேல் தங்கிய இடமே முரு னின் புகழ்பேசும் இளையனார் வேலூராக இன்றும் திகழ்கின்றது. கடம்ப வனமும் கடம்பன் கோயில் என்ற பெயரில் தெய்வீகத் தலமாக விளங்கி வருகிறது.

உயிர் பிரியும் தருவாயில் அசுரர் கள் முருகனிடம் ஒரு வேண்டு கோள் விடுத்தனர் இறைவன் குடிகொண்ட சிவத்தலத்தை தங் கள் பெயரால் அழைக்க வேண்டு மென்பதே அவர்கள் கோரிக்கை. அவர்கள் வேண்டுகோளின்படிமாக் கிரகபுரம் என்றழைக்கப்பட்ட இச் சிவத்தலம் இன்றைய நாளில் மாகரல் என்று வழங்குகிறது.

ஒருசமயம் ராஜேந்திர சோழன் தவயாத்திரையாக காஞ்சி நோக்கி வந்து கொண்டிருந்தான். தில்லை யைத் தரிசனம் செய்த பிறகு வழி யிலுள்ள சிவத்தலங்களையெல்லாம் தரிசித்துக்கொண்டு தொண்டை நாட்டையடைந்து திருஒத்துரை தரிசனம் செய்தான்.

காஞ்சியிலே உறையும் மூர்த்தி களை தரிசிக்கும் எண்ணத்தோடு காஞ்சி நோக்கி வரும் வழியில் ஒரு பொன் உடும்பு அவன் கண்ணில் பட்டது. அதைத் துரத்திச் சென்ற பொழுது அவனை அலையவைத்து

அவன் சோர்வுற்ற நிலையில் ஒரு புதரில் சென்று மறைந்தது.

புதரை அழித்துப் பார்த்த பொழுது உள்ளே புற்று ஒன்றைக் கண்டான். புற்றுக்குள் உடும்பு சென்றிருக்கும் என்ற எண்ணத்தில் புற்றை அகற்றியபோது உள்ளிருந்து குருதி கொப்பளித்தது. அரசன் மயக்கமுற்று வீழ்ந்தான்.

உடனே அங்கு அந்தணச் சிறுவன் உருவில் கணபதி தோன்றி, உடும்பு உருவில் வந்தவர் இறைவனே என்று கூறி ஒரு ஆலயம் கட்ட ஆணையிட்டார்.

தடுத்தாட்கொண்ட அவ்விறைவனுக்கு அரசன் எழுப்பிய ஆலயமே இன்று நாம் காண்பது.

கருவறையில் வீற்றிருக்கும் லிங்கத்திருவுரு உடும்பின் வால் போன்று நீண்டிருக்கிறது இது ஒரு அதிசய அமைப்பு.

ஈசனுக்கு இங்கே பன்னிரண்டு திருநாமங்கள் அவை: திருமாகறலீசுவரர், அகத்தீசுவரர், புற்றிடங்கொண்ட நாதர், உடும்பீசுவரர், அடைக்கலங்காத்தநாதர், மகப்பேறு வாழ்வித்த நாதர், மங்கலம் காத்தவர், நிலையிட்ட நாதர், பரிந்து காத்தவர், தடுத்தாட்கொண்டவர், ஆபத்சகாயர், ஆபத்தில் காத்தவர்

இக்கோயிலுக்கு முன்பு ஓர் அழகிய ராஜகோபுரம், கருப்பறையின் விமானம் கஜப்பிருஷ்ட வடிவைச் சார்ந்தது. கோயிலின் அக்னி மூலையில் உள்ள அக்னி தீர்த்தத்தில் நீராடிவிட்டு கோயிலை அங்கப் பிரதக்ஷணம் செய்தால் தீராத வினையெல்லாம் தீரும்; யமபயம் இல்லை புத்திர சந்தானம் இல்லாதவர்கள் குழந்தைச் செல்வத்தை அடைவார்கள்.

பிரம்மா, இந்திரன், காச்யபர், அகத்தியர் ஆகியோரும் இங்கே ஈசனை வழிபட்டிருக்கின்றனர். கொடி மரத்திற்குத் தென்புறத்தில் இந்திர தீர்த்தம் உள்ளது:

இக்கோயிலில் இறைவியின் திருநாமம் திரிபுவன நாயகி. மாசி மாதத்தில் பிரம்மோற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது.

பாண்டிய மன்னர்களும், தெலுங்குச் சோழர்களும் இக்கோயிலுக்கு நிறைய திருப்பணிகள் செய்திருக்கின்றனர்.

இக்கோயிலின் தலமரம் எலுமிச்சை தேவார திருப்பதிகங்களில் ஞானசம்பந்த பெருமான் பாடிய வாறு நம் வினைகள் தீர மாகறல் சென்று ஈசனை தரிசிப்போம்.

திரு. நாகராசக் குருக்கள் என்னும் இளைஞர் ஆர்வமாய் இறைவனுக்கு பூஜைகள் செய்வதோடு முகமலர்ச்சியோடு வரும் பக்தர்களுக்கு கோயிலின் தலவரலாற்றையும் சிறப்பாக விளக்கிச்சொல்லுகிறார். ○

---

### அறிஞர் அண்ணாவின் அமுதமொழிகள்

தோழமைதான் சமத்துவத்தின் சமதர்ம மணம். இதைக் காணத்தான் சாதி தொலையவேண்டுமென்று பாரதியார் சொன்னார்.

ஃ ஃ ஃ

அறிவாலும் ஆற்றலாலும் முடியாத காரியமில்லை. அறிவும் ஆற்றலும் சேர்ந்து உழைத்தால வெற்றி நிச்சயம.

ஃ ஃ ஃ

கருத்துத் தெளிவு இன்றியமையாதது. வெளியிடாமல் மனத்தில் மட்டும் உள்ள கருத்து மனிதத் தனமைககு ஏற்றதலல. அது காட்டிலே உளள ஒருமுறை

# ஆன்மீக சிந்தனை

— டி. வி வைத்தியநாதன் —

1940-ம் ஆண்டுக்கு முன்பு லக்ஷ்மிகாந்தன் என்பவரை ஆசிரியராகக் கொண்ட சென்னை அரண்மனைக்காரன் தெருவிலிருந்து வெளியான இந்துநேசன் என்ற பத்திரிகையை ஸ்ரீமான் அனந்தய்யர் என்பவர் தனக்குச் சொந்தமாக்கிக்கொண்டார்.

இவர் பிரசுரித்த இந்த பத்திரிகை பெரிய பரபரப்பை உண்டாக்கியது. மிகவும் மட்டமான சினிமா தொழிலில் ஈடுபட்ட நடிகர், நடிகைகளின் சொந்த வாழ்க்கையைப்பற்றி கன்னாபின்னா என்று எழுதினார் தனக்கென்று ஒருபாணியை வளர்த்துக்கொண்டார்.

தன் எழுத்தில் மக்களைக் கவர்ந்தார். பத்திரிகை பல்லாயிரக் கணக்கில் விற்பனை. மக்கள் ரஸனையை பலர் அந்தரங்க வாழ்க்கையை விமர்சிக்கத் தகாத பல அசிங்கமான எழுத்தில் மஞ்சள் பத்திரிகை மாமன்னனானார் திரு. லட்சுமிகாந்தன்.

சினிமா உலகம் படத் தொழிலில் கொடிகட்டி பறக்க ஆரம்பித்த காலம்.

பல நல்ல தரமான படங்கள் வெளிவந்தன. அந்தக் காலத்திலேயே வெள்ளிவிழா, பொன்விழா, வருடக்கணக்கில் என்று பல படங்கள் மக்களை தமிழ்நாடெங்கும் கவர்ந்தது.

பல படத் தயாரிப்பாளர்களையும் தன் மட்டமான ரசனையில் பலவிதமாக வர்ணித்து எழுதினார்.

பத்திரிகை உலகில் பரபரப்பை உண்டுபண்ணினார். ஆனால் மாபெரும் விரோதிகள் ஏற்பட்டனர்:

புகழ்போதையில் நடமாடிய இவர் கொலை செய்யப்பட்டார்.

ஹைகோர்டில் நடந்த இவர் கொலைவழக்கு பல சட்ட மேதைகள் வாதம் ஒரு தொடர்கதைபோல படிக்காத மக்களே இல்லை, வாதபிரதி வாதங்கள் சட்ட நுணுக்க அலசல்கள், குறுக்கு விசாரணை, சட்டமேதை வழக்கறிஞர்களின் அபார திறன் என்று ஆங்கில. தமிழ் பத்திரிகைகள் இந்த வழக்கு தினசரி படிக்க ஓகோவென்று விற்பனையானது.

இதைப்பற்றி எழுத காரணம், எழுத்தில், பிரசாரத்தில். மக்களை அணுகும்முறையில் தூய்மையான தார்மீகம் அவர்களை உயர்த்தும்.

கண்ணியக் குறைவான பல பத்திரிகைகள் இன்றும் வெளிவருகின்றன. அபவாத வம்புகள், கிசுகிசுக்கள், பேட்டி என்று தாறுமாறாக எழுதுவது பண்பல்ல; பத்திரிகை தர்மமுமல்ல.

மக்களை ஏமாற்றும் தலைசிறந்த பொழுதுபோக்காக இன்று படத் தொழில் வளர்ந்துள்ளது. சுமார் மூன்று மணி நேரம் தினசரி நான்கு

காட்சிகளில் சராசரி பல லட்சம் மக்கள் திரையைப் பார்த்து மகிழ்கின்றனர் இப்படி தினசரி லட்சக்கணக்கான மக்களை சத்தம் கூச்சல் இல்லாமல் திரைகாட்சியில், பேச்சில், பாட்டில் நடிப்பில் திசை திருப்பி அமைதியை வெளியில் காக்கிறது தியேட்டர்கள்.

பிறரை குறை கூறி வாழ்வதில் மகிழ்ச்சியில்லை. அண்டை அயலார் வீடுகளை குறைசொல்லாமல், தன் வீட்டுக் குறைகளை தவிர்ப்பதே சால சிறந்த முறை.

கலைத்தொழிலில் தங்களை அர்ப்பணித்துக்கொண்டு நாடெங்கும் கோடானுகோடி மக்களை மகிழ்ப்பவர்கள். படித்தவர், படிக்காதவர் என்ற பாகுபாடின்றி வளர்க்கும் பெரிய பிரச்சார சாதனம், வலுவான சக்தி.

முதல் அமைச்சர் பதவிக்கு உயர்த்தியது, இவர் நடித்த திரைக்கதைகள் அமைத்தவிதம், ஏழ்மையைப் புறக்கணிக்காதபண்புகள், மக்கள்திலகமென்ற நம் மதிப்புக்குரிய முதல்வர் உயர்திரு எம் ஜி. ராமசந்திரன்.

சினிமாவில் கிடைத்த ஓய்வு இன்றில்லை. அரசியல், காலநேர உணவையும் தியாகம்செய்ய வைத்துள்ளது, சதா பிரச்சனைகளைப்பற்றிய சிந்தனை. தன்னைத்தானே தன் நல்ல பண்பால் உயர்த்திக்கொண்டவர், இன்று நம் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் ஓய்வு, அமைதி, உணவு உறக்கம் எல்லாவற்றையும், தன் பெரும் பதவி பொறுப்பில் தியாகம் செய்தவர்.

சிவாஜி தன் ஐம்பது ஆண்டுகாலத்தையும் நடிப்புத் தொழிலிலே மூழ்கடித்துக்கொண்டவர். மாபெரும உலகம்போற்றும் பெரும்நடிகர். அரசியல் ஈடுபாட்டை இவரும் விரும்பிவிட்டார். பல அற்புத பாத்திரங்களில் நடிப்பாற்றல் மிக்க இவர், வாழ்க்கையில் உண்மையாக மக்களுக்கு தொண்டாற்றலாம் என்ற எண்ணம் ஏற்பட்டது மிகவும் பாராட்டப்படக் கூடியது, போற்றததக்கது.

இவ்வாறே இன்னும் பலர், நம்மிடையே கடமை தவறுமலும், கண்ணியமாகவும் வாழ்கின்றனர். தங்கள் சுயமரியாதையைப் பணயம் வைத்து, பணம் பதவி என்றுபோட்டியிட விரும்பவில்லை. அரசியல் அந்தஸ்துக்கு இன்றுள்ள நிலையில் கைதூக்கும ஒருவராக மனசாட்சியை ஏமாற்ற விரும்பவில்லை,

அரசியல் சக்தியை நாடெங்கும் பத்திரிகை மூலமாக அறிகிறோம், சட்டசபையில் செருப்பு வீசுதலும், தீவைப்பதும், கைகலப்பது போன்ற மட்டமாக நடந்துகொள்வதும் கண்ணியமா? கெளரவமா?

நாடு சுதந்திரம் பெற்றதும் மத்திய மாநில சபைகளில் நிலைசிறந்த அறிவாளிகள் பலர் அரசியல் கட்சியிலும் எதிர்கட்சியிலும் இருந்தனர். அவர்களின் கண்ணியமான வாதங்கள் மெய்சிலிர்க்க வைக்கும். சட்டசபை கூட்டம் முடிந்ததும் வாதாடிய, போராடிய இருவரும் அவ்வளவு அன்யோன்யமாக பழகி, நட்பிற்கிலக்கணமாக திகழ்வார்கள் பேச்சு சுதந்திரத்திற்கு மதிப்புவாதம், எதிர்வாதம் இரண்டிலும் ஒலிவீசும், பத்திரிகையில் படிக்க புல்லரிக்கும்.

# உருவ வழிபாடு

(சிருங்கேரி ஸ்ரீசாரதாபீட
ஸ்ரீமகாசன்னிதானம்

இறைவனை வணங்கிப் பேறு பெறுவதில் பல முறைகள் இருக்கின்றன. உருவ வழிபாடு அவற்றுள் ஒன்று. சாதாரண மக்களின் மனத்தைப் பிணித்து இறையநுபவத்தில் திளைக்கவைக்க ஓர் உருவம் அவசியமாகிறது அருவத்தை மனத்தில் நிலை நிறுத்துதல் எளிய செயல் அல்ல ஆனால் சிலர் உருவ வழிபாடு தவறானது என்று நினைக்கிறார்கள்.

ஒரு கல்லை ஆராதிப்பதனால் என்ன பயன் இருக்கமுடியும்? என்றும் அவர்கள் கேட்கின்றனர்.

ஆனால் உருவ வழிபாடு தவறான முறையல்ல, மக்களில் பெரும்பாலானவர்களுக்கு உகந்தமுறை அது தான் என்பதை நாம் பல யுக்திகளைக்கொண்டு நிரூபிக்கலாம்.

பெற்றோரை வணங்க வேண்டும் என்று சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது. பெற்றோரை வணங்குதல் என்றால் வெறும் சதையும் தசையும் கொண்ட உருவத்தை வணங்குதல் என்று பொருள்? இல்லவே இல்லை. தந்தையிடமும் தாயிடமும் உள்ள சைதன்யத்தின் மீதுள்ள அபிமானத்தினால்தான் பெற்றோர்களின் உருவத்தில் நாம் ஓர் உன்னத சக்தியைக் காண்கிறோம். அவர்களை நாம் மதிக்கிறோம்,

அதேபோல், கல்லிலான இறைவன் உருவச்சிலைகளை நாம் வணங்கும்போது அந்தச் சிலைகளைக் கல்லாக எண்ணுவது கிடையாது. நீக்க

---

இன்றைய நிலையிலும் பத்திரிகைகள் பல கோணங்களில் எதைப் பற்றியும் சுதந்திரமாக எழுதுகிறார்கள். அநியாயங்கள் மக்கள் அறியாமல் போவதில்லை. மக்கள், குறைகளை பலவிதத்தில் ஆராயப்படுவதைப் பார்க்கிறோம். மக்கள் பலர் அநியாயங்களை கண்கூடாக உணர்கின்றனர். மக்கள் எல்லோருடைய வாக்கும் பெரும்பான்மையான கசடர்களைத் தவிர்த்து நல்லவர்களை அரசாள உதவ வேண்டும் இது மாபெரும் தர்மம்,

அரசன் ஆண்டாலென்ன? ஆண்டி ஆண்டாலென்ன? என்று ஒதுங்குவது மாபெரும் அதர்மம்.

வாழ்க்கை நிறைவை நாமின்னும் உணரவில்லை. பிரதி ஐந்தாண்டு காலமும் நாம் அடுத்துக் கடக்கும் ஐந்தாண்டு, நம் கண்ணியத்தை பொருளாதாரத்தை நிர்ணயிக்கிறது.

லோகம் க்ஷேமம், நம் ஒவ்வொருவருடைய க்ஷேமம். லோகத்திலுள்ள அனைவரும் க்ஷேமமாக வாழ்வது நம் நோக்கம் என்று வேதம் உணர்த்துகிறது.

பிறருடன் சுகதுக்கங்களை நல்ல தார்மீக உணர்ச்சியுடன் எல்லோரும் சுமுகமாக, தம் மனசாட்சியை விற்காமல் வாழவேண்டும்.

*நீங்கள் உயர்வீர்கள்! நாடு உயரும்! உங்கள் சந்ததிகளின் வருங்காலம் செம்மைபடும். சிந்தியுங்கள்! செயல்படுங்கள்;*

ம்ற நிறைந்த இறைவனின் பிரதி பலிப்பாகவே எண்ணிப் போற்றி வணங்குகிறோம். தண்ணளி மிகுந்த இறைவனே அந்த உருவத்தில் நம் முன் வந்திருப்பதாகக் கருதி அபி ஷேகம், அலங்காரம் தூபம் என்று பக்தியோடு துதித்து நைவேத்யம் போன்ற உபசாரங்களை செய்து பக்தியோடு துதித்து இறைவ னுடைய திருவருளை வேண்டு கிறோம். அதுசரி, இப்படியெல்லாம் திருவுருவம் பெற்று வந்து எதற்காக பக்தர்களை ஆட்கொள்ளவேண்டும் என்ற கேள்வி எழுகிறது. பக்தர் கள் மனப்பக்குவத்துக்கு ஏற்ப இறைவன் அருள்புரிகிறான்.

நடைமுறையிலேயே பாருங்கள், தேசத் தலைவர் ஒருவரின் உரு வத்தை வண்ணக் கலவைகொண்டு அழகாகத் தீட்டிவிருக்கிறார்கள்.

அந்த உருவத்தைப் பார்க்கும் போது அனைவரும், இது எங்கள் தலைவர் என்று மரியாதையோடு மாலை அணிவிக்கிறார்கள் களிமண் ணால் செய்த அந்தச் சிலை தேசத் தலைவருக்கு உரிய மரியாதையைப் பெறுகிறது அல்லவா? அதேபோல் தான் இறைவனும் பல உருவங் களில் பக்தர்களின் மனநிலைக்கு ஏற்பக் காட்சியளிக்கிறான், பக்தர் கள் அவரை வணங்கி வாழ்த்து கின்றனர்.

ஒருவர் ஆபீஸ் செல்லும்போது பாண்ட், கோட்டு எல்லாம் அணிந்துசெல்கிறார். அதேமனிதர் சாதாரணமாக வெளியே செல்லும் போது வேஷ்டி சட்டை அணிந்து செல்கிறார். வீட்டிலிருக்கும்போது வேறுவிதமான ஆடை. ஆபீசிலே அதிகாரி, வெளியிலே சாதாரண நண்பர். வீட்டில் குடும்பத் தலைவர் இடத்துக்குத் தகுந்தாற்போல் அவ குடைய செயலும் மாறுபடுகின் றன.

அதேபோலத்தான் இறைவனும், சத்தியலோகத்தில் உயிர்களைப் படைக்கும்போது பிரம்மா, வைகுண் டத்தில் வீற்றிருந்து காத்தருளும் போது விஷ்ணு. கைலாசத்தில் தன் னுள் ஒடுக்கிக்கொள்ளும்போது சிவன் ஒரே இறைவன் தான் முத் தொழிலைப் புரியும்போது வெவ் வேறு செயல்படுவதாக நம் சாஸ் திரங்கள் கூறுகின்றன. 'ஏகைவ மூர்த்தி, பிபிதே த்ரிதைவ'

யோயோ யாம்யாம் தநும் பக்த: ச்ரத்தை யார்ச்சிதும் இச்சதி. யார் யார் எந்த எந்த உருவில் வழிபடு கிறார்களோ அந்தஅந்த உருவிலே தோன்றி அருள்பாலித்து வந்திருக் கிறான் பகவான்.

குழந்தை வடிவில் காட்சியளித் துப் பல லீலைகள் புரியும்போது பக் தர்கள் பக்தியால் பரவசம் அடை கிறார்கள். தாய் வடிவில தோன் றும்போது சக்தியாக உபாசிக்கிறார் கள். ஆகவே உருவமற்ற ஒரேபரம் பொருள்தான் பக்தர்களின் நன் மைக்காகப் பல உருவங்களைத் தாங்கிக் காட்சி தருகிறது.

கற்சிலைதானே! அதற்கு எவ் வாறு தெய்வ சாந்நித்தியம், மகிமை ஏற்படுகிறது?

ப்ரதிமாயாம் து ஸாந்நித்யம் அர்ச்கஸ்ய தபோ பலாத்.

பூஜிப்பவர்களின் தவவலிமையை நம்பிக்கையைப் பொறுத்து உருவங் களில் சாந்நித்யம் ஏற்படுகிறது என்கிறது சாஸ்திரம். அதுமட்டு மல்ல. சாஸ்திர முறைப்படி கும்பா பிஷேகம் செய்தால் ஆலயத்தில் அமைந்துள்ள கற்சிலையும் தெய்வத் தன்மை பெறுகிறது.

அச்மாபி யாதி தைவத்யம் மஹத் பி: ஸுப்ரதிஷ்டித:

வேள்வி நடத்துவதற்காக முனி வர் ஒருவர் மூன்று ஆடுகளை

விலைக்கு வாங்கிவரும்படி சிஷ்யனை அனுப்பினார். ஆடுகளை வாங்கி வரும் வழியில் வழிப்பறியில் ஈடுபட்ட மூவர் அக்காட்சியைப் பார்த்தார்கள். அந்த ஆடுகளை எப்படியாவது ஆளுக்கு ஒன்றாக அபகரித்துக்கொண்டு போக நினைத்தார்கள்

முதலில் ஒருத்தன் வந்தான். என்ன ஐயா, ஆசாரத்துடன் இருக்கும் நீங்கள் நாய்களை அழைத்துச் செல்கிறீர்களே? என்றுகேட்டான்.

உடனே அந்தச் சிஷ்யனுக்கு ஆடுகளைப் போய் நாய்கள் என்கிறானே என்ற சந்தேகம் ஏற்பட்டது ஆடுகளைத்தான் விலைக்கு வாங்கி வந்திருக்கிறேன். நாய்கள் என்று சொல்கிறாயே! போ போ! என்றான்.

சிறிதுதூரம் போவதற்குள் இன்னொருவன் வந்தான்.

ஐயா, ஏன் இப்படி உங்களுக்கு புத்திமாறிவிட்டது? நீங்கள்நாயைத் தொட்டாலே ஸ்நானம் செய்வீர்களே? எதற்கு நாய்களை அழைத்து போகிறீர்கள்? என்ன அநியாயம்? என்றது.

சிஷ்யனின் சந்தேகம் வலுத்தது. ஆனாலும் விட்டுக் கொடுக்காமல், இல்லையப்பா, ஆடுகளைத்தானே வாங்கி வந்திருக்கிறேன் என்றான். இன்னும் சிறிது தூரத்தில் மூன்றாமவன் வந்து நமஸ்காரம் செய்தான்.

சாமி, ஆசாரமாகத் திருநீறு பூசிக்கொண்டு கையில் தர்ப்பைப் பை, கமண்டலம் ஆகியவற்றுடன் மூன்று நாய்களை இழுத்துப் போகிறீர்களே; இப்படி செய்யலாமா? என்றான்.

அந்தச் சிஷ்யனின் மனம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது மூன்று பேரும் ஒரேமாதிரி செல்லும்போது

கோவணத்தை இழந்தவன் கல்விபடுவான, கொள்ளையை இழந்தவன் மந்திரியாவான

—கவிஞர் கண்ணதாசன்.

கனி இருப்பது ரசம் பருக, மலர் இருப்பது மணம் நுகர, வாழ்க்கை இருப்பது இன்பக்கேணியில் குளிக்க.

—அமரர் அறிஞர் அண்ணா.

அன்புப பொக்கிஷம் பெண் இதை பல கயவர்கள் கொள்ளையிட துடிக்கிறார்கள். —மகாபாரதம்.

---

அது உண்மையாகத்தான் இருக்கும். விற்றவன்தான் என்னை ஏமாற்றி நாய்களைக் கொடுத்துவிட்டான். நான் ஆடுகள் என்று ஏமாந்தேன். முன்வினையின் பயன்தான் இது என்று எண்ணி அந்த மூன்று பேர்களையும் கூப்பிட்டு நாயைக் கொடுத்துவிட்டுப் போய் விட்டான்.

இப்படிக் கண்ணுக்குத் தெரியும் ஒரு பொருளின் விஷயத்திலேயே மூன்று தடவை சொன்னால் நம் பிக்கை உண்டாகி மனம் மாறிவிடுகிறது. ஆனால் மகான்களின் வாக்கு பொய்க்காது,

கற்சிலையானாலும் அதை முறைப்படி வழிபட்டால் அதில் கடவுளைக் காணமுடியும். அப்படி கண்டு பல பெரியோர்கள் நமக்கு வழிகாட்டியிருக்கிறார்கள் இன்றைக்கும் பல்லாயிரக் கணக்கான மக்கள்தெய்வ திருவுருவங்களை வழிபட்டு கடவுளின் அருளைப் பெற்றுவருவது கண்கூடு.

பச்சை மாமலைபோல் மேனி பவளவாய் கமலச்செங்கண், என்று பக்தர் பாடி மெய்யுருகி நிற்கும் காட்சியை நாமும் கண்டு இன்புற உருவ வழிபாடு வழிகாட்டுகிறது.

தொகுப்பு : சேது, சென்னை

# குமாரி சந்தியாவின் நடனம்



ஸ்ரீமதி கௌசல்யா—ஸ்ரீகிருஷ்ண சாமி தம்பதிகளின் அன்புமகளும், நடன ஆசிரியை ஸ்ரீமதி இந்திரா ராஜன் அவர்களின் மாணவியுமின குமாரி சந்தியாவின் நடன அரங்கேற்றம் அண்மையில் சென்னையில் நடைபெற்றது.

செல்வி சந்தியாவின் நடனம் சிறப்பான முறையில் இருந்தது. குறிப்பாக ஏழு ராகங்களில் மிருதங்க வித்வான் பந்தநல்லூர் ஸ்ரீ சீனிவாசன் அவர்களால் அமைக்கப்பட்ட வர்ணம் பாராட்டும்படி இருந்தது. ஆசிரியை திருமதி இந்திரா ராஜன் அவர்களின் கோர்வையான ஜதிகளின் அமைப்புக்குத் தக்கபடி தாளம் தவறாமல கச்சிதமாக ஆடிய சந்தியாவைப்பாராட்டுகிறேன்.

அடுத்து தில்லானா, பதம் முதலிய அயிட்டங்கள் பாவம் குன்றாமல், லயசுத்தமாக இருந்தது.

பல இடங்களில் மறைந்த மாமேதை தண்டாயுதபாணி அவர்களின் முத்திரை பளிச்சிட்டது.

பின்னணி பாடிய ஸ்ரீமதி கௌரி-சுபாஷிணி இவர்களின் இசையுடன் தெளிவான பதப்பிரயோகங்களுடன் நடன நிகழ்ச்சி முன்னணியில் இருந்தது அவ்வளவு அருமையாக அமைந்துவிட்டது.

இந்த நிகழ்ச்சி ஸ்ரீலட்சுமி விஸ்வனாதன், நடிகர் நாகேஷ் இவர்களின் முன்னிலையில் நடைபெற்றது.

சந்தியாவின் சாஸ்திர சுத்தமான நடனத்தை யாவரும் பாராட்டினார்கள்.

இம்மாதிரி உணர்ச்சி பாவத்துடன் ஆடும் இளம் நடனமணிகளுக்கு மேலும் ஊக்கமளிக்க கலைவளர்க்கும் சபாக்காரர்கள் நிறைய ஆதரவு தரவேண்டும்.

தன் அன்புச் செல்வத்தின் நடனத் திறமையை வளர்க்க மேலும் நல்ல முறையில் பெற்றோர்களும், நடன ஆசிரியையும் முயற்சி எடுக்க வேண்டும்.

கலைக்கடவுளான ஆடும்கூத்தன் நடராஜப்பெருமானை வேண்டி குமாரி சந்தியாவிற்கு நல்லாசிகூறி வாழ்த்துகிறேன்.

—குண்டூசி ராதாகிருஷ்ணன்

# திருக்கடவூர் வாழும் அபிராமி

திருக்கடவூர் வாழும் அபிராமியே—உன்
திருக்கோயில் நாடிவந்தேன் சிவகாமியே
ஒருமுறை பார்த்தாலும் அருளவீசியே
உயர்ந்திட வழிதருவாய் திரிசூலியே—வாழ்வில்
உயர்ந்திட வழிதருவாய் குணசீலியே

அபிராமியே.........அம்மா.........அபிராமியே

காரிருள்நீக்க வானில் நிலவைத்தந்தாய்—காலன்
காலனை ஓட்டியே உயிரைத் தந்தாய்
குங்குலிய தீபம் இட்டான் கோயிலிலே—அவன்
குலம்காத்து வளம்தந்தாய் வீட்டினிலே
உனையன்றி துணைஏது சிவகாமியே
அபிராமியே.........அம்மா.........அபிராமியே

ஆயிரம் கண்கொண்ட சிவசக்தி—அன்னை
அபிராமி நீயேதான் ஓம்சக்தி
பரதிசிவன் ஆகிநின்ற தேவி உமையே—அருள்
ஆதிஒளி ஆகிநின்ற ஜோதிவடிவே
அபிராமியே.........அம்மா.........அபிராமியே
அபிராமி......துணைநீயே......அபிராமியே

# அகிலமெல்லாம் சக்தி ஒளிவடிவம்

அகிலமெல்லாம் சக்திஒளி வடிவம்—அவள்
ஆயிரம் ஆயிரம் எழில வடிவம்

காஞ்சியில் காமாட்சி அருளாட்சி—கங்கா
காசி விசாலாட்சி திருக்காட்சி
மதுரையில் மீனாட்சி அரசாட்சி—தேவி
வேற்காட்டில கருமாரி கண்ஆட்சி (அகில)

சொர்ணமே தந்திடும் சொர்ணம்பிகை—எழில்
கொல்லூரில அவள்தானே மூகாம்பிகை
ஒற்றியூரில ஒயிலாக வடிவாம்பிகை—அழகு
மயிலாக நடமாடும் கற்பகாம்பிகை (அகில)

—கவிஞர் லால்குடி ரங்கராஜன்

## பெண்களுக்கு மட்டும்

# நக்ஷத்திர குணங்கள்

### உத்திராட நட்சத்திரம்

இருபத்தேழு நக்ஷத்திரங்களில் இருபத்தோராமிடம் பெற்றது உத்திராட நக்ஷத்திரமாகும். இது தேவர்களில் முதன்மைக் கடவுளாக விளங்கும் ஸ்ரீவிநாயகரின் அம்சமாகும். மைசூரைத்தில் ஒரு காணி நிலமும், உத்திராடத்தில் ஒரு குழந்தையும் என்பது இந்நட்சத்திரத்தின் பெருமையை விளக்கும். ஊரின் ஓரத்தில் அமைந்துள்ள நிலத்தை மதிப்பிட முடியாததுபோல உத்திராடத்தில் பிறந்த பெண்களை வர்ணிக்க இயலாது. உத்திராடப் பெண்கள் உற்சாகமானவர்கள்.

இத்தகைய உத்திராட நக்ஷத்திரத்திற்கு நக்ஷத்ராதிபதி பாஸ்கரன். மானுஷயகணம், ஸ்ரீ நட்சத்திரம். அக்னி தத்துவம், ரஜஸ குணம்.

இந் நக்ஷத்திரத்தில் பிறந்த பெண்கள் குட்டையான வடிவத்தைப் பெற்றவர்கள். அழகு, கல்வி, விலைமதிப்பில்லாத ஆடை, ஆபரணங்கள், நீலநிறமுடைய ஆடைகள் அணிவதில் விருப்பமுடையவர்கள் இவர்கள் இருக்கும் இடமே கலகலப்பாக இருக்கும். எத்தகைய துயரம் உடையவர்களையும் க்ஷண நேரத்தில் சிரிக்கச் செய்பவர்கள். வாழ வைக்கும் வனிதா சிரோமணிகள். இவர்கள் பிறந்த 4, 8, 10, 12, 18 வயது முதல் தாய் தந்தையரின் வாழ்க்கை நிலை உயர்ந்து கொண்டே செல்லும்.

நேர்வழியையே கடைபிடிப்பவர்கள். உணவை வர்ணித்து உண்ணும் சபலகுணமுடையவர்கள். மிளகாயில் காரம் இல்லை என சொல்பவர்கள். கோதுமை பண்டங்களைச் சாப்பிட விருப்புவார்கள். எத்தகைய கஷ்டமானாலும் துச்சமாக எண்ணி உதறித் தள்ளிவிடுபவர்கள்.

சிலர் இறந்த பாம்பை அடிக்கும் வீராங்கனைகள் இவர்கள் கணவன்மார்கள் இவர்களிடம் படும் துயரங்கள் அனைத்தும் புனர் ஜன்மம் எடுத்ததுபோல்தான் புதல்வர்களும் அகடவிகடமான வழியில் செல்பவர்கள் எந்தநேரமும் தூங்கிக்கொண்டே காலத்தைக் கழிப்பார்கள். கணவன் சாப்பாடுபோட அழைத்தால்கூட எடுத்துப் போட்டுக்கொண்டு சாப்பிடுங்களேன் என அக்கறை இல்லாமல் கூறுவார்கள் இருக்கும் இடத்திலிருந்து அதிகாரம் செய்வார்கள் இவர்களிடம் வார்த்தைகளைவிட்டுவிட்டு மீளுவது மகாகடினம்.

இன்னும் சிலர் சமயோசித குணத்தை உடையவர்கள். இவர்களிடம் ஒரு ரகசியத்தைக் கூறினால் காற்றடி பறப்பதுபோல் பறந்துவிடும்; இவர்களிடம் மிக எச்சரிக்கையாக செல்லுதல் வேண்டும். நெருப்பைவிட பயங்கரமானவர்கள்.

இவர்களின் புதல்வர்களுக்கு பிரகாசமான வாழ்க்கையமையும், எட்டாத விஷயங்களுக்குக்

A. ராகவய்ய ஜோஸ்யர் - திருவள்ளூர்

கோட்டை கட்டுவார்கள். கடன் காரர்களுக்கு கற்கண்டு போலபேசி அனுப்புவதில் கெட்டிக்காரர்கள். இன்று நடப்பதைப் பாருங்கள்— நாளைப்பற்றி இன்றைக்கென்ன? என நினைப்பார்கள்.

## முதல் பாதம்

இப்பாதத்தில் பிறந்தவர்கள் அழகுடையவர்கள் கல்விப் பிரியர்கள். இவர்களுடைய தோற்றங்களில் அனைவரும் மயங்கிவிடுவார்கள். இவர்களுடைய எண்ணங்கள் திரவியத்தைத் தேடுவதே திரைகடல் சென்று திரவியம் தேடு என்னும் பழமொழி இவர்களுக்குப் பொருந்தும். காரியத்தில் கண் உடையவர்கள்,

## இரண்டாம் பாதம்

கல்விக் கலைகளில் ஊக்கமும், கலைகளை விருத்தியாக்கும் எண்ணமும் உள்ளவர்கள். தாய்சேய் நல விடுதிகள் கட்டுபவர்கள். தர்ம சாலைகளை ஸ்தாபிப்பவர், குறிப்பாக ஏழை பங்காளிகள் என்றும் கூறலாம். தானங்கள், தர்மங்கள் மீது ஆசை உடையவர்கள். சகல சாஸ்திர புராணங்களை அறிந்தவர்கள். கற்பனை உலகத்தில் வசிப்பவர்கள்.

## மூன்றும் பாதம்

எப்போதும் உதவி செய்தவர்களையும், வித்தையைக் கற்பித்தவர்களையும், வழிகாட்டியவர்களையும் தூற்றுபவர்கள். கொடூரமான செயல்களுக்கு அஞ்சாதவர்கள். பொறுமையுள்ள குணத்தை உடையவர்கள். நயத்தோடு பேசி பிறரை சிக்கலில் அகப்படச் செய்து வேடிக்கை பார்ப்பதில் பேரானந்தம் கொள்வர்.' தன்னைத்தானே புகழ்ந்துகொள்ளும் குணமுடையவர்கள்.

## நான்காம் பாதம்

பொன்னிறமான மேனி, பட்டாடை மீது விருப்பம், அலங்காரமான வீட்டில் வாசம், சாமர்த்தியமான குணம் உடையவர்கள். சீறிவரும் நாகம்கூட இவர்களைக் கண்டதும் அடங்கிவிடும் இப்பெண்கள் எத்துறையிலும் தோல்வி காணமாட்டார்கள்.

இந்நட்சத்திரத்தில் பிறந்தபெண்களுக்கு அனைத்துநாட்களும் அனுகூலமானவை எனினும் 1, 10, 18 தேதிகளில் எச்சரிக்கைத் தேவை. 28, 37, 46 வயதுகளும், சூரியன், சந்திரன், செவ்வாய், ராகு, குரு தசைகளும் நன்மைகளை உண்டாக்கும்.

சனி, புதன், கேது தசைகள் இடையூறுகளை உண்டாக்கும். இடையூறுகளுக்கு ஞாயிறன்று அனுமார் கோயிலுக்கு சென்று வலம் வருதலும், சூரிய நமஸ்காரமும் சிறந்த பயன்களைக் கொடுக்கும்.




பக்த மீரா அருளிய




(ஸ்ரீனிவாஸ ஜகந்நாராயணன்)

பாடல் : 72

அன்புத் தோழீ, என் ஆருயிர்க் காதலரைக் காண்பதற்கு என் கண்கள் ஆசைகொண்டு தாகம் எழுந்தாற்போல அலைகின்றன. அவரைக் காண நான் எப்போதும் வழிமேல் விழிவைத்தவளாகவும், பெருந்துக்கத்தை அடைந்தவளாகவும இருக்கிறேன். புதிதாக இருக்கும் மரக்கிளைகளின் மீது குயில் அமர்ந்துகொண்டு மதுரமாக ஒலி செய்கின்றபோது, என் துக்கம் அதிகரிக்கின்றது என் காதலார்வங்கள் அதிகரிக்கின்றன. இந்தக் காதலைப் பார்த்த மக்கள் என்னைக் கேலிசெய்கிறார்கள். என்னை அடக்குகிறார்கள். திட்டுகிறார்கள்.

மீரா சொல்கிறாள்: நான் மக்களின் அடக்குதலையும், கேலியையும் பொருட்படுத்தவில்லை நான் கண்ணபெருமானின் அடிமைதான் முன் பிறவிகளில் விற்கப்பட்டுவிட்டேன். ஆகவே நான் எக்காலத்திலும் அடிமை.

பாடல் : 73

யோகீ, ஏ கண்ணா! என்னை விட்டு அகன்றுவிடாதே! ஒருக்காலும் போய்விடாதே நான் உன்னுடைய அடிமை. உன் திருவடித் தாமரைகளைப் பிடித்துக்கொண்டு, மிகவும் கெஞ்சிக் கேட்கிறேன். காதலன் பிரேமநெறி மிகக் கடினமாக இருக்கிறது எளிதாக என்னால் தெரிந்துகொள்ள முடியவில்லை ஆகையால், அந்தநெறியை எனக்கு அறிவிப்பாயாக.

எனக்கு அருள்மொழி ஒன்று வழங்கு நான் உன் விரகதாபத்தினால் மிகவும் நொந்துபோயிருக்கிறேன். உன்னை அடையாமல் உயிர் வாழ விரும்பவில்லை. இதனால் மணமுள்ள சந்தனம், அகர்பத்தி முதலிய மணக்கும் பொருள்களால் சிதை ஒன்று எனக்கு அடுக்கியிருக்கிறேன். அதற்கு உன் கைகளால் நெருப்பு வைத்து எரித்துவிடுங்கள். நான் அந்த சிதையுடன் எரிந்து சாம்பலாகி விடுகிறேன். அந்தச் சாம்பலை நீ எடுத்து உன் உடம்பு முழுவதும் பூசிக்கொள். உன் ஆன்ம ஒளியுடன் என் ஆன்ம ஒளியும் கலந்துவிடும். நான் என் அங்கங்களில் படிந்து அங்கமாகி விடுவேன் ஒன்றறக் கலந்துவிடுவேன். ஜோதிர்மயமாகி விடுவேன்

பாடல் : 74

கிரிதர்லால் என்னைக் கவர்ந்து விட்டார். அந்தப்பிரபுவின் அடிமை

மீரா வேண்டுதல் செய்கிருள். என்னுடைய பிரபு, கண்ணபக வான், பேரருள் வள்ளல். ஐம்பத் திரண்டு உணவு வகைகளும், முப் பத்தாறு வகை வியஞ்சன வகை களும் அந்த வைகுண்ட வாசிக்குக் கிடைக்கும் அப்பேற்பட்ட இனி மையான அரசபோகங்களை என் பிரபு கிரிதரநாகர் கவர்ந்துகொண் டார். இவற்றையெல்லாம் என் பிரபுவின் முன்பு வைத்தாகிவிட் டது.

மீரா சொல்கிருள், ஏ பிரபு! நான் உன் அடிமை உம்முடைய திருவடி களைத் தஞ்சமாக நான் அடைந் திருக்கிறேன். சீக்கிரமாகவே எனக்கு அருள் செய்யும். காட்சி யருளச் செய்து, என்னை ஆட் கொள்ளும்.

பாடல் : 75

ஏ பேரன்பு வாய்ந்த கண்ணு! என்னை விட்டுவிட்டு நீ சென்று விடாதே! நான் ஓர் அபலை ஏழை, ஒடுங்கிய நிலையிலிருப்பவள். நீ தான் என்னைக் காப்பாற்றவேண் டும். எனக்கு நீதான் வலிமை. எனக்கு நீதான் உலகத்திலுள்ள சிறந்தபொருள். நான் குறையுள்ள வள். நீரோ நிறையுள்ளவர் இந்த உலகத்தில் ஏற்படும் பற்றுகளை நீக்குவீர். துன்பங்களைப் போக்கு வீர். என் அச்சங்களைத் தவிர்ப்பீர்; முன் காலத்தில் நீர் யானைகளின் அரசனுன கசேந்திரனைக் காப்பாற் றினீர். எல்லாவிதத்திலும் தோல்வி யடைந்து, பற்றின்றி வாழ்வில் விருப்பமில்லாமல், நான் உம் திரு வடிகளைப் புகலிடமாக அணுகி யிருக்கிறேன், அடைக்கலம் தந் தருள்வீர்.

ஏ மணிவண்ணு, உம்மை விட்டு நான் எங்கே செல்வேன்? மீரா சொல்கிருள், பிரபு, உம்மை விட்டு மீராவுக்கு வேறு கதியில்லை; என்னை உம்முடைய திருவடிகளில் எடுத்து வைத்துக்கொண்டு என் மானத் தைக் காப்பாற்றும். என்னை ஏற்று கொள்ளும்.

பாடல் : 76

ஏ கண்ணு, நீர் என்னை எவ் வளவு தூரம் காதல் செய்யும்படி தூண்டிவிட்டு, இப்போது எங்கு செல்கிறீர்? உம்மைப் பார்க்காமல் என் மனம் கொதித்துப் போய், உயிர் போவதற்கு முன்பு நடுநடுங் குவதுபோல, நான் துக்கத்தை அனுபவிக்கிறேன், உம்மை எப்ப டியும் அடைந்தே தீருவன், உலகக் கட்டிவிருந்து விடுபட்டு, மன உறுதியுடன், முனிவரைப் போல ஆகிவிடுவேன். காசிக்குப் போய் துறவினியாக (சந்யாசினி யாக) மாறிவிடுவேன், மீரா சொல் கிருள், என் பிரபு கிரிதரநாகர், நான் அவருடைய திருவடிகளில் புகலடைந்த அடிமை.

தொகுப்பு: ஏ.எஸ்.எம். சென்னை

இன்றைய நாகரிகத்தின் சாம்பல் எதிர்கால நாகரிக மாத் திற்கு உரம், —கேசவதேவ்.

உனது விடுதலைக்கு வழி உன்னிடம்தான் இருக்கிறது.—புத்தர்.

# நவக்ரஹ சாந்திகள்

## 7. சனீஸ்வரன்

முனிவர்கள் தேவர் ஏழைமூர்த்திகள் முதலானோர்கள்
மனிதர்கள் சகல வாழ்வு உன் மகிமையல்லால் வேறு உண்டோ?
கனிவுள தெய்வம் நீயே! கதிர் சேயே காகம் ஏறும்
சனியனே உனைத் துதித்தேன் தமியனேற்கருள் செய்வாயே.

சூரிய பகவான் த்வஷ்டா எனும் தேவ சிற்பியின் மகளான ஸம்க்ஞா என்பவளை மணம்செய்து கொண்டான். இந்த உத்தம தம்பதிகளுக்கு வைவஸ்தமனு, யமன், யமுனை என்னும் மூவர் மகவாகப் பிறந்தனர். ஆனால் ஸமக்ஞாதேவி சூரியனுடைய வெப்பத்தைத்தாங்க முடியாமல் தன் தந்தை வீட்டிற்கு போக எண்ணினாள்.

சூரியனுக்குத் தெரியாமல் போக எண்ணித் தன் நிழலையே ஒரு பெண்ணாகச் செய்துவிட்டுச் சென்றாள். அவ்விதம் நிழலில் தோன்றியவளே சாயாதேவி. சாயாதேவியை ஸம்க்ஞாதேவி என்று எண்ணி சூரியனும் அவளுடன் இன்புற்றதால் சாவர்ணி மனு, சனி பகவான், பத்ரை என்ற பெண் ஆகியோர் அத்தம்பதிகளுக்குப் பிறந்தனர்.

சனீச்வரர் காசிக்குச் சென்று லிங்கம் அமைத்து வழிபட்டு காசி விஸ்வேச்வரர் அருளினால் கிரகப் பதவியை அடைந்தார் என்று காசி காண்டம் என்ற நூல் கூறுகிறது.

சனீச்வரருக்கு ஒரு கால் சற்றே சிறுத்து இருக்கும் யமன் தனது தண்டத்தால் அடித்ததால் இது ஏற்பட்டது என்பர். எனவே இவர் மந்த கதியில் மெல்ல நடப்பதால் சனை : சரன் – சனைச்சரன் என்ற காரணப் பெயருக்கு உரியவரானார். 12 ராசிகளில் இவரது ஸஞ்சாரம் மிக மெதுவாக நடப்பதாலும், சனைச்சரன் என்ற பெயருக்குரியவரானார். சனீச்வரனுக்கு குளிகன் என்றொரு மகனுண்டு என்று அபிதான சிந்தாமணி கூறுகிறது.

ஆகமங்கள் சனீச்வரனை கருநிறத்தவரென்றும், கரிய ஆடை அணிபவரென்றும், ஒருகால் முடமாக அமைந்தவரென்றும், இருகரம் உடையவரென்றும் வலக்கரத்தில் தண்டமும், இடது கரத்தில் வரத முத்திரையும் தாங்குபவரென்றும் பத்ம பீடத்தில் வீற்றிருப்பவ

ஸ்ரீ குருவாயூரப்பதாஸன் B. சுந்தரராமன், M.A., B.Ed.,

ரென்றும் பலவாறும் கூறப்படுகின்றன விஷ்ணுதர்மோத்தரபுராணம் சனீச்வரர் தம் கரங்களில் தண்டமும், அக்ஷமாலை என்னும் ஜபமாலையும் உடையவரென்றும் எட்டுக் குதிரைகள் பூட்டிய இரும்பு ரதத்தில் பவனி வருபவரென்றும் பலவாறும் கூறப்படுகிறது.

சனி பகவான் வில்லைப்போன்ற ஆசனத்தில் வீற்றிருப்பவரென்றும் கழுகு வாகனம் உடையவரென்றும் மேற்கு நோக்கி வீற்றிருப்பாரென்றும், நீலமேனி உடையவரென்றும், ஆலமும், வில்லும், வரதமும், அபயமும் ஆகிய நான்கு திருக்கரங்கள் உடையவரென்றும், கருஞ்சந்தனந் தரித்து, கருமலரையும், கருநிறக் கொடியும் குடையும் கொண்டவரென்றும், சௌராட்டிர தேசத்தில் தோன்றியவரென்றும் நவகிரக மண்டலத்தில் சூர்யனுக்கு மேற்கே தனுசின் உருவம்கொண்ட மண்டலத்தில் உறைபவரென்றும், நவகிரக ஆராதனம் என்ற வடமொழி நூல் கூறுகிறது.

சனி பகவானுக்கு தமிழ்நாட்டில் எங்கும் காக்கையே வாகனமாகச் சொல்வது வழக்கமாக உள்ளது கோயில்களிலும் காக வாகனமே அமைத்திருக்கிறார்கள் ஆனால், வடமொழியில் உள்ள தியான சுலோகங்கள் பலவற்றிலும் கழுகே சனியின் வாகனமாகக் கூறப்பட்டிருப்பதைக் காண்கிறோம். சிசிர ருதுவின் தலைவர் சனிபகவான். சனிக்கு மந்தன், பிணிமுகன், முதுமகன், முடவன், காரி என்னும் பெயர்கள் பழந்தமிழ் இலக்கியங்களில் காண்கிறோம்.

சனி பகவான் இளைத்த மெல்லிய உடம்பு உடையவர் என்பதை நிர்மாம்ஸகாத்ரன், சுஷ்கன், சுஷ்கோதரன் என்ற அவரது அஷ்டோத்ர நாமங்கள் எளிதில் புலப்படுத்தும். வன்னி மலரில் இவர் பெருவிருப்பம் உள்ளவர். எனவே சமீபுஷ்ப ப்ரியன் என்றழைக்கப்படுகிறார். சனீச்வரர் ஜடாதரன் என அழைக்கப்படுவதால் அவர் நீண்ட சடையுடையவர் என்பது தெரியவருகிறது.

சனிக்கு உரிய திசை மேற்கு; உலோகம்-இருப்பு, மணி-நீலம், தான்யம்-எள், மலர்-கருங்குவளை. சுவை-கசப்பு, ராகம்-யதுகுல காம்போதி, குணம்-தாமதம்.

முத்துசாமி தீட்சிதர் இயற்றிய நவக்கிரக கீர்த்தனை மூலம் பல புதிய செய்திகள் கிடைக்கின்றன.

யமதண்டத்தால் அடிபட்டு கால் முடவன் ஆனவன சனி என்று கூறுகிறார். பரமேச்வரனுடைய கடைக்கண் நோக்குக்கு ஆளான சிவனடியார்களைத் துன்புறுத்தாது சனி வியக்கத்தக்க நல்ல பலன்களைச் செய்பவரென்றும், குருகுஹனான முருகனுக்கு நண்பரென்றும், எள் கலந்த உணவிலும், நல்லெண்ணை விளக்கிலும் ஈடுபாடுடையவரென்றும், வணங்கிப் பணிந்த அன்பருக்குக் காமதேனு போன்று கேட்ட பயனை அள்ளித் தருபவரென்றும், காலச் சக்ரத்தைப் பிளப்பதில் கதிரவன் போன்றவரென்றும் முத்துசாமி தீட்சிதரின் திவாகரதனுஜம் என்ற நவக்கிரக கீர்த்தனை பல புதிய செய்திகளைக் கூறுகிறது.

சனி கிரகத்தின் அதிதேவதை யமன். பிரத்யதி தேவதை பிரஜாபதி எனப்படும் பிரம்மா ஆவார். சனியின் சக்தி நீலா எனப்படும் ஜ்யேஷ்டாதேவியாவார் சாஸ்தாவாகிய ஐயப்பனை வணங்கவும், திருமலை வேங்கடவனை வணங்கவும் சனீஸ்வர பிரீதியேற்படும்.

சனிச்வர க்ஷேத்திரம் திருநள்ளாறாகும். இது குடந்தை-காரைக்

கால் சாலையில் உள்ளது. பேரளம் புகைவண்டி நிலையத்திலிருந்து ஏழு மைல் உள்ளது.

நள்ளாறு? என நம்வினை நாசமே! என்று அப்பர் சம்பந்தர் முதலியோர் கூறுவதாலும் இங்குள்ள சனீச்வரனின் பெருமை சொல்ல வொண்ணாதது.

இங்குள்ள சிவபெருமான் சன்னதிக்கும் அம்பாள் சன்னதிக்கும் நடுவில் சனீச்வரன் அமைந்திருப்பது சோமாஸ்கந்தர் போன்ற அமைப்பில் இருப்பதால் சிவபார்வதியுடன் கூடிய ஸ்கந்தனுக்கு ஒப்பாக அனுக்கிரக மூர்த்தியாக சனி பகவான் விளங்குகிறார்.

சனி பகவானுக்குரிய காயத்ரி,

ஓம் காகத்வஜாய வித்மஹே கட்க ஹஸ்தாய தீமஹி தன்னோ மந்த: ப்ரசோதயாத் என்பதாகும்.

சனைச்சரனை வேதம் பின்வருமாறு துதிக்கிறது.

ஓம் சமக்னிரக்னிபி: கரச் சம்ன்
ஸ்தபவு ஸூர்ய :
சம்வாதோ வாத்வரபா அபஸ்த்ரித;

என்னும் வேத மந்திரத்திற்குரிய ரிஷி ரிம்பிடி என்பவராவர். தேவதை சனைச்சரன் சந்தஸ் உஷ்ணிக். சனி கச்யப கோத்ரத்தினர்,

சனைச்வரனை ப்ரீதிசெய்ய கூர்மாவதாரத்தை தசாவதாரங்களில் துதிப்பது விசேஷமாகும். சனைச்வரனைக் குறித்து ராஜாதசரதர் எழுதிய சுலோகத்தில் வரும் கீழ்க்கண்ட 16 நாமங்களைதினந்தோறும் படித்து சனிவாரத்தில் ஒருவேளை மட்டும் ஆகாரம உண்டு கருப்பு அல்லது நீல புஷ்பங்களால் சனி பகவானை பூஜித்து, கருப்புநிற வேதியருக்கு அன்னம்-தக்ஷிணை ஸமர்ப்பித்தால் சனி கெட்ட ஸ்தானத்திலிருப்பினும் நன்மையே செய்வார். சுலோகம் பின்வருமாறு:

கோணச் சனைச்சரோ மந்தா
சாயா ஹ்ருதய நந்தன:



மார்த்தாண்ட ஜஸ்ததா ஸௌரீ:
பாதாங்கிர் க்ருத்ரவாஹன:
ப்ரம்மண்ய க்ரூர கர்மாச
நீல வஸ்த்ராஞ்ஜனத்யுகி:
கிருஷ்ணோ தர்மானுஜச்சாந்த:
சுஷ்கோதர வரப்ரத:

இதைத் தவிர ஜாதகத்தில் சனி நீசனுகவோ, தோஷமுள்ளவனுகவோ இருந்தாலும், கோசார ரீதியாக 1, 2, 8, 12 ஆகிய இடங்களில் இருந்தால் ஜீவனத்திற்குக் கஷ்டம், வழுக்கி விழுதல், கைகால் தலை இடுப்பு ஆகிய இடங்களில் அடிபடுதல் ஆகியவை ஏற்படும்.

இவைகளைத் தவிர்க்க இரும்பினுல் செய்த சனியின் பிரதிமையை (விக்ரகம்) வன்னித்தழையால் அர்ச்சித்து எள் கலந்த உளுந்து அன்னத்தை நிவேதனம் செய்து அந்தச் சனியின் இரும்பு விக்ரகத்தைக் கருப்புநிற பிராம்மணனுக்கு நிறைய தக்ஷிணையுடன் தானம் செய்வது நல்லது.

செல்வந்தர்கள் கருப்புப் பசுவையும் எருமை மாட்டையும் கருப்பு வஸ்திரத்துடன் தானம் செய்வது நல்லது. ஸ்ரீ ஆஞ்சநேயரை பிரதி சனிவாரம் நல்லெண்ணை அபிஷேகம் செய்வித்து சிந்தூரம சார்த்தி எள் அன்னம் நிவேதனம் செய்ய சனிபகவான் பிரீதியடைவார்.

சனிக்கு ஆல் இலையில் கருமை நிறமுள்ள சோற்றை மேற்குதிசையில் கிரகபலியாகத்தர திருப்தி அடைவார். ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் சுந்தரகாண்டம் பாராயணம் செய்துவரலாம். முழுவதும் பாராயணம் செய்ய முடியாதவர்கள் 38, 48, 54 ஆகிய ஸர்க்கங்களை பாராயணம் செய்ய சனீச்வரன் திருப்தியடைவார்.

சாட்டர்ன் என்றழைக்கப்படும் சனியை மேல் நாட்டார் செயின்ட் பீட்டர் என்று அழைக்கின்றனர். சொர்க்கம் அல்லது நரகத்தை ஒருவனுக்குத் திறந்துவிடுபவர் இவரே நாம் சனிக்கு உரிய நிறம் நீலம் என்கிறேம். ஆனுல் மேல் நாட்டார் கருப்பு, அழுத்தமான பழுப்பு. இண்டிகோ என்னும் வண்ணங்களைக் குறிப்பிடுகின்றனர்.

சனீச்வரனின் அருள் வேண்டித் திருமலை வேங்கடவனின் திருப்பாதங்களை விடாமல் பற்றுவோமாக:

வைகுண்ட ஸ்தோ ஹரி: ஸாக்ஷாத்
வர்த்ததே வேங்கடாசலே
வேங்கடேசஸ் ஸமோ தேவோ
நாஸ்தி நாஸ்தி மஹீதலே ○






பகவானுடைய பெருமையும் காருண்யமும், அருளும் தியாகராஜரால் வெகுவாகக் கொண்டாடப்படுகிறது. தனது இஷ்ட தெய்வமாகிய ஸ்ரீராமனிடம் எல்லா வைபவங்களையும் காண்கிறார் அவர்'

ரகம் : காபி நாராயணி தாளம் : தேசாதி

*பல்லவி*

ஸரஸ ஸாம தான பேத தண்ட சதுர
ஸாடி தெய்வ மேவரே? ப்ரோவவே (ஸ)

*அனுபல்லவி*

பரம சாம்பவாக் ரேஸரும் டகுசு
பலுகு ராவணுடு தெலியலேக போயே (ஸ)

*சரணம்*

ஹிதவுமாட லெந்தோ பாக பல்கிதிவி
ஸதமுகான் அயோத்ய நித்துநண்டிவி
நத ஸஹோதருனே ராஜு°சேஸி, ராக
ஹுதமு ஜேஸிதிவி; த்யாகராஜனுத (ஸ)

ஏ ராமச்சந்திரா! அர்த்த சாஸ்திரத்தில் நிபுணத்துவம் கொண்டவ ரல்லவா தாங்கள். சாம, பேத, தான, தண்டம் முதலிய நான்கு உபாயங்களையும் வெகு சாமர்த்தியமாக கையாள்பவராயிற்றே. சமாதானமாக சமரஸம் ஏற்படுத்துவதிலும், வெகுமதிகள் அளித்து திருப்திபடுத்துவதிலும் எதிரிகளின் கூட்டு நிலையிலிருந்து பிரித்து ஆள்வதிலும், மேலும் யுத்த நிலையில் யுக்தமாக அவர்களை அடித்து வீழ்த்துவதிலும் உமக்கு ஈடாகக் கடவுள் நிலையிலும் ஒருவருமில்லை. இதனை சிவபக்தனாகிய இராவணன் அறியவில்லை நீர் இராவணனுக்கு நன்மை தரும் காருண்யமான உபதேசங்களைக் கூறியும் அவன் உமது சமாதான பேச்சுக்களுக்குப் பணியவில்லை.

---

விளக்கம் :- பி. எஸ். பரமேஸ்வரன், பி.ஏ.,பி.எல்., சென்னை

இராவணன் சரணடைந்தால் அவனுக்கு நிச்சயமாக அயோத்யா ராஜ்யத்தையே கொடுப்பதாக வாக்களித்தாய். (ஏன் என்றால் லங்கையை நீ ஏற்கனவே சரணடைந்த விபீஷணனுக்கு அளித்துவிட்டாய்) இதனால் தானம் என்ற உபாயத்தையும் கையாண்டாய் என்பது கருத்து.

இராவணனின் தம்பி விபீஷணனை உன்பக்கம் இழுத்ததால் பேதம் என்ற உபாயமும் உன்னால் கையாளப்பட்டது.

முடிவாக இராவணனை அழித்தாய். அப்போது உன்னால் தண்டம் என்ற நான்காவது உபாயமும் கையாளப்பட்டது என்கிறார் தியாகராஜர்.

---

<u>நல்ல புத்தகம்</u>

# ஞானப் புதையல்

ஸ்ரீசங்கர பகவத் பாதாள் அவர்களால் அருளப்பட்ட மோஹ முத்கரம் என்னும் பஜகோவிந்தமே தான் மக்களுக்கு ஞானப் புதையலாகக் கிடைத்துள்ளது.

கோவை K. R. & Sons ராதா என்று நண்பர்களால் அன்புடன் அழைக்கப்படும் திரு. K. R ராதா கிருஷ்ணன் என்கிற, ஸ்வாமி ராதா கிருஷ்ணபாரதி அவர்களால் புனித பஜகோவிந்தத்திற்கு மிகவும் எளிய நடையில் விளக்கம் எழுதியுள்ளார்;

உரை ஆசிரியர் கூறியுள்ளது போல், பாகவதம், திருவாசகம் போன்ற பக்திநூல் என்று இதை சொல்லமுடியாது. ஆனால் மனித வாழ்க்கையில் தினசரி ஏற்படும் சாதாரண சம்பவங்களையே எடுத்துச்சொல்லி ஒரு எச்சரிக்கையாகவே அமைந்துள்ளது பஜகோவிந்தம்.

செல்வத்தாலும், சுற்றத்தாலும், தன் இளமையாலும் கர்வம் கொள்ளாதே காலம் எல்லாவற்றையும் ஒரு நிமிஷ நேரத்தில் கொண்டு போய்விடும். மாயமயமான இவைகளை எல்லாம் விட்டு பிரம்மபதத்தையறிந்து அதில்ஈடுபடவேண்டும்.

இம்மாதிரி ஒவ்வொரு ஸ்லோகத்திற்கும் கீதை, குறள், அருட்பா போன்ற பல உதாரணங்களைக் காட்டி சிறுகுழந்தைகள்கூட நன்கு புரிந்துகொள்ளுமாறு தெளிவாக விளக்கம் எழுதியுள்ளார்.

அழியப் போகிற நாம், அழியும் ஜீவன்களின் மேலே அதிக மோகங் கொண்டு அழிந்துபோகாமலிருக்கவே, முத்கரம் என்னும் சம்மட்டியால் மோகத்தை அடித்துவிரட்ட உதவியாய் இருக்கிறது இந்த ஞானப்புதையல் என்னும் அறிவுரை நூல்.

விளக்கவுரைகளைப் படிக்கும் போது பெரியவர் அமரர் ராஜாஜி அவர்கள் எழுதியுள்ள 'வியாசர் விருந்து' என்ற நூலில் பெரியவர் கையாண்டுள்ள எளிய உவமைகளுடன் கூடிய தெளிவான நடைதான் என் மனதில் தோன்றி மறைகிறது.

இப்புனிதப் புதையலை, உரையாசிரியர் ஸ்வாமிகள் தன் தகப்பனார் ஸ்ரீ K. ராமகிருஷ்ணபிள்ளை அவர்களின் நினைவு அஞ்சலியாக சமர்ப்பித்துள்ளார் —ஆசிரியர்.

கிடைக்குமிடம் :
K. R and Sons, பெரிய கடை வீதி,
கோவை-641001 விலை ரூ. 5-00

# பாபா சொன்ன கதைகள்



## 29. மானிடப் பிரயத்தனம்—தெய்வ சகாயம்

ஓர் கிராமத்தின் பிரஜைகளெல்லாம் சேர்ந்து ஒரு சாதுவை வரவழைத்து பகவானைக் குறித்து உபன்யாசம் செய்ய ஒரு விநாயகர் கோயிலில் ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த சாது பகவான் தயை உள்ளமுடையவர், அன்பு மயமானவர், சர்வ சக்தியுடையவர், யாவற்றிற்கும் சர்வாதிகாரி எனப்புகழ்ந்து பேசினார்

மறுபடியும் அந்த சாது. யார் ஒருவன் ஆபத்தில் சிக்கிக் கொண்டாலும், அவனுடைய சக்தி சாமர்த்தியங்கள் பலனளிக்காத சமயத்தில் பகவானைப் பிரார்த்தித்துக் கொண்டால் அவசியம் சகாயம் செய்வார் எனக் கூறினார்.

அங்கு கூடியிருந்தவர்களில் ராமசந்திரன் என்பவனும் இருந்தான். அவன் இரட்டைமாட்டுவண்டியை வாடகைக்கு ஓட்டி வாழ்ந்துவருபவன் அவன் ஹனுமானிடம் பக்தி கொண்டிருந்தான் பகவான் எந்த சமயங்களிலும் பக்தர்களுக்குதுணை புரிகிறவர் என சாது கூறிய பேச்சுகளைக் கேட்டு ராமச்சந்திரன் சந்தோஷப்பட்டான்.

நல்ல மழைக்காலம்; ஒருநாள் தன் மாட்டுவண்டியில் அரிசி மூட்டைகளை ஏற்றிக்கொண்டு பக்கத்து ஊருக்குஓட்டிக்கொண்டுபோனான். போகும் வழியில், சேற்றில் வண்டியின் இருசக்கரங்களும் சிறிது ஆழமாக இறங்கிவிட்டது. வண்டி சிறிதும் அசைக்க முடியாமற்போகவே ராமச்சந்திரன், வண்டியை விட்டு இறங்கி, தன்னுடைய இரு கைகளையும் சேர்த்து, கண்களை மூடிக் கொண்டு, ஓ! ஆஞ்சநேயா! தயை செய்து இந்த வண்டியை சேற்றிலிருந்து வெளியில் நகரச் செய், என கைகூப்பி வணங்கிப்பிரார்த்தித்தான்.

எவ்வளவோ மனம் உருகிக் கூவியும், கடவுள் பிரத்யக்ஷமாகவில்லை. உடனே பகவான்மீது கடுங்கோபம் கொண்டு கடுமையான சொற்களால் பேச ஆரம்பித்தான்.

அத்துடன் நிற்காமல், உபன்யாசம் செய்யும் சாது தங்கியிருக்கும் இடம் சென்று, சாதுவின் காதுகளில் படும்படி பகவானையும் சாதுவையும் கண்டபடி கடுஞ்சொற்களால் ஏசினான்.

அனைத்தையும் கேட்ட சாது, அவனிடம் மிக சாந்தமாய் நடந்த விஷயங்களைக் கேட்டார் ராமச்சந்திரனும் அனைத்தையும் கோபத்தோடு கூறிமுடித்தான்.

ராமச்சந்திரன் கூறிய யாவற்றையும் மிகப் பொறுமையாகக் கேட்ட சாது, அவனுடையமுதுகை அன்புடன் தடவிகொடுத்து, அன்பனே! நான் உபன்யாசம செய்யும் பொழுது, சொன்னவைகளை திரும்ப சொல்லி காட்டினூர். யாரொருவன் ஆபத்தில் சிக்கிக்கொண்டாலும் அவனுடைய சக்தி சாமர்த்தியங்கள் பயனிக்காதசமயத்தில்பகவான் அவசியம் சகாயம் செய்வார் என்றுதானே சொல்லியிருக்கிறேன்.

ஆனல் உன் சக்தியை பிரயோகிக்காது கைகூப்பி பகவானை அழைத்தால் வருவரோ? என்று சமாதானம் கூறி அனுப்பிவைத்தார் அந்த சாது.

மேலும் சாது, கைவிரல்களையும் அசைக்காமல் வண்டியை சேற்றிலிருந்து நகர வேண்டுமென்ருல் மயிரிழையும் நகராது!

கிணற்றிற்குச் சமீபமாய் நின்று, தண்ணீரே! நாக்கு வரண்டுகொண்டிருக்கிறது! கொஞ்சம் வாயேன் என்று கேட்டால் வருமா? வராது! இடுப்பை வளைத்து கிணற்றுத் தண்ணீரை குடம்கொண்டு முகர்ந்து குடித்தால்தான் நாவின் வரட்சி தீரும்! என்று கூறி, பிரயத்தனப்படு, பகவான் காப்பாற்றுவார் என்று கூறி அனுப்பினூர்.

இவற்றையெல்லாம் கேட்ட ராமச்சந்திரன், தன் வண்டி நின்றிருக்கும் இடம் சென்று, பகவானை மனத்திலிருத்தி, தன் தோள்வலிமையால் ஒரு சக்கரத்தை தூக்கித் தள்ளியவாறே மாடுகளை மிரட்டினுன். வண்டியும் சிறிதுசிறிதாக நகர்ந்து சேற்றிற்கப்பால் மேட்டிற்கு வந்தது.

மற்றொரு பக்கம் யாரோ அழுத்தித் தள்ளுவதைப்போல உணர்ந்தான். அது பகவானேயன்றி வேறு யாரும் உதவியிருக்க முடியாதென்று ஆனந்தப்பட்டான்.

மாடுகளின் கழுத்தில் கட்டப்பட்டிருந்த மணிகளின் ஓசையோடு ஹனுமானை ஆனந்தத்தோடு ஆராதித்தவாறு செல்லவேண்டிய இடம் நோக்கி சென்றுகொண்டிருந்தான்.

அன்றுமுதல் ராமச்சந்திரன், தன் நண்பர்களிடம் யாருக்கு கஷ்டமேற்பட்டாலும், பகவான் அனுக்கிரகித்த சக்தி சாமர்த்தியங்களால் பிரயத்தனப்படவேண்டும். அதன்பின் பக்தியுடன்பிரார்த்தனை செய்தால் தெய்வம் கட்டாயம் துணைபுரியுமென்பதை சொல்லிக்கொண்டிருந்தான்.

பகவானுடைய சகாயம் எப்போது தேவையோ அது அவருக்குத் தெரியும். நாம் உள்ளன்புடன் நினைக்கும்போது, சுயப்பிரயத்தனங்களால்முடியாதபோது பிரார்த்தனை பலனளிக்கும்.

தொகுப்பு : R. பாலபங்டாமி,
உடுமலைப்பேட்டை.

---

## கோவை ஸ்ரீ கிருஷ்ணு ஸ்வீட்ஸ் அதிபர்
## ஸ்ரீ என். கே. மஹாதேவய்யர்—61

கோவையில் மிகவும் பிரபலமான கிருஷ்ணு ஸ்வீட்ஸ் ஸ்தாபனத்தின் அதிபர் ஸ்ரீ என் கே மஹாதேவய்யர் அவர்களின் அறுபது ஆண்டுகள் நிறைவு விழாவின் சுபமுகூர்த்தம் 18 9-84 அன்று கோவை ராம் நகரில் அவருடைய அன்பு குமாரர்கள, எம். கிருஷ்ணன், எம். முரளி இருவரும் மிகவும் சிறப்பான முறையில் சாஸ்த்ரோக்தமாக நடத்தி வைத்தார்கள.

ஸ்ரீ அய்யர் அவர்கள் ;மேலும பல்லாண்டு காலம் திடமான ஆரோக்யத்துடன் நல்வாழ்வு பெற்றுவாழ குமாரப் பெருமான திருவருளை வேண்டி நல்லாசி கூறி வாழ்த்துகிறேன்.
—ஆசிரியர்.

மகான் விஷ்ணு பூரி அருளிய




ஹிந்து தர்மத்திலுள்ள எல்லா உபாசகர்களும் அஞ்ஞானமே பற்றுக்குக் காரணம் என்று ஏற்கின்றனர். ஆனால், அவர்கள் அஞ்ஞானத்தினைப்பற்றி வெவ்வேறு கொள்கைகளை ஏற்றுக்கொள்கின்றனர். அஞ்ஞானம் ஆத்மாவின் சுயநிலையை மறக்கடிக்கிறது என்று கூறுவர். இதனால் மற்றப் பொருள்களின் உண்மைநிலை அஞ்ஞானம் உள்ளவர் அறிய முற்படுவதில்லை. பகவானின் தன்மையையும் அவனது பரந்து நிற்கும் நிலையையும் அறிவதில்லை. அத்தகையோர் தமக்கும், பகவானுக்குமுள்ள ஒரு சம்பந்தத்தை அறிவதில்லை.

தேவர்கள் ச்ரவணம் அஞ்ஞானத்தைப் போதிக்கிறது எனக் கூறல் :

விபவ்யஸ்தவாம்ருத—கதோதலஹா—ஸ்திரிலோ க்யா:
பாதாவனேஜஸரித : சமலானி ஹந்தும்
ஆனுச்ரவம் ச்ருதிபிரங்ச்ரிஜமங்கஸங்கை—
ஸ்தீர்த்தத்வயம் சுசிஷதஸ்ய உபஸ்ப்ருசந்தி 33

இரு கருவிகள் மூவுலகங்களையும் சுத்திகரிக்க முடியும்—ஹே பகவன்! உமது மங்கள குண விசேஷங்களையெல்லாம் தொகுத்த கதைகளின் தொடர்ச்சியும், உமது உயர்வை விவரிக்கும் சுலோகங்களும் கொண்ட கதாமிர்த தாரையும், உமது பாதங்களினின்று வெளிப்பட்டுவரும் கங்காநதியும் அத்தகைய தூய்மையை அளிக்கவல்லன

முதலில் சொன்ன கதாமிர்தம் செவிகளின் வழியே ஆத்மாவை அடைந்து மனிதனை தூய்மைப்படுத்தும். புனித கங்கை தேகத்தை ஸ்பர்சித்த மாத்திரத்திலேயே மனிதனை தூய்மையுறச்செய்யும்,

வெறும் ஞானவிசாரம் மனிதனைத் தூய்மைப்படுத்துவதில்லை பக்தியுடைய ஞானவிசாரமே சிறந்தது. அந்த பக்தியைப் பெற பல,

---

பி. எஸ். பரமேஸ்வரன், பி.ஏ., பிஎல்., சென்னை

வழிகளை உபதேசிக்கிறது இந்து தர்மம். முக்திக்கு பகவானின் அருள் அவசியம். பக்திவழியே பகவானின் அருள்பெற வழிகோலும்.

உத்தவர் ச்ரவணம் அவித்யையாகிய அஞ்ஞானத்தை அழிக்கிறது என்கிருர் :

தவ விக்ரீடிதம் கிருஷ்ண ந்ருணும் பரம மங்களம்
கர்ணபீயூஷமாஸ்வாத்ய த்யஜத்யன்ய ஸ்ப்ருஹாம் ஜன:
வயம் த்விஹ மஹாயோகின் ப்ரமந்த: கர்மவர்த்மஸு
த்வத்வார்யா தரிஷ்யாம—ஸ்தாவகைர் துஸ்தரம் தம: 34-35

ஹே பகவன்! உமது கதாம்ர்தச்ரவணத்தை தனது காதுகளினுல் கேட்பதால் மனிதன் சாத்தியமான விஷய சுகங்களையெல்லாம் மனதி லிருந்து விலக்குகிருன். உமது லீலா விநோதங்கள் அவனது மேன் மைக்கு ஒரு விசேஷமருந்தாக அமைகிறது.

ஹே தெய்வமே! யோகேஸ்வரா! உலக வியவஹாரங்களில் அகப் பட்டு வழி வழியாகச் சென்று அல்லலுறும் எமக்கு, உமது லிலாமிருத மாகிய உயர்வான கதைகளை உமது பக்தர்களாகிய சத்சங்கத்துடன் கேட்டு ச்ரவணம் செய்வதால் இருள்மிகுந்த அஞ்ஞானத்தை வெல்ல முடிகிறது. காட்சியைத் தடுக்கும் காரிருள் மிகுந்து விளங்குவது அஞ் ஞானம். அத்தகைய அஞ்ஞானத்தைப் போக்குவது வெகுகடினம். அந்த அஞ்ஞானத்தை அழிககவல்லது உமது கதாச்ரவணம் என்கிருர் உத்தவர்.

ஸ்ரீகிருஷ்ணர் ச்ரவணம் செய்வதில் உள்ள ஆர்வத்தைக் கொண்டு ஒரு மனிதனின் ஆத்ம விசார நிலையை அறியலாம் என்கிருர்:

தாவத்கர்மாணி குர்வீத ந நிர்வித்யேத யாவதா
மத்கததாச்ரவணுதௌ வா ச்ரத்தா யாவன்ன ஜாயதே 36

எந்த ஒரு மனிதன் உலக விஷயங்களில் வெறுப்பு ஏற்படாது இருக் கிருனே, மேலும் எவனுக்கு எனது லீலாவிசேஷங்களை ச்ரவணம் செய்வதில் அதீதமான சிரத்தை ஏற்படவில்லையோ, அத்தகைய மனிதன் கர்மத்தைச் செய்துதான் ஆகவேண்டும். அவனை கர்மபந்தம் விடுவதில்லை.

தனது கர்மாக்களை விடுவது தவறு என்பது வேதவாக்கியம். ஆகவே ஒருவன் ஆத்மீக நிலைபெறும் வகையில் தனது உலகாயதமான கடமைகளை ஆற்றுதல் முக்கியம்.

பகவானின் சேவையை பக்தியோடு மேற்கொள்வதாலும், பகவத் கதாச்ரவணங்களாலும் பற்றுகளை விடுத்துக்கொள்ளலாம் என்பது கருத்து.

# ஸ்ரீராம ப்ராதஸ்மரண பஞ்சகம்

—முடிகொண்டான் எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்—

ப்ராத: ஸ்மராமி ரகுநாத முகார விந்தம்
மந்தஸ்மிதம் மதுரபாஷி விசால பாலம்
கர்ணாவலம்பி சலகுண்டல சோபிகண்டம்
கர்ணாந்த தீர்க்க நயனம் நயனா பிராமம்

புன்சிரிப்பு, மதுரமான வாக்கு, விசாலமான நெற்றி, குண்டலங்களுடன் கூடிய காதுகள், நீண்ட கண்களுடன் கூடிய ஸ்ரீராம முகார விந்தத்தை, காலையில் நினைக்கிறேன்.

ப்ராதர் பஜாமி ரகுநாத கராரவிந்தம்
ரக்ஷோகணாய பயதம் வரதம் நிஜேப்ய:
யத்ராஜ ஸம்ஸதி விபஜ்ய மஹேச சாபம்
ஸீதா கர க்ரஹண மங்கள மாப ஸத்ய:

பக்தர்களுக்கு வரமளிப்பதும், அரக்கர்களுக்கு பயமளிப்பதும் சிவதனுஸை வளைத்து ஸீதாபிராட்டியை திருக்கரம் பிடித்த மங்களமான ராமன் கையானது காலையில் பூஜிக்கத்தக்கது.

ப்ராதர் நமாமி ரகுநாத பதாரவிந்தம்
வஜ்ராங்குசாதி சுபரேகி ஸுகா வஹம்மே
யோகீந்த்ர மானஸ மதுவ்ரத ஸேவ்யமானம்
சாபாபஹம ஸபதி கௌதம தர்ம பத்நியா:

விசேஷ ரேகைகள் நிறைந்ததும், யோகி மனமாகிற வண்டுகளால் மொய்க்கப்படுகிறதும், அஹல்யா சாபத்தைப் போக்கினதுமான பாதார விந்தங்களை காலையில் நமஸ்கரிக்கிறேன்.

ப்ராதர் வதாமி ரகுநாத நாம
வாக்தோஷஹாரி ஸகலம் சமலம் நிஹந்தி
யத்பார்வதீ ஸ்வபதிநா ஸஹபோக்து காமா
ப்ரீத்யா ஸஹஸ்ர ஹரி நாம ஸமம் ஜஜாப

வாக்கு தோஷங்களை நீக்குவதாயும், ஸ்ரீபரமேச்வரனால் ஸ்ரீபார்வதிக்கு விஷ்ணுஸஹஸ்ரநாமாவுக்கு ஒப்பாகச் சொல்லப்படுவதுமான ஸ்ரீராமநாமாவை காலையில் சொல்கிறேன்.

ப்ராத: ச்ரயே ச்ருதிநுதாம் ரகுநாதமூர்த்திம்
நீலாம்பு ஜோத்பல ஸிதேதர ரத்னநீலாம்
ஆமுக்த மௌக்திக விசேஷ விபூஷணாட்யாம்
த்யேயாம் ஸமஸ்த முனிபிர் ஜனமுக்தி ஹேதும்

வேதங்களால் தொழப்படுகிறதாயும், அநேக ரத்னாலங்காரங்களுடன் கூடியதாயும், நீலகாந்தியுடன் கூடிய ஸ்ரீராமமூர்த்தியை காலையில் ஆச்ரயிக்கிறேன்.

ய:ச்லோக பஞ்சகமிதம் ப்ரயத: படேத்தி
நித்யம் ப்ரபாதஸமயே புருஷ: ப்ரபுத்த:
ஸ்ரீராமகிங்கரஜனேஷு ஸ ஏஷமுக்யோ
பூத்வா ப்ரயாதி ஹரிலோக மனன்யலப்யம்

இந்த ஐந்து ச்லோகங்களையும் பாராயணம் செய்பவர்கள் ஸ்ரீராம பக்தர்களுள் முக்யமானவர்களாயும், ஹரிலோக சேவையான அருமையான நிலையை அடைகிறார்கள்,

---

சட்டங்கள் என்பவை சிலந்தியின் வலையைப் போன்றவை. அவ்வலை சிறு ஈக்களை பிடித்துக்கொள்ளும். ஆனால் வண்டுகளும், குளவிகளும் அதை ஊடுருவிச் சென்றுவிடும். —சுவிப்ட்.

ஃ ஃ ஃ

இயற்கை நம்மை எப்போதும ஏமாற்றுவதில்லை. நாம்தான் நம்மை ஏமாற்றிக்கொள்கிறோம். —ரூஸோ.

---

## கோவை ஸ்ரீலக்ஷ்மி இண்டஸ்ட்ரீஸ் வீட்டுத் திருமணம

மக்களின் நம்பிக்கைக்கும் அனபிறகும் சிறப்பான முறையில் செயல்பட்டு வரும் கோவை ஸ்ரீலக்ஷ்மி இண்டஸ்ரீஸ அதிபர் எனது அருமை நண்பர் திரு. P, B கிருஷ்ணமூர்த்தி அவர்களின் அன்புச் செல்வன் கே. ரவிக்கும், சென்னை பிரபல தொழிலதிபர திரு. D. பாண்டுரங்கன் அவர்களின் அன்புச் செல்வி சுப்ரஜாவிற்கும 7-10-84 அன்று சென்னையில் மிகவும் சிறப்பான முறையில் திருமணம் நடைபெற்றது.

திருமண விழாவைத் தொடர்ந்து, கோவையில் 11-10-84 அன்று வரவேற்புவிழாவும் விசேஷமாக நடைபெற்றது.

மணவிழாவிற்கும், வரவேற்பின்போதும் ஏராளமான உள்ளூர், வெளியூர் பிரமுகர்களும், தொழிலதிபர்களும் வந்திருந்து மணமக்களை வாழ்த்தினார்கள்.

மணமக்கள் இருவருமே B,Sc. பட்டதாரிகள்.

புத்தம் புதிய புதுமண தமபதிகளுக்கு எல்லா நன்மைகளும் தந்து, ஆயுள் ஆரோக்யத்துடன வாழ்க்கை தொடர ஸ்ரீ முருகப்பெருமான் திருவருளை வேண்டி நல்லாசி கூறி வாழ்த்துகிறேன். —ஆசிரியர்.

---




## ஏழாவது அத்தியாயம்

## *விஞ்ஞான யோகம்*

**கண்ணன் கூறியது :**

**மய்யாஸக்த மநா: பார்த்த யோகம் யுஞ்ஜந் மதாச்ரய:**
**அஸம்சயம் ஸமக்ரம் மாம் யதா ஜ்ஞாஸ்யஸி தத் ச்ருணு**

ஸ்ரீ அநந்தன் பார்த்தனைப் பார்த்து இப்படிச் சொன்னான் : நீ இப்போது யோகாப்பியாசத்தின் முறைகளைத் தெரிந்து கொண்டாய். நீ என்னைப் பூர்ணமாய் அறிந்து கொள்ளும்படி ஞானம் என்பது பற்றியும், விஞ்ஞானம் எது என்பதையும் சொல்வேன் கேள்

இந்த சமயம் விஞ்ஞானத்தால் ஆகவேண்டியதென்ன? என்று நீ எண்ணலாம் ஆனால் முதன் முதலாக அதைத் தேடிக் கொள்வது அவசியமாகிறது. கரை வந்து சேர்ந்து, நங்கூரம போட்டு நிறுத்தி வைக்கப்பட்ட ஒரு கப்பல் அசைவற்று நின்று விடுதல்போல், எதை அடைந்த பின் வியவகார ஞானம் கண்மூடிப போய் விசாரம் என்பது தன் காலைப் பின் வாங்கிக் கொள்கிறதோ, எதன் வரம்புக்குள் தர்க்கம் பிரவேசிக்காதோ, அதுவே ஞானமாகும்.

மற்ற விதமான பிரபஞ்ச அறிவு, விஞ்ஞான மென்றும், அப்பிரபஞ்சத்தை ஸத்யமென்று மதித்தல் அஞ்ஞான மென்றும் அறிந்து கொள் அஞ்ஞானம் முழுவதும் நசித்துப்போய் விஞ்ஞானமும் பொசுங்கிப் போய் உண்மையான தத்வத்தோடொன்று பட்டு நிற்பதே ஞானமாகும். அதை அடைந்த பின், பேசுகிறவன் பேச்சு நின்று போய், கேட்பவன் துக்கம் தீர்ந்து போய் சிறிது, பெரிது என்ற பாகுபாடு அற்றுப்போகும். இப்படிப்பட்ட அதி ரகஸ்யமான விஷயத்தைச் சொல்லால் விளங்க வைப்பேன் இவைகளைக் கேட்ட மாத்திரத்திலேயே மனத்தின் ஆசைகள் பூர்த்தியடையும்.

ஞானம் என்றால் பகவத் ஞானம்.

---

—வைரம் ராஜகோபால்—

ஞா விஞ்ஞானம் என்றால் பகவானுடைய ஜ்ஞான, சக்தி, ஐச்வர்ய, வீர்ய, தேஜஸ் போன்ற கல்யாண குணங்களை அறிவது. அதாவது ஒரு தூணைப் பார்த்து, இது ஒரு தூண் என்று அறிவது ஞானம் அது எதனால் செய்யப்பட்டது, எப்படிச் செய்யப்பட்டது. அதன் பரிமாணம், சக்தி, பயன் இவைகளை அறிவது விஞ்ஞானம் என்பதாம்.

மநுஷ்யாணும் ஸஹஸ்ரேஷு கச்சித் யததி ஸித்தயே
ய ததாமபி ஸித்தாநாம் கச்சிந் மாம் வேதி தத்வத:

*மனிதர்களில் ஆயிரத்தில்* ஒருவனே என்னிடம் பக்தி செய்ய முயல்கிறான். இவர்களில் ஆயிரத்தில் ஒருவனே கடைசி வரை பக்தி செய்து பூர்த்தி செய்கிறான் இவர்களில் ஆயிரத்தில் ஒருவனே என்னை உள்ள படி அறிகிறான். அறிதற்கரிதான பக்தி யோகத்தைப் பற்றி தெளிவாகச் சொல்கிறேன் கேள்.

பூமிரோபோ நலோ வாயு: கம் மநோ புத்திரேவச
அஹங்கார இதீயம் மே பிந்நா ப்ரக்ருதி: அஷ்டதா

மகத்தத்வத்தை ஆதியாய் உடைய ஜகத் ஸர்வமும், ஒருவனுடைய சரீர சாயை போலிருக்கும் என்னுடைய மாயா சக்தியின் கார்யமாய்த் தோற்றி நிற்கிறது. இந்த மாயையே ப்ரக்ருதி என்று சொல்லப்பட்ட தாய் எட்டு வகைப்பட்டுள்ளது. இதினின்றுமே மூவுலகங்களும் உண்டாயின. உலகிலுள்ள பலவிதமான விசித்ர இன்பப் பொருள்கள், இனிய இடங்கள் யாவும் உண்டாகக் காரணமான பூமி, தண்ணீர், நெருப்பு, முதலிய எட்டுவித அசேதனப் பொருள்கள் என்னுடையவையே.

நான் அவற்றிற்கு ஸ்வாமி [ஜலம், அக்நி, ஆகாசம், பூமி, வாயு, மனம், புத்தி, அகங்காரம் ஆகியவை எட்டு]. இவைகள் அறிவற்றவை. தாழ்ந்தவை அவை அபராப்ரக்ருதி எனப்படும். அவைகளைக் காட்டிலும் வேறான உயர்ந்ததான ஜீவாத்மாக்களும் என்னுடையவை இவை பரப்ரக்ருதி எனப்படும். இந்த பராப்ரக்ருதியான ஜீவாத்மாக்களால் உலகம் யாவையும் தரிக்கப்படுகின்றன.

உலகிலுள்ள எல்லா உயிர்களும் என்னுடைய இரு வித ப்ரக்ருதிகளை அதாவது சேதன அசேதனங்களைக் காரணமாக உடையவை. ஆதலால் உலகின் படைப்புக்கு நானே காரணன். அவைகளின் மறைவுக்கும் நானே காரணன். இப்படி பல வித பிராணிகளை உண்டாக்கி அழித்தல் என்ற இரண்டின் நடுவில், அப்பிராணிகளை, கர்மா கர்ம ரூபமான வ்யவஹாரத்தை நடத்தும்படி அதுவே செய்து வைக்கிறது. ஆகையால் ஜகத்திற்கு உற்பத்தி, ஸ்திதி, லயம் யாவும் நானே ஆகிறேன. இந்த ஸ்ருஷ்டியானது ப்ரக்ருதியினால் ஏற்பட்டதே யானாலும் அப்ரக்ருதியையும் தாண்டி நிற்கும் அதன் மூலகாரணம் நான் ஒருவனே. இப்படி ஜகத் உண்டாவதும், தோன்றுவதும், மறைவதும் என் ஸ்வரூபத்தாலேயே தான்.

ஒரு கயிறு அதில் கோர்த்திருக்கும் மணிகளைத் தாங்கிக்கொண்டிருப்பது போல், நான் விச்வத்தைத் தாங்கிக் கொண்டிருக்கிறேன். அதிலும்,

அம்மணிகள் தங்கத்தால் செய்யப்பட்டு, அந்தக் கயிறும் தங்கத்தால் செய்யப்பட்டதுபோல், நான் இந்த ஜகத்தின் உள்ளும் புறமும் நிரம்பியிருந்தும் அதைத் தாங்கியிருந்தும் நிற்கிறேன். ஆகையால், ஜலத்தில் சுவையாகவும், காற்றில் ஸ்பர்சமாகவும், ஸூர்ய சந்திரர்களிடத்தில் பிரகாசமாகவும், பூமியில் இயற்கையான வாஸனையாகவும், ஆகாசத்தில் சப்தமாகவும், வேதத்தில் பிரணவமாகவும், மநுஷ்யரிடம் மநுஷத்வமாகவும், அகம்பாவத்தின் பலமாகிய பௌரஷமாகவும் நானே இருக்கிறேன்.

அன்றியும் மூவ்வுலகிலும் அனேகவிதமான பிறப்புகளையடைந்திருக்கும் பிராணிகளில் சில காற்றைப் புசித்தும் சில புல்லைத் தின்னும், சில அந்நத்தைப புசித்தும், சில ஜலத்தை உட்கொண்டும் இப்படி ஜீவராசிகள் அனைத்தும் தங்கள் தங்களுக்குத் தகுந்தபடி எந்தெந்த ஆகாரங்களைப் புசித்து ஜீவித்திருக்குமோ அந்த ஆகாரங்கள் அனைத்திலும் ஓர் வித்தியாசமுமில்லாமல் நானே அமர்ந்திருக்கிறேன்.

உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் ஸத்வ, ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணங்களை உடையவை. ஒவ்வொன்றுக்கும் இம்மூன்றில் ஒரு குணம் மேலிட்டிருக்கும். எந்த குணம் மேலிட்டிருந்தாலும அவையெல்லாம் என்னிடமிருந்தே உண்டானவை என்கிறன் கண்ணன்.

இந்த ஸத்வ ரஜஸ் தமஸ் ஆகிய முக்குணங்களால் எல்லாப் பிராணிகளும் மயக்க முற்றிருப்பதால் எல்லாவற்றுக்கும் மேம்பட்ட நித்யனான என்னை எவரும் அறிவதில்லை.





பழநியம்பதியில் கலியுக வரதனாக
அவதரித்த
ஸ்ரீபழநி ஆண்டவரை தரிசிக்கும்
பக்தகோடிகள் அனைவரும்
விரும்புவது

பழநி

S. சித்தனாதன்

ஸ்பெஷல் ஜவ்வாது
வாசனை விபூதி
ஸ்பெஷல் பஞ்சாமிர்தம்

பரிமள விலாஸ்

S. சித்தனாதன் சன்ஸ், விபூதி ஸ்டோர்,
அடிவாரம், பழநி-624601.

போன் : கடை 405    வீடு & ஸ்டோர் : 406

ந மாம் துஷ்க்ருதி னோ மூடா: ப்ரபத்யந்தே நராதமா:
மாயயாபஹ்ருத ஜ்ஞானா: ஆஸுரம் பாவம் ஆச்ரிதா

அறிவே இல்லாத மூடர்கள், தாழ்ந்த நிலையில் உள்ளவர்கள், மாயையினால் ஞானமற்றவர்கள், அசுரத் தன்மையுள்ளவர்கள் என்ற நான்கு வகையான பாபிகள் என்னைச் சரணம் பற்றுவதில்லை.

சதுர்விதா பஜந்தே மாம் ஜனா: ஸுக்ருதினோர்ஜுன
ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ ஜ்ஞானீ ச பரதர் ஷப

அர்ஜுனா! புண்யம் செய்து அதனால் என்னைப் பற்றுபவர் நான்கு வகைப்படுவர். இழந்த செல்வத்தைப் பெற இச்சிக்கிறவன், புதிதாக பொருள் பெற வேண்டுகிறவன், தன் ஆத்மாவையே அனுபவிக்க விரும்புகிறவன், என்னையே அடைய விரும்பும் ஞானி என நான்கு வகையினர். இந்த நால்வருமே உதாரர்கள். ஆனால், ஜ்ஞானியோவெனில் எனக்கு ஆத்மா என்பது என் எண்ணம். ஏனெனில் ஞானி என்னுடன் கூடியிருப்பதையே மேலான பயனாகக் கருதுபவன் பல பிறவிகளின் முடிவில் தனக்கு எல்லாம் கண்ணன் என்கிற ஜ்ஞானம் பிறந்து ஞானி என்னை அடைகிறான். இப்படிப்பட்ட மகாத்மா கிடைப்பது அரிது.

என்னால் வழங்கப்பட்ட சிரத்தையுடன் சிலர் மற்ற தேவதைகளை ஆராதிக்கிறார்கள். ஆதலால் என்னாலேயே வழங்கப்பட்ட இஷ்ட பலன்களைப் பெறுகிறார்கள். மட்டமான புத்தியுள்ள அவர்கள் விரும்பும் பலன் அற்பமானது. நிலையில்லாதது. அவர்கள் வழிபடும் அத்தெய்வங்களின் உலகை அவர்கள் அடைவர் என்னிடம் பக்தி செய்பவர்கள் என் இருப்பிடமான பரமபதத்தையே அடைவர்.

நா ஹம் ப்ரகாச: ஸர்வஸ்ய யோகமாயா ஸமாவ்ருத:
மூடோயம் நாபிஜா நாதி லோ கோ மாம் அஜம் அவ்யயம்

உறுப்புகளுடன் கூடிய இவ்வுடலினால் (மாயையினால்) மறைக்கப்பட்டிருக்கும் நான் எல்லோருக்கும் பிரகாசிப்பதில்லை. ஆதலால் பிறப்பற்றவனாகவும் முடிவு அற்றவனாகவும் உள்ள பரமனாக என்னை மூடர்கள் அறிவதில்லை

அர்ஜுனா! இதற்கு முன் இறந்தவைகளையும், இப்போது இருப்பவைகளையும் இனி இருக்கப் போவதையும் எல்லாம் நானறிவேன். என்னையோ, யாரும் அறிவதில்லை நான் ஸர்வஜ்ஞன் எல்லாம் அறிந்தவன் முக்காலத்திலுமுள்ளவற்றையெல்லாம் நான் அறிவேன் ஆனால் ப்ரம்மா, சிவன், இந்திரன் போன்றவர்கள் உட்பட யாரும் என்னை உள்ளபடி அறிவதில்லை.

ஜீவாத்மாக்கள் இன்று, நேற்று உண்டானவர்களல்லர். அநாதியானவர்கள். அவர்கள் புண்ய பாபங்களும் முதலறியாக் காலம் தொடங்கி இருந்து வருகின்றன. ஆதலால் பல பிறவிகள் எடுத்துக் கொண்டே வருகின்றனர். அந்தந்த பிறவிகளில் அவர்கள் செய்யும் புண்ய பாவங்கள் பல.

முற்பிறவியின் வாசனையையொட்டி ஒன்றில் விருப்பமும் மற்றொன்றில் வெறுப்பும் ஏற்படுகிறது. இதுதான் இருள்சேர் இருவினை எனப்படும். தான் விரும்பியது கிடைத்தால் இன்பமும் இன்றேல் துன்பமும் உண்டாகிறது

யேஷாம் த்வந்தகதம் பாபம் ஜநாநாம் புண்ய கர்மணாம்
தே த்வந்த்வமோஹ நிர்முக்தா: பஜந்தே மாம் த்ருடவ்ரதா:

ஒருவனுக்குரிய பாபம் குறைந்து புண்யம் அதிகரித்தால் மோகத்திலிருந்து விடுபடுகிறான். பிறகு என்னையடைய உறுதியுடன் விரும்பி என்னையடைகிறான்,

பல பிறவிகளில் செய்த புண்ய பலனால் பகவத் பக்திக்குத் தடையான பாபம் விலகுகிறது. என்னை அடைவதையே முக்கிய பயனாக எண்ணி உறுதியுடன் என்னை பக்திசெய்து என்னையடைகிறான் என்கிறார்.

சேதன அசேதனங்களுக்கெல்லாம் தான் ஆத்மாவாகவும், காரணமாகவும் இருப்பதைப்பற்றியும் இந்த உண்மை மாயையினால் மறைக்கப்படுகிறது என்பதையும், அந்த மாயை நீங்க தன்னிடம் சரணாகதி செய்யவேண்டுமென்பதையும் சொல்லி தன்னிடம் பக்தி செய்யும் நான்கு வகையினரில் ஞானியே மேம்பட்டவனென்பதையும் இந்த அத்தியாயத்தில் கண்ணன் அருளிச் செய்கிறான். —தொடரும்


கௌரி

தேன்கூடு
சிறு சேமிப்பு திட்டம்

இத்திட்டததில் எல்லோரும் சேரலாம். ரூ. 25, 50 என்று மாதாமாதம் சேமிப்பதன் மூலம் சிறந்த நகைகளைப் பெறலாம் ஒருவர் எத்தனை சீட்டுக்கள் வேண்டுமென்றாலும் சேரலாம்.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நாணயத்திற்கும், நம்பிக்கைக்கும் பெயர் பெற்றவர்கள்।

கௌரி ஜுவல்லரி மார்ட்

72-85, பைகிராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி,
சென்னை - 600005.

உரிமையாளர் : K. ராமலிங்கம் போன் : 842594




## 7

விரைந்து வந்து இலக்குமியின் பக்கத்தில் ஏதும் அறியாதவர் போல் படுத்து அவர் உறக்கத்தை கலைத்தார்.

மன்னிக்க வேண்டும் சுவாமி! கணவனுக்குப் பின் தூங்கி முன் எழுதல் துணைவியர்க்கழகு யென்பர். என் சோர்வு அதை பொய்யாக்கிவிட்டது. இந்த சுனிரசத்தை அருந்திவிட்டு கதையைச் சொல்லுங்கள் கேட்போம்!

கதையை எங்கே நிறுத்தினேன்?

கபட நாடகக் கர்த்தா இலக்குமியின் கன்னத்தைக் கிள்ளியவாறு கேட்டார், இலக்குமி அவர் மடியில் சாய்ந்து யோசித்தார்.

ஆ...ங்! பணிவிடைகளை முடித்துவிட்டு ஸ்ரீமதி கன்னிசாமாடம் செல்கிருன்.

அடுத்ததைப் பார்!

ஏக ஆனந்தத்திலிருந்த நாரதர், பர்வதர் இருவர் தலையிலும் பெரும் பாரம் வீழ்ந்தவராய்த் துடித்தனர். நரம்புகள் முறுக்கேறிற்று கண்களில் ஒருவிதக் காட்சி நிழலாடியது. முகம் ஏக்கத்தில் சூழ்ந்தது. நாராயணு..........நாராயணு...........நயன உச்சரித்த நாரதரின் இதழ்கள், ஸ்ரீமதி...ஸ்ரீமதி யென்ற ஒலியைக் கக்கிற்று திசையெங்கும் சுழலவிட்டு அவளைத் தேடலானுர்.

என்ன நாரதா! என் உள்ளத்தில் குடியேறிவிட்ட ஸ்ரீமதியின் திருநாமத்தை ஒலிக்கிருய்! அந்தப் பெயரை உச்சரிக்க வேண்டியவன் நான்...நானே...தான்.

*பர்வதர் இளவரசி மீதுள்ள* அன்பை அளக்காமல் கொட்டினுர்.

பர்வதா!...அவள் எனக்குரியவள் அவள் ஓரடி எடுத்து வைக்கும்போது என் நாடி நரம்புகளெல்லாம் துடிக்கிறது இரு கண்கள் கொண்டு பார்ப்பதற்குள் என் இதயத்தில் இன்ப அருவி சுரக்கிறது. மூன்ரும் பிறையாய் அவள் இதழ் எனை நோக்கிச் சிரிக்கிறது நான்கு வேதங்கள் என் நாவேற மறுக்கிறது. இந்த ஐந்து பொறிகளும் அவளை கொஞ்சிடத் துடிக்கிறது. அந்த ஆறுமுகன் வள்ளியை மணந்து வரலாற்றைப் படைத்தானல்லவா? நான் ஏன் அவ்வாறு நடக்கக்கூடாது! எழும் உணர்ச்சிகளை என்னால் கட்டுப்படுத்த முடியாததால்...எண் திசையிலிருந்தும் அவள் எழில் உருவம் வா...வா... யென அழைக்கிறது. இந்த ஒன்

*ஆரணி பட்டு சுப்பிரமணியம்*

பது ஒட்டை விட்டிற்குள் அவள் கோட்டையமைத்துவிட்டாள்பத்து விரல்களால் பருகத் துடிக்கிறேன். அதோ ஸ்ரீமதி... இதோ ஸ்ரீமதி...... எங்கும் ஸ்ரீமதி... வா ஸ்ரீமதி... கிட்டே வா ஸ்ரீமதி! ஒளறுதா... ஸ்ரீமதி!

இப்படி நாரதர் கூத்தாட கையி லிருந்த தாளக்கட்டையும் கழுத் தில் தொங்கும் வீணையின் நாதமும் ஒரே பல்லவியைப் பாடியது.

ஆ... ஹா... ஹா...... வெற்றி! நீ மாயைக்கு மயங்கமாட்டேன்...... அது என்னை ஒன்றும் செய்து விடாது மோகம்... ஆசை... காத லுக்கு கட்டுப்படமாட்டேனென்று சபதமும் சவாலும் ஏற்றுயே நீ தோற்றுவிட்டாய் நாரதா!......நீ தோற்றுவிட்டாய்! உன் தோல்வி யை ஒப்புக்கொள்.

ஐயனே... கார்மேக வண்ணா...! கருட வாகனா...! சங்கு சக்ராயுதா! நீ வெற்றி பெற்றுவிட்டாய்! நாரதன் தோற்றுவிட்டான். மாயையென் னும் பொடியை என்மீது ஏனய்யா தூவி விட்டாய்? ஸ்ரீமதியை என் னுல் மறக்கமுடியவில்லையே! ஸ்ரீமதி ஓசையிடாமல் தம் வாயைத்திறந்து திறந்து மூடினார். சற்றுத் தெளிந் தார்) நாரதர்... [illegible] தோல்வியை ஒப்புக்கொள்.

பர்வதரின் சிரிப்பு வெற்றி முழக்க மிட்டது.

உண்மை... நான் சவால் விட்ட தும் உண்மை. தோற்றதும் உண்மை அதில் எனக்கு வெட்கம் இல்லை இப்போது எனக்கு வேண் டியது ஸ்ரீமதி! ஸ்ரீமதி... ஸ்ரீமதி......! காம மயக்கத்தில் கண் உருட்டிப் பார்த்தார்.

நாரதா... நீ தேவலோக வாசி அவளை நீ எடுத்துச்செல்ல முடி யாது. தேவலோகத்தவர் பூலோ கத்தில் தோன்றி வாழ்ந்து வாரிசை உருவாக்கியிருக்கிறார்கள் அதற்கு ஆயிரம் சான்றுகளுண்டு. ஆனால் பூலோகத்தவர் தேவலோகத்தில் அப்படி வாழ்ந்ததாகச் சரித்திர மில்லை.

நானோ பூலோகவாசி... அவள் எனக்குத்தான் சொந்தம். உடுக் கையென்னும் இடை மேடையில் அவள் உடலாடுகிறது நடனம்! பருவ இளைப்பாறும் பளிங்கு மணி மண்டபமாய் காட்சியளிக்கிறது மேற்பரப்பு முகமோ சஞ்சீவி பர்வதம்... அங்கே அத்தனை மூலி


குடும்பத்திற்கு தேவையான எல்லாவித எவர்சில்வர், பித்தளைப் பாத்திரங்கள் பிரஸ்டீஜ் குக்கர், முதலிய சாமான்கள் யாவும் நம்பிக்கையான விலையில் எங்களிடம் கிடைக்கும்

மாதாந்திர சேமிப்பு திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்

எல். ராமசாமி நாடார் & பிரதர்

49, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

காட்சி சாலைகள் :

22, பைக்ராப்ட்ஸ் சாலை, சென்னை-5.

5, ராமகிருஷ்ண மடம் சாலை, (லஸ்) சென்னை-4

தொழிற்சாலை:

38, V. R. பிள்ளை தெரு, சென்னை-5.

கைகளும் இருக்கிறது நான் பசியாற்ற.

நிலா மாடம்போன்றபொட்டிட்ட நெற்றியிலிருக்கும் புருவம் வா...... வா...யென எனை வரவேற்கும் வரவேற்பு வளைவு. அவள் கண்களோ ...வாழ்க்கை அமைக்க வழிகாட்டும் பச்சை விளக்கு! புன்சிரிப்போ... என் மீது தூவும் மலர்க்கூட்டம். கருங்கூந்தல் எனக்கு வீசும் வெண் சாமரம். இதழ்கள் எங்கும் காதற் கோட்டையின் கதவு! வாயோ... அவள்...அவள் இதயக் கோட்டைக்குச் செல்லும் பாதை! இதயமோ...நான் குடியிருக்கும் பள்ளியறை! நாவோ...என்னை வரவேற்கும் வாழ்த்து மடல்.

ஓ...கோ...பர்வதா...மாயை உன்னையும் விடவில்லையா? நீர் கூறியது சரியாய் போச்சு! மொத்தத்தில் நாம் இருவரும் தோற்றுவிட்டோம். மாயை...நம்மை மயக்கிவிட்டது. இப்போது நாம் அதற்கு கொத்தடிமைகள், குற்றேவல்காரர்கள்.

ஆமாம் நாரதா! நாம் தோற்றுவிட்டோம் ஆனால் ஸ்ரீமதி விஷயத்தில் நீ ஒதுங்கிவிடு நமக்குள் போட்டி வேண்டாம்...பொறுமையும் வேண்டாம். நீ......பிறருக்குத் தூது சென்று பழக்கப்பட்டவன். என் காதலுக்கு தூது செல்லமாட்டாயா?

ஓ...ஸ்ரீமதியை நீ தட்டிச்செல்ல நினைக்கிறாயா? அதுதான் நடக்காது இந்த நாரதமுனியிடம். மாயையில் தோற்றேன். திருமண விஷயத்தில் தோற்கமாட்டேன். உன் கெஞ்சலை ஏற்கமாட்டேன். நான் தேவரிஷி...நீயோ சாதாரண ரிஷி! பேசாமல் ஒதுங்கிவிடு. நல்ல நண்பனாய் இருந்து என் காதலுக்கு தூது செல்.

நாரதர் கோபக் கனலைக் கொட்டினார். நீ ஒதுங்கிவிடு...நீ ஒதுங்கிவிடு...இருவரும் ஸ்ரீமதியின் மயக்கத்தில் வாய்ப்போர் நடத்திக் கொண்டிருந்தனர்.

நாரதா......

திடீரென ஓர் குரல் ஒலித்தது. அது ஈரேழு பதினான்கு உலகத்திலும் இடியென முழங்கியது.

பரந்தாமன் கையைப் பிடித்திழுக்க...செந்தாமரையாள் கண்கள் மேலும் சிவக்க...உடல்கோபத் தணலால் ஊஞ்சலாடியது. உலகம் முக்காலத்தையும் மறந்து மூதேவியின் மடியில் மோகனகீதம் பாடிக் கொண்டிருந்தது.

நாரதரும் பர்வதரும் ஸ்ரீமதியின் ஏக்கத்தில் ஒருவரையொருவர் கட்டிப்பிடித்து கல்தூணாய் நின்று கொண்டிருந்தனர் பகவான் பெருமூச்சோடு கண்மூடித் திறந்தார்.

தேவி! அமைதிகொள்! ஏன் இப்படி ஓசையிட்டாய்? அத்தனை லோகங்களும அசைவற்று தம் கடமையை செய்ய மறந்து விட்டதே!

ரோஜா இதழ் விரித்து கையசைத்தார் வைகுந்தன் உலகம் மீண்டும் இயங்கிற்று. இலக்குமி தன்னிலைக்கு வந்து பேசினாள்,

மன்னித்து விடுங்கள் சுவாமி! நான் உணர்ச்சி வயப்பட்டுவிட்டேன் சாமியார் என்ற வேடத்தில் சில சபல புத்திப் பேய்கள் பூலோகத்தில் நடமாடுகிறதே! அதை நினைத்துத்தான் இந்நிலைக்கு ஆளானேன்.

என்ன சொல்லுகிறாய் தேவி!

உம்...ஹாம்...இந்த நாடகம் என்னிடம் வேண்டாம். தெரிந்தும் தெரியாதவராய் பேசுகிறீர்களே!

பார்த்தீரா இந்த நாரதனையும், பர்வதனையும்? விருந்துண்ட வீட்

டில் விஷப்பரீட்சை நடத்துகிறார்களே...பிரம்மசாரி என்று கூறி ஆச்சாரத்தையே களங்கப்படுத்துகிறானே இந்த நாரதன். இவனுக்கு பெயர் தேவரிஷியா? முற்றும் துறந்தவன் என்கிறான் பார்வதன். தாடி சடையுடன் சதா...உங்களை துதிக்கிறான்; பக்தி முக்தி என்ற பெயரால், இதனை பூலோகத்து மக்கள் கேட்டால்... கண்டால்...பரிகசிக்க மாட்டார்களா? நம்மீதுள்ள பக்தியை மதிப்பார்களா? துதிப்பார்களா? இவர்களைப் போன்றவர்களால்தானே நம் பக்தர்கள் நாத்திகர்களாக மாறுகிறார்கள்? நம்மை தொழ மறுக்கிறார்கள்?

தேவி! இரவும் பகலும் இல்லையென்றால் யுகங்கள் தோன்றுமா? பாவ புண்ணியம் இல்லையென்றால் நீதி நிலைக்குமா? ஏன் நீ இல்லையென்றால் நாடு செழிக்குமா? நான் இல்லையென்றால் பூமிபாரம்தான் குறையுமா? மேலும்......

நாட்டில் நாத்திகர்கள் இருப்பதால் தானே நம் பக்தர்கள் ஆலயம் கட்டுகிறார்கள்? ஆறுகால பூசை நடத்துகிறார்கள் விழா எடுக்கிறார்கள் வீதிவலம் வருகிறார்கள், நன்மை தீமையில்தானே நாடே உழல்கிறது. கலைக்குப் பயந்து நிலத்தைக் காம்பாக்குவாரும் உழுவன்? வாழ்க நாத்திகம்! வளர்க நாத்திகர்களின் தொண்டு.

என்ன சுவாமி! பலநாள் துதிக்கும் பக்தனை வாழ்த்தாமல் நாத்திகர்களை வாழ்த்துகிறீர்? அவர்களுக்கு ஒருநாள் இன்பம்! துதிக்கும் நம் பக்தருக்கு பலநாள் இன்பம்!

இலக்குமி! ஐஸ்வரியங்களுக்கெல்லாம் அதிபதி நீ! ஆத்திரப்படலாமா? இப்போதுதானே பூத்திருக்கிறது...காய்த்துக் கனிய வேண்டாமா? பறித்துப் பலனை அனுபவிக்கப் போகிறவர் யாரென்றே புரியவில்லையே!

தூண்டில் கண்ணால் இலக்குமியின் உள்ளத்தை தூண்டில் போட்டுப் பார்த்தார்,

இதில் ஏதோ மர்மமிருக்கிறது. கூற மறுக்கிறீர்! நீரே சுவைத்து மகிழ்கிறீர்!

தேவி! நீயின்றி சுவையில்லை. இந்த விஷ்ணுவின்றி விடிவே இல்லை. என்ன நடைபெறுகிறது கவனிப்போம்...அதோ ஸ்ரீமதி வருகிறாள்.

வா ஸ்ரீமதி...வா!


## தன மூலிகை

வாசக நேயர்களின் சுபிட்சத்துக்காகவும், தரித்திரம், கஷ்டம், துன்பம், நோய், சத்துரு தொல்லையிலிருந்து விடுபட்டு, சர்வ சித்தி, தன சமர்த்தி, நினைத்த காரியத்தில் வெற்றி, அதிருஷ்ட தேவதையின் கிருபையை அடைந்து மேன்மை அடைய மகா அபூர்வ வன மூலிகைகளை சித்தர்கள் வழங்கி அருளாசி புரிகின்றார்.

விபரம் வேண்டுவோர் 40 காசு ஸ்டாம்புடன் தொடர்பு கொள்க. மகா நீல பானு மூலிகைக்கு ரூ 25-00 மணியார்டரில் அனுப்பிப் பெறலாம். ஜோதிஷ சம்பந்தமான எல்லா விஷயங்களுக்கும் தொடர்பு கொள்ளவும்.

பிரபல ஜோதிஷர் காழியூர் ஜி. வாசு தேவாச்சார்யார்.
பிட்றகுண்டா, P. O., P. C. 524 142 A. P.

ஒரே ஓசையில் பர்வதரும் நார தரும் வரவேற்றனர்.

என்ன சுவாமி! உங்கள் முக பாவங்களேமாறியிருக்கிறது! ஏதோ ...ஓர் மயக்கத்திலிருப்பதுபோல் தோன்றுகிறதே!

பலே! கற்றவன் அல்லவா நீ... கன்னிகாமாடத்திலிருந்தே கணித் திருப்பாய். ஆ...ங்...ஸ்ரீமதி...பசித் தவர்கள் சாபபிடுவதில் தவறில் லையே?

நாரதர் மலர்காறு வண்டாய் பார்த்தார்.

ஏன் சுவாமி...என் உபசரிப்பில் குறையேற்பட்டுவிட்டதா? என் தந்தை கேள்விபட்டால்...கோபம் கொள்வார் சாதுக்களுக்கு கோபம் வரும்...கோபம் வந்தால் சாபம் வரும்...சாபம் வந்தால் பல விப ரீதமென்று......

இல்லை...இல்லை ..., எங்களுக்கு... இல்லை...எனக்கு...உன் மீது கோப மில்லை. தா...கம்!

பர்வதர் தாடியைக் கோதிக் கொண்டே அவள் அருகில் வந் தார். ஆவலுடன் பார்த்தார்.

தா...கமா...? இதோ இளநீர் கொண்டு வருகிறேன், இளைப் பாறுங்கள்,

ஸ்ரீமதி வெளியேற முற்பட்டாள்.

நில் ஸ்ரீமதி! வயிற்றுப் பசியல்ல, இது...வாலிபப் பசி! கண்களைப் பார்த்தாலே பெண்களுக்குப் புரிந்து விடுமாமே...என்னைப் பார்...

நாரதர் பஞ்சடைந்தக் கண் களோடு நோக்கிஞர், சிரித்தார்.

என்ன சுவாமி! பசியென்கிறீர்... இப்போது வாலிபப் பசியென்கிறீர். சின்னவள் நான்...சற்று விளக்க மாகக் கூறுங்கள். பொழுது சாயப் போகிறது.

உனக்குத் திருமணம் செய்து கொள்ள ஆசைதானே?

பர்வதர் கேள்வி அவளை தலை குனியவைத்தது அன்று, அவர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் கண் இமைப்பில் பதிலுரைத்தவள் கண்மூடி யோசித்தாள்.

எனக்குத் திருமணமா?...திரு மணம்...சொந்தக்காரர்களால் நிச் சயிக்கப்படுவதாகச் சொல்கிருர் கள்......ஆனால்...

—தொடரும்


உலகப் புகழ் பெற்ற ஸ்ரீகணேஷ்ராம்ஸ் 777 பிராண்ட்
உணவுப பொருள்கள் உங்கள் அருகாமையில் உள்ள
கடைகளில் இப்பொழுது கிடைக்கிறது.

- திடீர் புளியோதரை பேஸ்ட்
- திடீர் வத்தல் குழம்பு பேஸ்ட்
- திடீர் மிளகு ரசம் & தக்காளி ரசம் பேஸ்ட்
- டாம்-எக்ஸ் (TAM-EX) &
- கார்லிக்ஸ் (GARLIX)
- கரகரப்பான, முறுமுறுப்பான அப்பளம் மற்றும் ஊறுகாய்

GANESHRAMS ANALYTICAL LABORATORIES MADRAS 777 (REGD)

ஸ்ரீ கணேஷ்ராம் & கோ.,
சென்னை - 600 001 போன் : 20401 & 20402

# தூர்வாசரின் காதல்

இலக்கியச் சித்தர் தங்கவயல் லோகிதாசன்

ஒரு சமயம்—
தூர்வாச முனிவர்,
கண்ணனைக் காண துவாரகைக்குச்
சென்றிருந்தார்.

மகாக் கோபக்காரரான
தூர்வாசர் வருகிறார் என்றால்—
அத்தனை பேரும் நடுநடுங்கிக்
கொண்டு வரவேற்றனர், கண்ணன்
உள்பட!

ஏனெனில்—
அத்தகைய கோபக்காரர்
தூர்வாசர்.

அதுவும் தவிர—
முனிவர்கள் எப்போதுமே மற்ற
வர்களைச் சாபமிட சாபமிடத்—
தாம் சேமித்து வைத்திருக்கும்
தபோபலம் குறைந்துகொண்டே
போகும்!

ஆனால்—
அத்தகைய முனிவரல்லர் இவர்!
இவர் சாபமிடச் சாபமிட
இவருடைய தபோபலம் கூடிக்
கொண்டே போகும்!

அத்தகைய வரத்தினை—
இவர் பரமேஸ்வரனிடம்
பெற்றிருந்தவர்!

விருந்து—உபச்சாரங்கள்—
தூர்வாசருக்குத் துவாரகையில்
விமரிசையாக நடைபெற்றது!

அந்த நேரத்தில்—
அஷ்டலட்சுமிகளும்,
ஆளுக்கொரு பக்கமாக வந்து—
பகவான் கண்ணனுக்குப்
பணிவிடைகள் செய்வது
தூர்வாசருக்கு கண்கொள்ளாக்
காட்சியாக அமைந்திருந்தது!

முற்றும் துறந்த முனிவரான—
தூர்வாசருக்கே கண்ணன் மீது
பொறாமை ஏற்பட்டுவிட்டது!

நாமோ—
ஒருத்திக்கே வழியில்லாமல்
திண்டாடுகிறோம்
கண்ணனுக்கு மட்டும் எட்டு
பேர்களா?
மாயா சொரூபம்—
அவர் உள்ளத்திலே கிளர்ச்சியை
உண்டுபண்ண ஆரம்பித்து
விட்டன.

கொஞ்சம் கொஞ்சமாக—
தூர்வாசரின் உள்ளத்திலே,
தாமும் திருமணம் செய்துகொள்ள
வேண்டுமென்ற எண்ணம்
வேரூன்றி விட்டது.

நேரே கண்ணனிடம் வந்து—
தன் எண்ணத்தை வெளியிட்டார்.

அதற்கென்ன, தாராளமாக
நீங்கள் திருமணம் செய்து
கொள்ளலாமே!
ஆனால்—
பெண்தான் எங்கிருக்கிறாளோ
தெரியவில்லை.
எதற்கும் நீங்கள்—
தங்கள் பிதாவான
பரமேஸ்வரனிடமே இதற்கு
வழிகேட்பது நல்லது!
என்று கூறி அனுப்பிவைத்தார்
கண்ணன்.

தூர்வாசரோ—
நேரே கயிலைக்குச் சென்று,
தந்தையிடம் தம் விருப்பத்தை
வெளியிட்டார்.

திருமணந்தானே—செய்துகொள்!
ஆனால், உனக்கு யார் பெண்
கொடுப்பார்கள்?

நீயோ கோபக்காரன்!
இங்குதான் யோசிக்க
வேண்டியிருக்கிறது! என்று
இழுத்தார் ஈஸ்வரன்.

அதெல்லாம் எனக்குத் தெரியாது!
தங்கள் பிள்ளைக்குத் திருமணம்
செய்துவைப்பது தாய் தந்தையர்
கடமைதானே! என்று
கூறினார் தூர்வாசர்.

நீ சொல்வது சரியப்பா!
அது நல்ல பிள்ளைகளுக்கு நடக்க
வேண்டியது
நீதான் கோபக்காரனாயிற்றே!
உனக்கு யார் பெண்
கொடுப்பார்கள்? எதற்கும்
இங்கிருந்து மேற்குபக்கமாகப் போ
இதற்கு ஒரு வழி பிறக்கும்!
என்று கூறி தூர்வாசரை அனுப்பி
வைத்தனர்.

தூர்வாசர்—
கோபக்காரராய் இருப்பதற்குக்
காரணமே அவர் சிவபிரானின்
நெற்றிக்கண்ணிலிருந்து
தோன்றியவர் என்பதால்தான்!

இறைவன் சொன்னதை—
மனத்தில் இருத்திக்கொண்டு
சென்றுகொண்டிருந்தார்
தூர்வாசர்.

அப்பக்கமாக தூர்வாசர் வருகிறார்
என்று அறிந்ததுமே—
சர்வ சந்துகளும் நடுநடுங்க
ஆரம்பித்துவிட்டன!

அச்சமயம்—
அவ்வழியே வந்த 'அவுர்வர்'
என்னும் முனிவரின் சீடர்களும்
தூர்வாசரைக் கண்டு நடுங்கினர்.

தூர்வாசர்—
அவர்களைத் தடுத்து நிறுத்தி,
அஞ்சாதீர்! என்று கூறி. அவர்கள்
வந்த செய்தியை வினவினார்

மாமுனிவரே! நாங்கள் 'அவுர்வர்'
என்ற மகரிஷியின் சீடர்கள்.
அவருக்கு 'அவுர்வி' என்று
ஒரு மகள் இருக்கிறாள்.
அவளுக்கு உடனடியாகத்
திருமணம் செய்யவேண்டுமாம்!
அதற்காக எங்களை மாப்பிள்ளை
தேடிவர அனுப்பியுள்ளார்கள்!
என்று கூறினர்.

சரி... சரி... அதைப்பற்றி
நீங்கள் கவலைபடாதீர்கள்!
எங்கே உங்கள் ஆஸ்ரமம்?
அங்கே என்னை அழைத்துச்
செல்லுங்கள்! என்று கூறி
சீடர்களின் பின்னால் சென்றார்
தூர்வாசர்.


## உங்களுக்கு தேவை

வியாபார அபிவிருத்திக்கு குபேர தன ஆகர்ஷணம் நகை வியாபாரிகட்கு ஸ்வர்ண கர்ஷண பைரவர், சித்தபிரமைக்கு உன்மத்த பைரவர், ஆபிசாரம் அகல ப்ரத்யங்கிராஸ்திரம், சத்ரு பாதைக்கு அகோராஸ்திரம், இழந்த பொருளோ பதவியோ திரும்பப்பெற கார்த்த வீர்யம், கல்வியில் மேன்மைக்கு மனோன்மணி, விவாஹத் தடை நீங்க ஸ்வயம்வரா பார்வதி, காத்யாயனி, மற்றும் பலவகை ஹோமங்கள், கேரள மாந்த்ரீக உபாஸனா க்ரமத்தில் செய்து ரக்ஷை அல்லது யந்த்ரம் பெற கீழ்க்கண்ட முகவரிக்கு 75 பைசா தபால் தலை இணைத்து எழுதவும்.

ஸ்கந்த மேருவும் விசேஷ ஆர்டரின் பேரில் செய்து தரப்படும்
பகவான் கிருஷ்ணர், ராமர் ஜாதகங்கள் இலவசமாய் பெற 45 பைசா தபால் தலை இணைத்து எழுதவும்.

முகவரி :— மாந்த்ரசாஸ்த்ர ரஹஸ்யக்ஞ, ஜயோதிஷ கல்பதரு
ஸ்ரீ குருவாயூரப்பதாஸன் - B. சுந்தரராமன், M.A., B.Ed.,
பழமார்னேரி P.O., வழி - திருக்காட்டுப்பள்ளி-613104.
தஞ்சை மாவட்டம்

துர்வாசர் வருவதைக் கண்ட
அவுர்வர், பயந்து நடுங்கி,
முனிவரை வரவேற்றார்.
துர்வாசரும் தான் வந்த விபரத்தை
எடுத்துரைத்து,
தங்கள் மகள் அவுர்வியை நான்
மணந்துகொள்ளுகிறேன்!
அதைப்பற்றித் தாங்கள் கவலை
கொள்ளாதீர்கள்!
என்று உறுதிமொழி கூறினார்.

ஆனால் அவுர்வர்
லேசில் சம்மதிக்கவில்லை.

காரணம்—
தன்னுடைய பெண்ணான அவுர்வி
ஒரு விசித்திர பிறவி!
தாம் எதைச் சொன்னாலும்
செய்தாலும், அதற்கு
நேர்விரோதமாகச் செய்வாள்,
பேசுவாள்!

சொல்வதைக் கேட்கும் குணமே
சற்றுமில்லை அவளிடம்.
தன் மகளின் இந்த குணநல
விசேஷங்களை
துர்வாசருக்கு அவுர்வர்
எடுத்துக் கூறினார்.

என்றாலும்—
துர்வாசர், எல்லாம் நான் பார்த்து
கொள்கிறேன்! என்று கூறி
திருமணத்தை முடித்துக்
கொண்டார்.

திருமணமாகித்—
தன் இருப்பிடம் வந்த
துர்வாசருக்கும் அவுர்விக்கும்
ஒவ்வொரு நாளும்
ஏதாவதொரு தகராறுகள்
ஏற்பட்டுக்கொண்டே யிருந்து
வந்தது

அவர்கள் ஒருநாள்கூட
மனமொத்து வாழ்ந்தாரில்லை!
ஒருமாதம் ஓடிவிட்டது!

ஒருநாள்—
சில முனிவர்கள் துர்வாசரின்
ஆஸ்ரமத்திற்கு
அதிதிகளாய் வந்துவிட்டனர்.

வீடுதேடி வந்தோரை
உபசரிக்க வேண்டாமா?
தன் மனைவியை நாடி—
விருந்துக்கு ஏற்பாடு செய்ய
வேண்டினார்.

அவளோ—
மருந்துக்கும் பொருளில்லை!
இந்நிலையில் விருந்தெங்கே?
அதுவும் தவிர
வருகிறவர்களுக்கெல்லாம் வடித்து
கொட்டிக்கொண்டிருக்க
என்னால் முடியாது! என்று
முகத்தில் அறைந்தாற்போல்
பதில் கூறிவிட்டாள்.

இதனால்—
ஆத்திரத்தின் உச்சிக்கே சென்று
விட்ட துர்வாசர்—

அவளைச்—
சாம்பலாய்ப்போக சபித்துவிட்டார்!

அந்தச் சாம்பலை எடுத்துப்—
பள்ளம் தோண்டிப் பயிராக்கி
பலவிதமான வாழைமரங்களை
உண்டாக்கினார்!

இச்சம்பவங்களைக் கேள்விப்பட்ட
மும்மூர்த்திகளும், இந்திராதி
தேவர்களும்
திரண்டு வந்தனர்.

அப்போது துர்வாசர்—
ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு
விதமான வாழைப்பழங்களை
வழங்கினார்.

பேயாண்டி சிவனுக்குப்—
பேயன் பழத்தையும்,
முகுந்தனுக்கு மோந்தன்
பழத்தையும்,
இந்திரனுக்கு ரஸ்தாளிபழத்தையும்
கற்பூரமேற்றி வணங்கும்
தேவர்களுக்கு கற்பூரப்பழத்தையும்
கொடுத்தார்.
அனைவரும் பழங்களை உண்டு
மகிழ்வோடு சென்றனர்.

துர்வாசரின் காதலும்
சாம்பலாயிற்று.

# வெற்றி மயக்கம்

T. T. வரதராஜன், B.A., B.Com.

குருக்ஷேத்ர யுத்த பூமி!

பாண்டவ சேனைகள் ஒரு புறமும் கௌரவ சேனைகள் மறுபுறமும் அணி வகுத்து நிற்கின்றன.

வெள்ளைக் குதிரைகள் பூட்டிய தேரில் அர்ச்சுனன் அமர்ந்திருக்க, தேரை ஓட்டும் சாரதியாக அமர்ந்திருக்கிறார் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா.

இரு பக்கத்துப் படைகளையும் பார்க்கும் அர்ச்சுனன், எதிர்ப்படைகளில் இருக்கும் அனைவருமே தமக்கு பந்துக்களாக இருப்பதைக் காண்கிறான். அவன் மனம் கலங்குகியது. அவர்களைக்கொல்ல உடல் கூசியது.

கண்ணா! எனக்கு யுத்தம் வேண்டாம்; ராஜ்யம் வேண்டாம்; போகங்கள் வேண்டாம் என்று பலவாறு கதறினான் கையிலிருக்கும் காண்டீபம் நழுவுகிறது. உடலெல்லாம எரிகிறது. மனம் குழம்புவது போலிருக்கிறது. நான் போர் செய்ய மாட்டேன் மாதவா என்று மௌனமானான்.

உடனே பகவான் அர்ச்சுனனுக்கு ஆத்ம ஞானத்தைப் போதிக்க ஆரம்பித்தார் ஸாங்க்ய யோகம், கர்ம யோகம், ஞான யோகம் எனப் பலவித நியாயங்களை எடுத்துரைத்தார். குந்தி மகன் ஞானம் பெற்றான். அவன் மனம் தெளிவுற்றது.

சமர் துவங்கியது. வெற்றி விஜயனுக்கே. அவ்வெற்றி வாகை அவனுடைய காரணமாக இருந்தவர் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா.

இப்போது மீண்டும் அர்ச்சுனன் மனதில் லோகமாயை புகுந்து கொண்டாள். அக்ஞானம் சூழ்ந்து கொண்டது அவனை தாம் போரில் வெற்றி பெற்று விட்டோம் என்ற அகந்தை அவன் பார்வையிலேயே தென்பட்டது ரதத்தில கம்பீரமாக அர்ச்சுனன் வீற்றிருக்க சாரத்யம் செய்து கொண்டு வருகிறார். ஸ்ரீ கிருஷ்ணன் படைக்களத்தை விட்டு புறப்பட்டு நகரை நெருங்கி ரதம் வந்து கொண்டிருந்தது இருபுறமும் மக்களின் ஆரவாரம் கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. இது கண்ட அர்ச்சுனன் மேலும் பெருமையுற்றான். சாந்தமான புன்னகையுடன் ஸ்ரீ கிருஷ்ணர் ரதத்தை ஓட்டி வந்தார்.

ஆயிற்று இறங்க வேண்டிய இடம வந்தது சாரதியாகிய ஸ்ரீ கிருஷ்ணன் இறங்கி வந்து தம்மைப் பணிவுடன் இறங்குமாறு வேண்டி நிற்பான் என்று எதிர்பார்த்துப்பெருமிதத்துடன் அமர்ந்திருந்தான் விஜயன்

ஆனால்விஷயமோ வேறுவிதமாக இருந்தது. சாரதி கண்ணன் திரும்பினார். அர்ச்சுனா! தேரை விட்டு இறங்கு! என்றார்.

அர்ச்சுனன் வியந்து போனான் கண்ணா! சாரதியாக நீ முதலில் இறங்கி வந்து என்னை இறங்கி வருமாறுபணித்தல் தானே முறை? அப்படியிருக்க என்னைத் தேரைவிட்டு இறங்குமாறு நீ பணித்தல் எங்ஙனம் தகும்? என்று சினந்து வினவினான்

ஸாங்க்ய யோகம், கர்மயோகம், ஞானயோகம் என்ற பலவித நியாயங்களைப் பற்றி அறிந்து கொண்டு ஞானம் பெற்ற அதே அர்ச்சுனன் கண நேரத்தில் அக்ஞானியாகி

தேருமார்புடன் பேசுவதைக் கண்ட கண்ணன் கலகலவென முத்துக் குறுநகை புரிந்தார். அர்ச்சுனா, நான் சொல்வதைச் செய், தேரை விட்டு இறங்கு' என்று மீண்டும் கட்டளையிட்டார். வேறு வழியின்றி இறங்கினான் அர்ச்சுனன். சாரதி இருக்கையில் அமர்ந்திருக்க வில் வேந்தன் விஜயன் ரதத்தை விட்டிறங்கி சற்று தள்ளி நிற்பதைக் கண்டார் கண்ணன்.

இப்போது கண்ணன் ரதத்தில் பூட்டியிருந்த குதிரைகளை அவிழ்த்து விட்டார். தன் இருக்கையிலிருந்து கீழே குதித்தார்; கண் இமைக்கும் நேரந்தான். தேர் குபீரெனப் பற்றி எரிந்து பஸ்பமாகியது.

துணுக்குற்று நின்றான் விஜயன். கண்ணா! என்ன இது? என்று ஆச்சர்யத்துடன் அவசரமாகக் கேட்டான்.

கண்ணன் கூறினார். அர்ச்சுனா! நீ முன்பு என்னைக் கேட்ட கேள்விகள் எல்லாம் நியாயமானவையே. ஆனால் அதே சமயம் உன் தேரைச் சுற்றிலும் உனது பகைவர்கள் எறிந்த வில்லும், விஷந்தோய்ந்த அம்புகளும், எரியூட்டும் மருந்து குண்டுகளும் துளையிட்டுப்பொதுக் கொண்டு நிற்பதை நீ அறியவில்லை. நான் அமர்ந்திருந்ததனால் அவை அப்போதே பற்றி எரியவில்லை. உனக்கு முன்பு நான் தேரை விட்டு இறங்கியிருந்தால் இந்நேரம் நீ பஸ்பமாகியிருப்பாய்? விஜயனே, நான் செய்வது யாவும் மாயம் போல் நீயும் ஏனையோரும் உணர்ந்தாலும், அவை யாவும் உன் தன்மைக்கே என்பதை உணர்வாயாக.

வெட்கித் தலைகுனிந்தான் பார்த்தன். சாரதியாகிய பரந்தாமனின் பாதாரவிந்தங்களில் வீழ்ந்து பற்றிச் சரணடைந்தான்

---

நான பிறந்த இடம் சினிமா உலகம் என்பது தவறு. நான பிறந்தது அரசியலிலதான். தவழ்ந்தது பெரியார் மடியில். அண்ணாவின கைபிடித்து நடந்தேன். இடையில வளர்ந்ததுதான் சினிமா. —மு. கருணாநிதி.

---



# விஞ்ஞானிகளே! யுத்தம் தேவையா?

(டாக்டர் பக்தவத்சலா!)

நிலவு மேகத்துள் நீந்தி மறைந்தது
நினைவோ நெஞ்சத்துள் நீங்காது சுழலுது
உலவி குலவி உறவினை வளர்த்தவள்
உடல் துடித்து உயிரினையிழந்தாள்

குலக் கொழுந்துகள் குழந்தைச் செல்வங்கள்
குடும்பம் சுற்றம் நண்பர் அனைவரும்
அலறி துடித்து ஆவி இழந்தனர்
அணு குண்டினை பாவிகள் வெடித்ததால்

விஞ்ஞான யுத்தம் வெடித்து - மூண்டால்
விளைவு மிகவும் பயங்கரமாகும்
அஞ்ஞானம் கொடிது அழிவின் வித்தினை
அறவே ஒழித்து அழிப்பதே தர்மம்

கதிரின் இயக்கம், காற்றினில் பரவி
கலங்க வைத்திடும் கதையினை முடித்திடும்
அதிசயங்களை அனுதினம் புரியும்
ஆற்றிவாளரை அழித்து ஒழித்திடும்

மனிதரினமும் மண்வாழ் இனமும்
மண்ணில் மக்கி மறைந்தே போய் விடும்
இனியொரு உலகம் இது போல் இயங்கிட
இறைவனே பிறக்கிலும் அவனாலும் முடியா

மண்ணும் பொன்னும் மானிடப் பெண்ணும்
மனதைக் கிளரும் அரிய சுகங்கள்
விண்ணிலும் கிட்டா விலையுயர் இவைகளை
விஞ்ஞானிகளே நீர் அழித்திட வேண்டாம்!

நடராஜா அச்சகத்தில் அச்சிட்டு, வெளியிடுபவர், ஆசிரியர் : கே. [illegible]கிருஷ்ணன்,
அலுவலகம்: நெ. 78, டாக்டர் பெஸன்ட்சாலை, சென்னை-14, தமிழ்நாடு. போன்: 84643[illegible]

Phone : 21219
31349

# AGARWAL BHAVAN

FOR

## QUALITY SWEETS & SAVOURIES

- MILK SWEETS
- BENGALI SWEETS
- GHEE SWEETS

&

## HIGHLY TASTED SAVOURIES

*

128, Govindappa Naickan Street,

MADRAS - 600 001.


GUNDOOSI
Regd. No. M 8990
திருமண பட்டு
ஜவுளிகளுக்கு
கைராசியான
ஸ்தாபனம்
ஸ்ரீ ராஜேஸ்வரி
ஹால்
59,கடை